# தமிழரசு

செப்டம்பர் 2004





# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2035
ஆவணி – புரட்டாசி
மலர் : 36 இதழ் : 3
செப்டம்பர் 2004
விலை ரூ.10


**அட்டைப்பட விளக்கம்**

*முதலாம் பக்க அட்டை* : மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சந்திப்பு (புதுடெல்லி – 16.9.2004)

*இரண்டாம் பக்க அட்டை* : மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் புதுடெல்லியில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள கூடுதல் விருந்தினர் இல்லத்தை 16.9.2004 அன்று திறந்து வைத்தார்கள்.

*மூன்றாம் பக்க அட்டை* : தந்தை பெரியார் பிறந்த நாள் விழா

*நான்காம் பக்க அட்டை* : பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

## இந்த இதழில்...


- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி — 2
- ஆசிரியர் தினவிழா — 3
- ஊட்டச்சத்து நிலையில் உயர்ந்து வரும் தமிழகம் — 5
- தமிழக அனல் மின் நிலையங்களுக்கு மத்திய அரசின் தங்கக் கேடயம் — 9
- உலக தென்னை தினத்தையொட்டி இரண்டு சிறப்புத் திட்டங்கள் — 10
- வ.உ. சிதம்பரனார் பிறந்த நாள் விழா — 12
- தீரன் சின்னமலை விழா — 14
- கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் – கீரப்பாளையத்தில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் உரை — 17
- 3 திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நன்கொடை — 21
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் பல்துறைப் பணி விளக்க முகாம் — 22
- தமிழ்நாடு வனத்துறைக்கு அகில இந்திய அளவில் விருது — 24
- உயராய்வில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் — 25
- மும்பை மாணவ, மாணவியருக்கு இலவச தமிழ்ப்பாட நூல்கள் — 29
- கடலூர் சுற்றுலா கோடை விழா — 30
- செக்கிழுத்த செம்மல் — 33
- நாகை மாவட்டத்தில் சம்பா முனைப்பு இயக்கம் — 36
- தமிழக அனல் மின்நிலையங்களில் மின் உற்பத்தி பாதிக்கப்படா வண்ணம் தேவையான நிலக்கரி வழங்கப்பட வேண்டும் — 37
- இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் — 41
- காவல்துறை அலுவலர்களுக்கு ரொக்கப் பரிசு — 43
- கண் தானம் — 45
- முந்து தமிழ்க் கல்வெட்டுகள் — 47
- கவுரவிப்பு (சிறுகதை) — 49
- தந்தை பெரியார் பொன்மொழிகள் — 57
- பேரறிஞர் அண்ணா அறிவுரைகள் — 58
- தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் ஆடிப்பெருக்கு விழா — 59
- தேனியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் உலகத் தரம் வாய்ந்த மாவட்ட விளையாட்டு அரங்கம் — 62
- இதய நோய்கள் (மருத்துவம்) — 65
- விருதுநகர் மாவட்டத்தில் அனைவருக்கும் கல்வி இயக்கம் — 69
- தமிழக தடகள வீரருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ரூ.1 இலட்சம் நிதி உதவி — 72
- கரூர் மாவட்டத்தில் மகளிர் சுகாதார வளாகங்கள் — 73
- திண்டுக்கல் மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் நடைபெற்று வரும் பணிகள் — 78
- மாணவர் பக்கம் — 80



*ஆசிரியரும் வெளியிடுபவரும்* : **வ. கனகராஜ்,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.


தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

# ஆசிரியர் பணி சிறக்கட்டும், அறிவோங்கித் தமிழகம் உயரட்டும்



**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**
**ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி**

அறிவுலகம் படைக்கும் ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் என் அகம் கனிந்த ஆசிரியர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

கல்வியைக் கண் என்றும், அதைப் பெற்றவரைக் கண்ணுடையர் என்றும் வள்ளுவர் பெருமான் கூறுகிறார். அத்தகைய கல்விக் கண்ணை அளிப்பவரை, உச்சிமேல் வைத்துப் போற்றுவது நமது மரபு. அந்த மரபின் அடிப்படையில், மகத்தான மனிதவள மேம்பாட்டுப் பணியாம் கல்விப் பணியில் சிறந்து நிற்கும் ஆசிரியப் பெருமக்களுக்கு ஆண்டுதோறும் உரிய விருது அளித்து நாம் உவகை கொள்கிறோம்.



செப்டம்பர் 5–ஆம் நாள் ஆசிரியர் தினம். நமது தாயகத்தின் தத்துவச் சிறப்பைத் தரணிக்கு உணர்த்திய தத்துவஞானி சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் பிறந்த திருநாள் அது. கல்லூரிப் பேராசிரியராக மட்டும் அல்லாமல், மானுடத்தின் பேராசிரியராகவும் விளங்கிய அந்த மாமனிதரின் பிறந்தநாளே ஆசிரியர் தினமாக நாடெங்கும் கொண்டாடப்படுகிறது.

இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவராக விளங்கிய பேராசிரியர் டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்தநாள் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுவதும், அவரது பெயரால் நல்லாசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்படுவதும் மிகப் பொருத்தமானது. அந்த வகையில் இக்கல்வியாண்டில் நல்லாசிரியர் விருது பெறும் அனைத்துப் பெருமக்களையும் நான் வாழ்த்துகிறேன்.

'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்னும் மகாகவி பாரதியாரின் கூற்றைத் தமிழக அரசு மெய்யாக்கி வருகிறது. அனைவருக்கும் கல்வி அளிப்பதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது என்பது பெருமைக்குரியது.

எனது அரசு பள்ளிக் கல்விக்கு முன்னுரிமை அளித்து வருகிறது. 2004–2005ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 4,203 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். எனது அரசு பொறுப்பேற்ற பிறகு, 22,178 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மேலும், 22,817 ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்பவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

தங்களிடம் ஒப்படைக்கப்படும் மாணவச் செல்வங்களை, தேசத்தின் விலைமதிப்பில்லாச் செல்வங்களாக உருவாக்கித் தர வேண்டிய பொறுப்பு ஆசிரியப் பெருமக்களுக்கு உள்ளது. தேசத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் இந்தத் திருப்பணியில், கடமை உணர்வும், கல்வித் திறனும் உள்ள நமது ஆசிரியப் பெருமக்கள் முத்திரை பதிக்க எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து ஆசிரியப் பெருமக்களுக்கும், மீண்டும், எனது உளமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

*ஆசிரியர் பணி சிறக்கட்டும்!*
*அறிவோங்கித் தமிழகம் உயரட்டும்!*

❖ ❖ ❖

# ஆசிரியர் தின விழா

பாரதத் திருநாட்டின் முன்னாள் குடியரசுத்தலைவர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்தநாள் விழா, 5.9.2004 அன்று, தமிழக அரசின் சார்பில் ஆசிரியர் தினவிழாவாகக் கொண்டாடப்பட்டது.

சென்னை கலைவாணர் அரங்கில் நிகழ்ந்த இந்த விழாவில் 354 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருதான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கப்பட்டது.

5.9.2004 பிற்பகல் 4.00 மணிக்கு மங்கல இசையுடன் தொடங்கிய இவ்விழாவுக்கு, கல்வித்துறைச் செயலர் திரு. கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., தலைமையேற்றார். மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சர் திரு. சி.வி.சண்முகம் ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு கல்வியமைச்சர் தம் சிறப்புரையில், "நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் உயர்சக்தியாக விளங்குபவர்கள் ஆசிரியர்களே, நம் நாட்டிலுள்ள ஆசிரியர்கள் யாவரும் நல்லாசிரியர்களே. அவர்கள் யாவருடைய பிரதிநிதிகளாக இந்த 354 ஆசிரியர்களும் நல்லாசிரியர் விருது பெறுகிறார்கள் எனக்கூறி ஆசிரியர்களுக்கு வாழ்த்து வழங்கினார். மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய நல்லாட்சியில், தமிழகக் கல்வித் துறையில் ஒரு மவுனப்புரட்சி நடந்து வருகிறது. கல்வித்துறையோடு தாம் வகித்து வரும் வணிகவரித்துறை மூலமாகக் கிடைக்கும் 12 ஆயிரம் கோடி ரூபாய் வருமானத்தில் 5 ஆயிரம் கோடி ரூபாய் கல்வித்துறைக்குப் பயன்படுத்தப் படுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில், கல்வித் துறைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை இதுகாட்டுகிறது என்றும் எடுத்துக்காட்டினார். அனைவருக்கும் ஆரம்ப கல்வி இயக்கத்தின் மூலம் தமிழகக் கல்வி செழித்து வருகின்றது. நமது தமிழக மாணவர்கள், உலக அளவில் போட்டியிட ஆங்கில மொழி அறிவும் திறமையும் மிகவும் தேவை என்பதை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பிரிட்டனிலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்கள். இதன்படி, நம் மாநிலத்தில் உள்ள 225 பொறியியல் கல்லூரி மாணவர் களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது. இதுபோன்ற தமிழகக்கல்வி வளர்ச்சி தொடர்பான தமிழக அரசுப்பணிகளை ஆசிரியர்கள் பொதுமக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

மேலும் "இதுபோன்ற எத்தனையோ சிறந்த கல்விச்செயல்பாடுகள் இருக்கும்பொழுது, எங்காவது ஒரு அசம்பாவிதம் நடந்தால் அதைச் சிலர் பெரிதுப்படுத்துகிறார்கள். கல்விக்கூடங்களில்கூட பீதிகளைக் கிளப்பும் பணியைச் சிலர் செய்து வருகிறார்கள். இவ்வாறு பீதி கிளப்புவோர் பள்ளிக் குழந்தைகளின் வாழ்க்கையோடு விளையாடுகிறார்கள் என்பதுதான் அர்த்தம். அது மிகவும் கண்டிக்கத் தக்கது'' என்றும் கூறினார்.

விழாவுக்குத் தலைமையேற்ற கல்வித்துறைச் செயலர் திரு. கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., தம் தலைமையுரையில், அனைத்து ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் தின வாழ்த்துகளைத் தெரிவித்ததோடு, தமிழகக் கல்வித் துறையின் சிறப்புகள் பலவற்றை எடுத்துரைத்தார்.



10 மற்றும் 12 ஆவது வகுப்புகளில் அரசுத்தேர்வு முடித்து வெளிவரும் மாணவர் எண்ணிக்கை பிற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில்தான் அதிகம் என்றார். மேலும், தமிழக இளைஞர்கள் உலகத்தின் பல பகுதிகளில் சென்று பணியாற்றி வருகின்றனர். தமிழக மாணாக்கர்களின் தரத்தை மேம்படுத்த கலைத்திட்டம் பாடத் திட்டமும் பாடநூல்களும் உலகத் தரத்துக்கு இணையாக மாற்றியமைக்கப் பட்டு வருகின்றன என்றும், 8ஆம் வகுப்பு வரையிலான ஆசிரியர்களுக்கு ஆண்டு தோறும் 20 நாள்கள் பணியிடைப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சிகளின் போது, தீ விபத்துத் தடுப்பு பயிற்சியும் அளிக்கப்படும் என்றார். இதன் மூலம் 2 இலட்சம் ஆசிரியர்கள் பயனடைகிறார்கள் என்றும் கூறினார்.



நடப்பு ஆண்டில் , தமிழக அரசு கல்வித்துறைக்கு 4,800 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இதில் 4,200 கோடி பள்ளிக் கல்விக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இது மொத்த பட்ஜெட்டில் 20 சதவிகிதமாகும் என்றார். மேலும் தமிழ்நாட்டில் ஒரு கி.மீட்டர் தொலைவில் தொடக்கப் பள்ளியும் 3 கி.மீட்டர் தொலைவுக்குள் நடுநிலைப் பள்ளிகளும் அமைக்கப்பட்டுள்ளன என்று பெருமையுடன் குறிப்பிட்டார். 364 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தத் திட்டமிடப்பட்டிருந்தது. அது குறித்து ஆய்வு செய்த மத்தியக்குழு, மாணவர்களின் வசிப்பிடங்களுக்கும் பள்ளிகளுக்கும் இடையிலான தொலைவு பெருமளவு குறைக்கப்பட்டிருப்பதைப் பாராட்டி 1,031 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக உயர்த்த அனுமதி வழங்கியுள்ளது என்றும் கூறினார்.

மேலும், அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் சிறப்பானச் செயல்பாடுகள் மூலம், பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்துவோர் தொகை 4.5 இலட்சத்திலிருந்து 2.5 இலட்சமாகக் குறைந்துள்ளது என்றும் மேலும் அது குறையக்கூடும் என்றும் கூறினரா்.

வாழ்த்துரை வழங்கிய கல்வித்துறைச் சிறப்புச் செயலர் திரு. அ.பன்னீர்செல்வம், இ.ஆ.ப., தம் உரையில், தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு வரை 45 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அடுத்த மூன்றாண்டுகளில் 50 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். இந்தியாவில் உத்திரப் பிரதேசத்தில் 23 இலட்சம் பேர் எழுத்தறிவு பெறாதவர்கள், தமிழ்நாட்டில் 4 இலட்சம் பேர்தான். அனைவருக்கும் ஆரம்பக்கல்வித் திட்டத்தின் மூலம் மேலும் அது குறையும் வாய்ப்புள்ளது என்றும் கூறினார்.

பள்ளிக்கல்வி இயக்குநர் திரு.சு.பரமசிவன் வரவேற்புரையாற்றினார். அவர் தம் வரவேற்புரையில், டாக்டர் இராதாகிருஷ்ணனின் ஆசிரியப்பணி, கல்விக்குழுத் தலைவராக இருந்து ஆற்றியபணி, இந்தியத் தத்துவங்களை உலகறியச் செய்த பெரும்பணி ஆகியவற்றை நினைவு கூர்ந்து தமிழ்நாட்டு ஆசிரியர்களின் சிறப்புகளையும் எடுத்துரைத்தார்.

அனைவருக்கும் ஆரம்பக்கல்வி இயக்கத்தின் இயக்குநர் திரு. டி.கே.இராமச்சந்திரன், இ.ஆ.ப., மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்குநர் திரு. ரெ.நாராயணசாமி, தேர்வுத்துறை இயக்குநர் திரு.தெ. ஜெகந்நாதன், பள்ளி சாராக் கல்வி இயக்குநர் திருமதி. சீ.லட்சுமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். சென்னை மாவட்ட ஆட்சியர் திரு. வெ.கண்ணுச்சாமி, இ.ஆ.ப., அவர்கள் ஆசிரியர்களுக்கு வாழ்த்துரை வழங்கிப் பேசியதோடு, ஆசிரியர் தேசிய நல நிதியாகத் திரட்டப்பட்ட ரூ.6 இலட்சத்தை மாண்புமிகு கல்வியமைச்சரிடம் வழங்கினார்.

விழா நிறைவில் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் முனைவர் கா.மாரியப்பன் நன்றியுரையாற்றினார்.

விழா ஏற்பாடுகளை, சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திரு. தர்ம. இராசேந்திரன் சிறப்பாகச் செய்திருந்தார். □

# ஊட்டச்சத்து நிலையில் உயர்ந்து வரும் தமிழகம்

**தா**ய் சேய் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட தமிழக அரசு பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. அவற்றில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் முக்கியமானதாகும். குழந்தைகள், வளரிளம் பெண்கள், தாய்மார்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து, சுகாதார நிலையை உயர்த்துவதே திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

**தேசிய ஊட்டச்சத்து வார விழா :**

'தேசிய ஊட்டச்சத்து வாரம்' ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் முதல் வாரம் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டு 23ஆவது தேசிய ஊட்டச்சத்து வாரம் சென்னை கலைவாணர் அரங்கில் 9.9.2004 அன்று வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. விஜயலட்சுமி பழனிச்சாமி அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள் விழாப் பேருரை ஆற்றினார். ஒவ்வொரு ஆண்டும் ஒரு மையக் கருத்தை வலியுறுத்தும் வகையில் ஒரு வாசகம் வெளியிடப்படுகிறது.



இவ்வாண்டு வெளியிடப்பட்ட முக்கியக் கருத்தாவது 'Malnutrition - A Silent Emergency' – 'ஊட்டச் சத்துக் குறைபாடு ஒரு மறைமுக நெருக்கடி' – அதாவது ஊட்டச்சத்துக் குறைபாடு வெளிப்படையாய் உடனே தெரியாமல் பெண்கள், குழந்தைகள், வளரிளம் பெண்கள் ஆகியோரின் ஆரோக்கிய நிலைக்கு சவாலாக இருந்து வருகிறது. இதனால் பல நிலையில் வளர்ச்சிக் குறைபாடும், நலக் குறைபாடும் உண்டாகின்றன. ஆகவே இந்த ஊட்டச்சத்துக் குறைபாட்டை உடனடியாகத் தீர்க்க வேண்டும். எனவேதான் இந்த மறைமுக குறைபாட்டை தீர்க்க ஆண்டுதோறும் ஊட்டச்சத்து வாரம் அனுசரிக்கப்பட்டு, மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு நல்வாழ்வுக்கு வழிவகை செய்யப்படுகிறது. பல்வேறு தகவல் தொடர்புப் பணிகள் மூலம் மக்களின் அறிவாற்றலைப் பெருக்கி ஊட்டச்சத்துப் பழக்க வழக்கங்களில் நல்ல மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன.

"தமிழகத்தை ஊட்டச்சத்துக் குறைபாடில்லா மாநிலமாக மாற்றுவோம்" – என்பது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையாகும். அதனை நிறைவேற்றும் வகையில் குழந்தைகள் பெண்கள் நலத்தை மேம்படுத்த ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் பல பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே தொடங்கிய இவ்விழாவில், உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் இணை ஒருங்கிணைப்பாளர் டாக்டர். சு. முத்தையா வரவேற்புரையாற்றினார்.

– **திரு. எஸ். சந்திரமோகன்**, இ.ஆ.ப.,
சமூக நல இயக்குநர், திட்ட ஒருங்கிணைப்பாளர்
உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை
வளர்ச்சித் திட்டம், தரமணி, சென்னை.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் தமது உரையில், "தாய் சேய் நலம் மேம்பட பல திட்டங்களைத் தீட்டி அல்லும் பகலும் அரும்பணி ஆற்றி வருகிறது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அரசு. மகளிரின் ஒட்டு மொத்த மேம்பாடு மகளிர் சுயஉதவிக் குழுக்களின் செயல்பாட்டில் உயர்கிறது.

இந்த 23ஆவது தேசிய ஊட்டச்சத்து வார விழாவில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. நேர்த்தியாகவும் உள்ளது. சுகாதாரத்துறை மற்றும் பிற துறைகளின் நலப் பணிகள் மக்களைச் சென்றடைய வேண்டும். அதற்கு ஒன்றிணைந்த செயல்பாடுகள் வேண்டும். யாவரும் ஒன்று பட்டு உழைக்க வேண்டும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையான,

> **"தமிழகத்தை ஊட்டச்சத்து குறைபாடில்லா மாநிலமாக மாற்றுவோம்''**

– என்ற வைர வரிகளுக்கு ஏற்ப யாவரும் இணைந்து செயல்படுவோம். இந்த அருமையான விழாவில் நல்ல தகவல்களை நீங்கள் அறிந்து கொண்டிருப்பீர்கள். இதனை மற்றவர்களிடமும் கூறி விழிப்புணர்வடையச் செய்து நல்வாழ்வு வாழச் செய்ய வேண்டும். மகளிர் மாண்புடன் வாழ வேண்டும்.

> "நம் மாநிலத்தில் ஊட்டச்சத்து நிலையை உயர்த்துவோம். உயர்வடைவோம்.''

– என்ற உறுதியுடன் தமது உரையை நிறைவு செய்தார்.

**ஊட்டச்சத்தும், சுகாதாரமும்**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தம் உரையில், "அயோடின் கலந்த உப்பை நேரில் கொண்டு வந்து விளம்பரப்படுத்தி மக்களின் கவனத்தை ஈர்த்த யூனிசெஃப் நிறுவன பிரதிநிதி திரு.டிப் ஷாப்டர் அவர்களை பாராட்டுகிறேன்.

சுகாதாரத்துறையின் மூலம் எந்தெந்த வகையில் மக்களுக்கு நலப்பணிகளை ஆற்ற இயலுமோ அந்தந்த வகையில் மக்கள் சுகாதார முறையில் நலமுடன் வாழ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அரசு பணியாற்றி வருகிறது. அதன் வெளிப்பாடாகவே இன்று தமிழகத்தில் ஊட்டச்சத்து நிலை உயர்ந்துள்ளது.

குழந்தைகளுக்குக் கண் நோய் வராமல் தடுக்க மருத்துவமனையில் தனிப்பிரிவு, ஆண்டுக்கு 50 நபர்களுக்கு பேஸ் மேக்கர் எனும் இதயத்தை இயக்கும் கருவி, இலவசமாக இதய அறுவை சிகிச்சை என பல நலப்பணிகள் தமிழகமெங்கும் நடந்தேறி வருகின்றன.

மகாராஷ்டிர மாநிலத்தில் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் மெலிந்த நோஞ்சான் குழந்தையைப் படம் பிடித்து பத்திரிகையில் செய்தி வந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அரசு தாய் சேய் நலத்தில் அதிக அக்கறை கொண்டு செயல்பட்டு வருகிறது.

எல்லா மாநிலத்தையும் விட நம் தமிழகம் ஊட்டச்சத்து, சுகாதாரத்தில் உரிய இடத்தை அடைந்துள்ளது. அதே போன்று, சமூக நலத்துறை எடுத்துக்காட்டாக விளங்குகிறது'' என்று கூறினார்.

**திட்டம் தொடர்ந்து நலப்பணிகளாற்ற . . .**

உலக வங்கி ஆலோசகர் திரு. ப. சுப்ரமணியம் அளித்த இனிப்பான செய்தியாவது, தமிழகத்தில் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3ஆவது திட்டம் இம் மாதம் செப்டம்பர் 2004இல் நிறைவடையும் தருணம். ஆனால் தமிழகத்தில் குழந்தை வளர்ச்சிப் பணிகள், தாய் சேய் நல மேம்பாடு சிறப்பாக நடைபெறுவதைக் கருத்தில் கொண்டு 18 மாதங்கள் நீட்டிப்பு செய்த தகவலை மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். இச்செய்தி விழாவிற்கு மேலும் சிறப்பை சேர்த்தது.

அவர் சிறப்புரையில் கூறியதாவது: "தமிழ்நாட்டில் சமூக நலத்துறையும், சுகாதாரத் துறையும் இணைந்து



மக்களுக்கு ஆற்ற வேண்டிய நலப் பணிகளைக் குறைவின்றி ஆற்றுவதால் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை வெகு குறைவு. அதாவது 0.1 சதவிகிதம். அதே நேரம், மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தை 36 சதவிகிதம். இந்த நிலையும் குறைந்து ஊட்டச்சத்துக் குறைபாடே இல்லாத நிலை உருவாக வேண்டும். இதற்காக 92 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.''

**அயோடின் கலந்த உப்பையே பயன்படுத்துவீர்**

யுனிசெஃப் நிறுவன பிரதிநிதி திரு.டிப் ஷாப்டர், நுண்ணூட்டச் சத்தில் ஒன்றான அயோடின் சத்தை பற்றி விழா மேடையில் நேரடி விளக்கம் தந்தார்.

அயோடின் சத்து கலந்த உப்பு பாக்கெட் ஒன்றை உடன் கொண்டு வந்து, மக்களுக்குக் காட்டி அயோடின் சத்தின் அவசியத்தை விளக்கினார். அயோடின் சத்தை பெறும் குழந்தைகள் அறிவுப் பூர்வமாக, நல்ல புத்திசாலியாகவும் விளங்குகின்றனர். மந்தபுத்தி, முன்கழுத்து கழலை போன்ற நோய்கள் அணுகாது. ஆகவே, யாவரும் அயோடின் கலந்த உப்பையே அவசியம் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். குழந்தைகளை முறையாக வளர்க்க போதிய வழி முறைகளைக் கூறினார்.

முக்கியமாக, இந்தியாவிலேயே சிறந்த ஊட்டச் சத்துக் கொள்கையை உருவாக்கி செயல்படும் தமிழக அரசை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்று வெகுவாக பாராட்டினார்.

**மையங்களுக்கு உதவி**

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு. ந. பாலகங்கா, சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு. கராத்தே தியாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்கள். அத்துடன் சென்னையில் அங்கன்வாடி மையங்களின் மேம்பாடு தொடர்பாக தேவையான உதவிகளை எப்போது வேண்டுமானாலும் செய்யத் தயாராக உள்ளதாகத் தெரிவித்தனர்.

உரிய வகையில் தொடர்புடைய அலுவலர்கள் அணுகினால் குழந்தைகள் நலனுக்கான தேவைகள் செய்வதாக உறுதியும் அளித்தனர்.

**அங்கன்வாடி மையங்கள் புதிதாகக் கட்டவும், புதுப்பிக்கவும்**

சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. விஜயகுமார்,இ.ஆ.ப., அவர்கள் விடுத்த ஆதரவுச் செய்தி:

தமிழ்நாட்டில் கடுமையான ஊட்டச்சத்துப் பற்றாக்குறை நிலை இல்லை என்றே சொல்லலாம். இருபதாண்டு காலமாகப் பணியாற்றி இந்த அளவிற்கு தாய் சேய் நலம் மேம்பட்டு இருப்பது பாராட்டுக்குரியது. இருப்பினும் மிதமான ஊட்டச்சத்துப் பற்றாக்குறை நிலையையும் இல்லாமல் செய்து எல்லா குழந்தைகளும் நல்ல ஆரோக்கிய நிலையை அடைய வேண்டும்.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் செயல்படும் அங்கன்வாடி மையக் கட்டடங்கள் புதிதாகக் கட்டவும், புதுப்பிக்கவும் 4.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதே நேரம் மையங்களுக்குத் தேவையான உதவிகளை செய்வதாகவும், உரிய இடங்களில் புதிய மையக் கட்டடங்கள் கட்ட குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் அணுகினால் ஆவன செய்யப்படும் – என்று உறுதியளித்தார். மையத்தின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு தெரிவித்த செய்தியைக் கேட்ட யாவரும் மகிழ்ந்தனர்.

**18 அம்ச திட்டம், மகளிர் நலம், தாய் சேய் நலத்திற்கு, மேம்பாட்டிற்கு ஒரு சிறந்த மைல் கல்**

சமூக நலத்துறை இயக்குநரும், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளின் திட்ட ஒருங்கிணைப்பாளருமான திரு. எஸ். சந்திரமோகன்,இ.ஆ.ப., அவர்கள் ஆற்றிய உரையாவது:

"தமிழகத்தில் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களின் நலப் பணிகள் முறையாக முனைப்புடன் பயனாளிகளைச் சென்றடைகின்றன. திட்டம் சீராக செயல்பட்டு வருகிறது. மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். 15.9.1982ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். இதனால் குழந்தைகளின் வளர்ச்சி வெகுவாக மேம்பட்டது. இது வரலாற்றுச் சிறப்பு மிக்க மைல் கல்லாகத் திகழ்ந்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆட்சியில் மூன்று அரிய சாதனைகளை தாய்–சேய் நலனில் செய்வித்தார்கள்.

- 18.12.2001 அன்று 18 அம்ச திட்டம் கொண்டு வந்தார்கள். இதனால் வளர் இளம் பெண்கள், தாய்மார்கள், குழந்தைகள் நலன் பாதுகாக்கப் பட்டது. அத்துடன் பொருளாதார மேம்பாடும் உயர்ந்தது.
- இரண்டாவதாக, 8.4.2002இல், "தமிழகத்தை ஊட்டச் சத்துக் குறைபாடில்லா மாநிலமாக மாற்றுவோம்" – என்று அரசாணை வெளியிட்டு, செயல்படுத்திச் சிறப்பித்தார்கள். இதுவும் ஒரு முன்னேற்ற மைல் கல்.
- மூன்றாவதாக, 12.11.2003 அன்று ஊட்டச்சத்துக் கொள்கையினை வெளியிட்டு தமிழகத்தை ஊட்டச் சத்து நிலையில் தலை நிமிரச் செய்தது வரலாற்றுச் சிறப்பு மிக்க மைல் கல்லாகத் திகழ்ந்தது.
  - பிறந்த குழந்தைகளின் சீரான பிறப்பு எடை
  - பாதுகாப்பான தாய்மைப் பேறு
  - தாய்மார்களின் நல மேம்பாடு
  - வளர் இளம் பெண்களின் ஒட்டு மொத்த விழிப்புணர்வு
  - சிசு மரண விகிதத்தைக் குறைத்தல்
  - கர்ப்பிணிப் பெண்களின் இறப்பு விகிதத்தைக் குறைத்தல்
  - கடுமையான ஊட்டச்சத்துப் பற்றாக்குறை நிலையை இல்லாமல் செய்தல்
  - சத்துணவை மேலும் சத்துமிக்கதாக்கச் செய்தல்

போன்ற பல நலப் பணிகளை பல திட்டங்களின் மூலம் தமிழக அரசு நிறைவாக நிறைவேற்றி வருகிறது.

சுகாதாரத்துறை மற்றும் பிற துறைகளுடன் இணைந்து தாய்-சேய் நலமுடன் வாழ, ஊட்டச்சத்து நிலையை மேலும் உயர்த்துவோம். உறுதி கொள்வோம்'' என்று உரையை நிறைவு செய்தார்.

**ஊட்டச்சத்தும், நாட்டின் வளர்ச்சியும்**

மத்திய அரசின், உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் திருமதி. ராதா சுந்தர்ராஜன் தனது சிறப்புரையில்,

"இவ்வாண்டின் மையக் கருத்தான, ஊட்டச்சத்துக் குறைபாட்டை உடனே தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊட்டச்சத்துக் குறைபாடு இருந்தால் மக்கள் நலமுடன் இருக்க முடியாது. ஆரோக்கியம் கெடும். இதனால் பொருளாதாரப் பின்னடைவும் உண்டாகும். நாட்டின் முன்னேற்றம் தடைபடும். எனவே, ஊட்டச்சத்து நிலையில் உயர வேண்டும்.

நுண்ணூட்டச் சத்துக்களான இரும்புச் சத்து, வைட்டமின் 'ஏ', அயோடின் சத்து போன்ற சத்துக்கள் அடங்கிய உணவுப் பொருட்களை தவறாமல் உட்கொள்ள வேண்டும். தாய்-சேய் நலம் மேம்பட வேண்டும். உணவு முறைகளை முறையாகக் கடைபிடிக்க வேண்டும்'' என்று வலியுறுத்தினார்.

**பேரணியில் பெண்கள் முழக்கம்**

மக்கள் மத்தியிலும், காண்போரின் மனதிலும் ஒரு விழிப்புணர்வை உண்டு பண்ணும் வண்ணம் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது. பேரணியில் அங்கன்வாடிப் பணியாளர்கள், மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், மருத்துவ அலுவலர்கள், செவிலியர்கள் மற்றும் கலைக் குழுவினர் கலந்து கொண்டனர்.

திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்கள் கொடியசைத்து பேரணியை மன்றோ சிலையில் இருந்து தொடங்கி வைத்தார். கலந்து கொண்டோர் கையில் வாசக அட்டையுடன் முழக்கமிட்டு சென்றது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. வாசக அட்டைகளில்,



- பெண் குழந்தையைப் பேணிக் காப்போம்!
- பெண்மைக்குப் பெருமை சேர்ப்போம்!
- போக்குவாம்! போக்குவோம்!
  ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்குவோம்!
- காப்போம்! காப்போம்!
  குழந்தை நலம் காப்போம்!

என எழுதப்பட்டிருந்தது. இவ்வாசகங்களை ஒருவர் கூற மற்றவர்கள் முழங்கினர்.

இப்பேரணியில் தங்கள் உரிமையைப் பெறவும் குரல் எழுப்பியது குறிப்பிடத்தக்கது. பேரணி கலைவாணர் அரங்கில் நிறைவுற்றது.

**கண்கொள்ளாக் கண்காட்சி**

ஊட்டச்சத்து என்றால் என்ன? எந்தெந்த உணவுப் பொருளில் எந்த சத்து அதிகம் உள்ளது? போன்ற கேள்விகளுக்கு விடை அளிக்கும் வகையில் கண்காட்சி அமைந்திருந்தது.

திட்டத்தின் நலப்பணிகள், நோக்கங்கள், ஊட்டச் சத்து குறைபாடு தோன்றும் விதம் பற்றி பொம்மைகளைக் கொண்டு விளக்கினர். காய்கறி, கிழங்கு வகைகளில் விலங்குகள், பறவைகள், சத்துபாப்பா என பல வகையில் அமைந்து இருந்தது விழாவிற்கு மேலும் மெருகு சேர்த்தது.

மகளிர் சுயஉதவிக் குழுவினர் செய்த கைவினைப் பொருட்கள் விற்பனைக்கும் வைக்கப்பட்டிருந்தன.

கண்காட்சியினை அங்கன்வாடிப் பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் அமைத்திருந்தனர். கண்காட்சியினை அமைச்சர் பெருமக்களும், உயர் அலுவலர்களும் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை சென்னை திட்ட அலுவலர் திருமதி. இராமஜோதி செய்திருந்தார்.

விழாவில், மகளிர் சுயஉதவிக் குழுவினர், அங்கன்வாடிப் பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், செவிலியர்கள், மருத்துவ அலுவலர்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், சென்னை திட்ட அலுவலர், சென்னை மாவட்ட சமூக நல அலுவலர், திட்ட ஒருங்கிணைப்பாளர், அலுவலர்கள், சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் கலைக் குழுவினர் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக, இணை ஒருங்கிணைப்பாளர் டாக்டர். சா. முருகன் நன்றி நவில, நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

**"தன்னிகரில்லாத் தமிழகத்தை உருவாக்குவோம்! வாழ்க தாய்-சேய் நலம்! வளர்க அவர்கள் வளம்!''**

★

# தமிழக அனல் மின்நிலையங்களுக்கு மத்திய அரசின் தங்கக் கேடயம்



தமிழ்நாட்டில் உள்ள மேட்டூர், தூத்துக்குடி மற்றும் வடசென்னை அனல் மின் நிலையங்கள் சிறப்புடன் செயல்படுவதைப் பாராட்டி மத்திய அரசு தேசிய விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளது. மேட்டூர் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள் 2000 முதல் 2003 வரையிலான 4 ஆண்டுகளுக்கு தொடர்ந்து தங்கக் கேடயங்களை வென்றுள்ளன. வட சென்னை அனல் மின் நிலையம் 2001 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளுக்கு தங்கக் கேடயங்களையும், 2003ஆம் ஆண்டுக்கு வெள்ளிக் கேடயத்தையும் வென்றுள்ளது. புதுடெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் 24.8.2004 அன்று நடைபெற்ற விழாவில், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள் இந்த விருதுகளை வழங்கினார். தமிழ்நாடு அரசின் சார்பில், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில் நுட்பம் மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் விருதுகளைப் பெற்றுக் கொண்டார்.

மின்சாரத்தின் தரத்தை நிலை நிறுத்துவதற்கும், தடையற்ற மின்சாரத்தை விநியோகிப்பதற்கும், அனல் மின் நிலையங்களின் தொடர்ச்சியான செயல்பாடு முக்கியப் பங்கு வகிப்பதால், தேசிய அனல் மின் கழகம், மாநில மின்சார வாரியங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் ஆகியவற்றின் கீழ் செயல்படும் அனல் மின் நிலையங்களின் செயல்பாடுகள் மத்திய மின்சார ஆணையத்தால் மேற்பார்வையிடப்பட்டு கேடயங்கள் வழங்கப்படுகின்றன.

அனல் மின் நிலையத்தின் சுமைகாரணியை (Load factor) குறியீடாகக் கொண்டு மின் நிலையத்தின் செயல்பாடு மதிப்பிடப் பட்டு, ஒரு வருடத்திற்கு 1 கிலோ வாட்டிற்கு 7,500 யூனிட்டுகளுக்கு மேல் எனில் தங்கக் கேடயமும், 7,100 முதல் 7,500 யூனிட்டுகள் வரை எனில் வெள்ளிக் கேடயமும், 6,600 முதல் 7,099 யூனிட்டுகள் வரை எனில் வெண்கலக் கேடயமும் வழங்கப்படுகிறது.

இந்த வகையில், தமிழ்நாட்டில் உள்ள மேட்டூர் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள் 2000 முதல் 2003 வரையிலான 4 ஆண்டுகளுக்கு தொடர்ந்து தங்கக் கேடயங்களை வென்றுள்ளன. மேலும், வடசென்னை அனல் மின் நிலையம் 2001 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளுக்கு தங்கக் கேடயங்களையும், 2003ஆம் ஆண்டுக்கு வெள்ளிக் கேடயத்தையும் வென்றுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளின் படி, தமிழ்நாட்டில் உள்ள மேட்டூர், தூத்துக்குடி மற்றும் வடசென்னை ஆகிய அனல் மின் நிலையங்கள் திறம்பட செயல்படுவதன் காரணமாகவே, அவை தொடர்ந்து கேடயங்களை வென்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்து வருகின்றன. □



உலக தென்னை தினம் 2.9.2004 அன்று கொண்டாடப்பட்டதையொட்டி கிராமப்புறத்தைச் சேர்ந்த பெண் குழந்தைகள் மற்றும் தென்னை விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் 2 சிறப்புத் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2.9.2004 அன்று அறிவித்துள்ளார்கள். கிராமப் பகுதிகளில் பிறக்கும் பெண் குழந்தைகள் பலனடையும் விதத்தில் ஒரு திட்டமும் பூச்சிகளால் தாக்கப்படும் தென்னம் பிள்ளைகளைப் பாதுகாக்கும் விதத்தில் தென்னை சாகுபடியாளர்களுக்குப் பலன் தரும் விதத்தில் இன்னொரு திட்டமுமாகும்.



பெண்களைப் பொருளாதார ரீதியாக தன்னிறைவு அடையச் செய்ய வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின்



# உலக தென்னை தினத்தையொட்டி இரண்டு சிறப்புத் திட்டங்கள்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு

இலட்சியத்தை செயல்படுத்தும் வகையில் "உலக தென்னை தினம்" கொண்டாடப்படும் இந்நாளில் தென்னை சாகுபடியை பெருக்குவதுடன் அதன் மூலம் பெண் குழந்தைகளின் கல்விக்குப் பயன்படும் வகையிலும் அவர்களுக்கு உறுதியான வருமானம் கிடைக்க வழிசெய்யும் வகையிலும், சிறப்புத் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இத்திட்டத்தின்படி கிராமப்புறங்களைச் சேர்ந்த ஒருவயதிற்குட்பட்ட ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் 2 தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும். அந்தக் குழந்தை 5 வயது நிரம்பி, பள்ளிக்குச் செல்லத் தொடங்கும்போது, தென்னை மரங்களும் வளர்ந்து ஆண்டுக்கு மரத்திற்கு 100 காய்கள் வீதம் காய்க்கும்.

இதன் மூலம், அந்தப் பெண் குழந்தையின் கல்விக்கு ஆண்டுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் வருமானம் கிடைக்கும். மேலும் அப்பெண் குழந்தைகளின் உயர்கல்விக்கு உரிய வருமானமும் இதனால் கிடைக்கப்பெறும். அத்துடன் இந்தத் திட்டம் தமிழகத்தில் தென்னை சாகுபடி பரப்பளவை அதிகரிக்கவும் வழிவகுக்கும்.

தமிழ்நாட்டில், தென்னை விவசாயிகளை கடுமையாக பாதித்து வரும் ஈரியோஃபைட் எனப்படும் செம்பான் சிலந்திப் பூச்சி நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கான மற்றொரு சிறப்புத் திட்டத்தையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதன்படி 5 ஏக்கர் வரை நிலம் உள்ள ஏழை விவசாயிகளுக்கு இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்காக தமிழக வேளாண் பல்கலைக்கழகத்தின் பரிந்துரையின்படி வேம்பை அடிப்படையாகக் கொண்ட பூச்சிக்கொல்லி மருந்து ஒரு தென்னை மரத்திற்கு 10 மில்லி வீதம் அதிகபட்சமாக 350 மரங்கள் வரை இலவசமாக வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் பாதிப்புக்குள்ளான 1 கோடியே 35 இலட்சம் தென்னை மரங்கள், 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் குணப்படுத்தப்படும். மீதியுள்ள 1 கோடியே ஒரு இலட்சம் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்குப் பயனளிக்கும் வகையில் 8 கோடியே 32 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்குமாறு மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது. ❖



# இந்திய விடுதலைப் போராட்ட வீரருக்கு வாடகைக் குடியிருப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9.9.2004 அன்று தலைமைச் செயலகத்தில், இந்திய விடுதலைப் போராட்ட வீரரான விருதுநகர் மாவட்டம் கனிசேரி கிராமத்தைச் சேர்ந்த திரு.ராஜூ பிள்ளை அவர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வாடகைக் குடியிருப்பு ஒன்றினை ஒதுக்கீடு செய்து, அதற்கான ஆணையை அவரிடம் நேரில் வழங்கினார்கள்.

விருதுநகர் மாவட்டம் கனிசேரி கிராமத்தைச் சேர்ந்த திரு.ராஜூ பிள்ளை, வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடந்த வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்றுப் போராடி சிறை சென்று தியாகம் செய்த இந்திய விடுதலைப் போராட்ட வீரர் ஆவார். 20 ஆண்டுகளுக்கு மேலாக சென்னை காங்கிரஸ் மைதானத்தில் தங்கியிருந்த தான் தற்பொழுது அங்கிருந்து வெளியேற்றப்பட்டு தங்குவதற்கு இடமின்றித் தவிப்பதாகவும், 90 வயதான தானும், 80 வயது நிரம்பிய தனது மனைவியும், நிம்மதியோடும் பாதுகாப்பாகவும் வாழ்கின்ற வகையில் அரசு வாடகைக் குடியிருப்பு ஒன்றை ஒதுக்கீடு செய்து தர வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் அவர் கோரிக்கை மனு கொடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கை மனுவினை பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவரது நிலையைக் கருத்தில் கொண்டு வயதான காலத்தில் நிம்மதியாக வாழ்ந்திட ஏதுவாக, சென்னை தாடண்டர் நகரிலுள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வாடகைக் குடியிருப்பு ஒன்றை ஒதுக்கீடு செய்து அதற்குரிய ஆணையை திரு. ராஜூ பிள்ளை அவர்களிடம் 9.9.2004 அன்று நேரில் வழங்கினார்கள்.

சுதந்திரப் போராட்ட தியாகியான தன்னுடைய கோரிக்கையை உடனடியாக ஏற்று தனக்கு நிம்மதி அளிக்கும் வகையில் அரசு குடியிருப்பினை ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு திரு. ராஜூ பிள்ளை தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். □

# தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில்
# கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார்
## பிறந்தநாள் விழா

**தூ**த்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 133ஆவது பிறந்த நாள் விழா 5.9.2004 அன்று மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. என்.தளவாய் சுந்தரம் அவர்கள் வ.உ.சிதம்பரனார் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து பேசும்போது, "தமிழ்நாடு அரசு, சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தியாகச் செம்மல்களைப் போற்றிடும் வகையில் அவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்கும் பொருட்டு மணிமண்டபங்களை அமைத்து வருகிறது. சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட வ.உ.சிதம்பரனாருக்கு திருநெல்வேலியில் மணி மண்டபம் கட்டும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. தமிழ்நாட்டில் 180 வட்டார மருத்துவமனைகள், 80 வட்டாரம் சாரா மருத்துவமனைகள், 29 தலைமை மருத்துவமனைகளைத் தரம் உயர்த்திட 600 கோடி ரூபாய் உலக வங்கியிடம் நிதி பெற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து வருகிறார்கள். இந்த நிதி இரண்டு மாதங்களில் கிடைத்து விடும்'' எனக் குறிப்பிட்டார்.

விழாவில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் பேசும்போது, "மக்கள் மத்தியில் மகத்தான இடம்பெற்ற தலைவர் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார். இந்திய நாட்டிற்கு, தமிழகத்திற்கு, ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்திற்குக் கிடைத்த தலை சிறந்த தியாகச் செம்மல் என்பதை யாரும் மறந்து விடமுடியாது. வறட்சி பிரதேசமாக இருந்தாலும் வளமான இதயம் பெற்றவர்கள் ஒட்டப்பிடாரம் மக்கள். தாமிரபரணி ஆறு ஓடினாலும் தூத்துக்குடி மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம் மற்றும் விளாத்திகுளம் பகுதி வறட்சியாகவே காணப்படுகிறது. இப்பகுதியில் குடிநீர்ப் பிரச்சினையினை போக்கிடும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 68 கோடி செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அனுமதியளித்துள்ளார்கள்'' என குறிப்பிட்டார்.





மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு.சொ.கருப்பசாமி அவர்கள் பேசும்போது, "நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு சிறை சென்ற வ.உ.சி. அவர்களை சிறையில் ஆங்கிலேயர்கள் செக்கை இழுக்க வைத்தனர். கல்லுடைக்க வைத்தனர். பல்வேறு இன்னல்களை அனுபவித்த வ.உ.சிதம்பரனார் செக்கிழுத்த செம்மல் எனப் பேரும் புகழும் பெற்றார். வ.உ.சிதம்பரனார் அவர்கள் இறக்கும்போது கடன் மற்றும் வறுமைதான் மிஞ்சியது. இப்படிப்பட்ட தியாகிகளை கவுரவிக்கும் வகையில்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தியாகிகளின் பிறந்தநாள் விழாக்களை அரசு சார்பில் கொண்டாட உத்தரவிட்டுள்ளார்கள். விழாவில் பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகின்றன'' என குறிப்பிட்டார்.

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் பேசும் போது, "சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தேசிய உள்ளம் கொண்ட நல்ல தலைவர்களை நினைவு கூறும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்ந்த பூமியில் அவரது பிறந்த நாளைக் கொண்டாட உத்தரவிட்டுள்ளார்கள். வீரபாண்டிய கட்டபொம்மன், வீரன் சுந்தரலிங்கம், வாஞ்சிநாதன், வீரன் அழகுமுத்துக்கோன் போன்ற சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் வாழ்ந்த பகுதியாகும் ஒட்டப்பிடாரம். வ.உ.சிதம்பரனார் நினைத்திருந்தால் செல்வச் செழிப்போடு வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவர் அப்படி செய்யவில்லை. ஆங்கிலேயர்களை எதிர்த்து சுதேசிக் கப்பல் விட்டதால் ஆங்கிலேயர்களால் இரட்டை ஆயுள் தண்டனை கொடுக்கப்பட்டு சிறையில் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்தார்'' என குறிப்பிட்டார்.

விழாவில் தாட்கோ மகளிர் திட்டம் வருவாய்த்துறை மற்றும் ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறையின் சார்பில் 33 பயனாளிகளுக்கு ரூபாய் 7.65 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இதில் ரூபாய் 3.30 இலட்சம் மானியமாகும். மேலும் பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்குப் பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வெ.சந்திரசேகரன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.சிவபெருமாள், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.என்.கே.பெருமாள், தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.ராஜம்மாள், வ.உ.சிதம்பரனார் வழித்தோன்றல்கள் வ.உ.சி.ஆ.சங்கரலிங்கம், வ.உ.சி.ஆ.உலகநாதன், திரு. இளசை அருணா, திரு.இளசை மணியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

**– துரை. ராஜ்குமார்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தூத்துக்குடி

# ஈரோடு மாவட்டம் - ஓடாநிலையில்

# தீரன் சின்னமலை விழா

இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு, தமிழ்நாட்டில் 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் வித்திட்ட வீரபாண்டிய கட்டபொம்மன், வேலு நாச்சியார், சிவகங்கை முத்து வடுகநாதன், இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி ஆகியவர்களின் வரிசையில் இந்திய விடுதலை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சரித்திர நாயகன் தீரன் சின்னமலை ஆவார். கொங்கு மண்டலத்தின் சிங்கமென சிலிர்த்தெழுந்து அன்னியர் ஆட்சிக்கு அடிமையாய் இருந்த கொங்குப் பகுதி மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை. அவ்வாறு தியாகத்திற்கும், வீரத்திற்கும் வித்திட்ட தீரன் சின்னமலை அவர்களுக்கு அவரது நினைவாக 2.8.2004ஆம் நாளன்று விழா கொண்டாடிட அரசு உத்தரவிட்டது.

தீரன் சின்னமலை நினைவாக ஆடிப்பெருவிழா மற்றும் சுற்றுலா விழா 2.8.2004 அன்று ஈரோடு மாவட்டம் அரச்சலூர் ஓடாநிலையில் நடைபெற்றது. இவ்விழாவில் தீரன் சின்னமலை அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து தீரன் சின்னமலை அவர்களின் வாரிசுகளை கௌரவித்த மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.சி.இராமசாமி அவர்கள் தமது உரையில், “இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காகப் போராடியவர்கள் பலர். ஆனால் வெள்ளையர்கள் இந்தியாவிற்குள் நுழைந்த காலம் முதலே தங்களுடைய எதிர்ப்பைக் காட்டி அவர்களையே அஞ்சி நடுங்கும்படி செய்த வீரர்கள் ஒரு சிலரே. தமிழகத்தில் அத்தகைய வீரர்களில் ஒருவர் தீரன் சின்னமலை என்றால் அது மிகையாகாது. கொங்கு நாட்டு மக்களிடம் தண்டல் வசூல் செய்ய வந்த மைசூர் அரசர் திப்பு சுல்தானின் ஆட்களைத் தடுத்து நிறுத்தி கொங்கு நாட்டு மக்கள் யாருக்கும் அடிமையல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் வரிப்பணம் வசூல் செய்ய வந்த தண்டல்காரர்களிடம் சிவன்மலைக்கும், சென்னிமலைக்கும் இடையே ஒரு சின்னமலை வரிப்பணத்தைப் பிடுங்கிக் கொண்டான் என்று உங்கள் மன்னனிடம் போய்ச் சொல் என்று கூறி அன்று முதல் தீரன் சின்னமலையாக உருவெடுத்தான். இந் நிகழ்ச்சியின் மூலம் தீரன் சின்னமலையின் வீரத்தையும்,



சுதந்திர வேட்கையையும் கொங்கு நாட்டு மக்கள் மட்டுமல்ல, தமிழக மக்களும் புரிந்து கொண்டார்கள்.



இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து தீரன் சின்னமலைக்கு அரசு விழா எடுக்க வேண்டும் என்ற எண்ணம் இதுவரை தமிழக முதல்வராக இருந்த யாருக்கும் தோன்றவில்லை. ஆனால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1995ஆம் ஆண்டே தீரன் சின்னமலைக்குப் பிறந்த நாள் விழா கொண்டாட உத்தரவிட்டார்கள். ஆனால் அதைத் தொடர்ந்து வந்த அரசு 1996ஆம் ஆண்டு முதல் 2001 வரை விழா கொண்டாடவில்லை. அதைத் தொடர்ந்து மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2003-ஆம் ஆண்டு தீரன் சின்னமலைக்கு அரசின் சார்பில் விழா எடுக்கவும், அவருக்கு அரசின் சார்பில் அரச்சலூர் ஓடாநிலையில் ரூ.32 இலட்சம் செலவில் மணிமண்டபம் அமைக்கவும் உத்தரவிட்டதன் அடிப்படையில் கடந்த ஆண்டு அரசின் சார்பில் மிகச் சிறப்பாக தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. தியாகம் செய்தவர்களைப் போற்றுவது, திறமையாளர்களைப் பாராட்டுவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய எண்ணமாகும். தீரன் சின்னமலைக்கு சென்னையில் சிலை வைக்கவும் அதோடு அவரது நினைவாக போக்குவரத்துக்கழகத்திற்கு பெயர் சூட்டியும் உத்தரவிட்டு கொங்கு மக்களின் மனதில் நீங்காத இடத்தை ஏற்படுத்தி கொடுத்தவர்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அவரது உத்தரவின்பேரில் இங்கு ரூ.32 இலட்சம் செலவில் அரசின் சார்பில் மணிமண்டபம் கட்டப்படும். தற்போது சமுதாயக் கூடம் கட்டுவதற்கு ரூ.20 இலட்சம் செலவில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது," என்றும் பெருமையுடன் குறிப்பிட்டார்.

தீரன் சின்னமலை அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்து அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்தும், ரூ.20 இலட்சம் மதிப்பில் சமுதாயக் கூடம் கட்ட அடிக்கல் நாட்டியும், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் தமது உரையில், "பழம்பெரும் தமிழகத்தின் பெருமை மிக்க பூமி கொங்கு நாடாகும். இங்கு வாழும் மக்களின் விருந்தோம்பல் பண்பும் மற்றவர்களை மதிக்கின்ற மாண்பும் வழிவழியாக வந்த சிறப்புமிக்க மரபாகும். அந்த மரபுகளில் பிறந்த மாவீரன்தான் தீரன் சின்னமலை ஆவார். அன்னியர் ஆட்சியை எதிர்த்து விடுதலை வேட்கையின் வீரம் செறிந்த போர் நடத்திய கொங்கு நாட்டின் மாவீரன் தீரன் சின்னமலையின் பெருமையைப் போற்றும் வகையிலும், ஆடிப்பெருக்கின் பெருமையை உணர்த்தும் வகையிலும் இங்கு நடைபெறும் இந்த இனிய விழாவில் பங்கேற்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். நாட்டுக்கு உழைத்த நல்லவர்களைப் போற்ற வேண்டும் என்பதில் ஆர்வமும், அக்கறையும் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல தலைவர்களுக்கு மணிமண்டபங்களைக் கட்டியும், நினைவுச் சின்னங்களை உருவாக்கவும் ஆணை பிறப்பித்துள்ளார்கள். கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு திருநெல்வேலியில் ரூ.75 இலட்சம் செலவில் மணி மண்டபம் கட்ட ஆணை பிறப்பித்து அதற்கான கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. பெருந்தலைவர் காமராஜருக்கு ரூ.9 இலட்சம் செலவில் மணிமண்டபம், ரூ.5 இலட்சம் செலவில் நினைவுத் தூண் அமைக்கவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

இதைப் போன்று தீரன் சின்னமலைக்கு ஈரோடு மாவட்டம் ஓடாநிலையில் ரூ.20 இலட்சம் செலவில் சமுதாயக் கூடம் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி ஆணை வழங்கி, அதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஆடிப்பெருக்கு தினத்தில் தீரன் சின்னமலைக்குப் பெருமை சேர்க்க கொங்கு நாட்டு மக்கள் ஒன்றாகக் கூடி நிற்கின்றார்கள்.

இத்தகைய பெருமைமிக்க விழாவில் சுற்றுலா வளர்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்து சுற்றுலா விழாவையும் இணைத்து நடத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழி வகுத்துள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறைகளிலும் சாதனை படைத்துள்ளார்கள். நான் சார்ந்துள்ள ஊரக வளர்ச்சித் துறையில் கிராமப்பகுதியில் முழுமையான மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் "நமது கிராமம்" என்ற ஒரு புரட்சிகரமான திட்டத்தினை உருவாக்கியுள்ளார்கள். பழுதுபட்ட ஊரகச் சாலைகளைச் சீரமைக்க இந்த ஆண்டு ரூ.150 கோடி வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ரூ.150 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 581 சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளன. தீரன் சின்னமலையின் புகழ் ஓங்குக என்று குறிப்பிட்டு, பொதுமக்கள் அனைவருக்கும் ஆடிப்பெருவிழா வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்," என குறிப்பிட்டார்.

இவ்விழாவில் மாண்புமிகு மத்திய சமூக நலம் மற்றும் சமூக நீதித்துறை இணை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள், பழனி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.கே. கார்வேந்தன், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு.என்.ஆர்.கோவிந்த ராஜர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், சிட்கோ தலைவர் திரு. சிந்து ரவிச்சந்திரன் மற்றும் கொங்கு பேரவை தலைவர்கள் கலந்து கொண்டனர்.




பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் 417 சாலைப் பணிகளுக்கு ரூ.117 கோடியே 91 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சொந்தக் கட்டடம் இல்லாத 5,876 சத்துணவு மையங்களுக்கு ரூ.58 கோடியே 76 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படவுள்ளது. 7,760 நீர்நிலைகளைப் புதுப்பிக்க ரூ.77 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு 44,330 புதிய தொகுப்பு வீடுகள்ரூ.141 கோடியே 85 இலட்சம் செலவில் கட்டித் தரப்படவுள்ளன. 2004–2005ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி அமைப்பிற்கு மானியம் வழங்க ரூ.721கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களைச் செயல் படுத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய முன்னேற்றத்திற்கு அனைவரும் துணை நிற்க வேண்டும்.

இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் தா.கார்த்திகேயன்,இ.ஆ.ப., தலைமை வகித்தார். ஈரோடு கோட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா. கெஜலட்சுமி அனைவரையும் வரவேற்றார்.

தீரன் சின்னமலை வாழ்க்கை வரலாற்றையும் அவரைப் போற்றும் கொங்கு மண்டல மக்களின் உணர்வுகளையும் மதிக்கின்ற வகையில் தமிழக அரசுக்கு அனைத்துத் தரப்பு மக்களும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

**– எம். ஆர். லிங்கம்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு

# கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம்!

கீரப்பாளையத்தில்

## மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர்

அவர்களின் உரை!

பின்னர், பல்வேறு தொண்டு நிறுவனங்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்களால் அமைக்கப்பட்டிருந்த, மகளிர் சுயஉதவிக் குழுவினரால் உற்பத்தி செய்யப்பட்டு, பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்கினைப் பார்வை யிட்டார். இந்தக் கண்காட்சி அரங்கில், மகளிர் சுயஉதவிக் குழுவினரால் உற்பத்தி செய்யப்பட்ட சேனிட்டரி நாப்கின், காகிதங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட காகிதக் குவளை மற்றும் காகிதக் கோப்பைகள், கழிவறை கோப்பைகள், தார்ச் சாலைக்குப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் கழிவுகளின் துகள்கள், மின்சாரம் இன்றி மிதிவண்டி மூலம் மனித சக்தியைப் பயன்படுத்தி, மின் உற்பத்தி செய்து மாவு போன்ற இதர பொருட்களை அரைத்து எடுத்தல், மூலிகைச் செடிகளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட மருந்துப் பொருட்கள், பெண்களால் சாண எரிவாயுக் கலன் அமைத்தல், இன்டர்நெட் கியாஸ்க் (INTERNET KIOSK) மூலம் கிராமப்புற மக்களுக்கு அறிவியல் வளர்ச்சியை எடுத்துரைத்தல் போன்றவை குறித்து கண்காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன.



சுகாதாரத் திட்டத்தைச் செயல்படுத்தியதில் தன்னிறைவு பெற்ற கிராமமான கடலூர் மாவட்டத்தைச் சார்ந்த கீரப்பாளையம் கிராமத்திற்கு மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்கள் 27.8.2004 அன்று வருகை தந்தார்கள்.



மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் இந்தக் கண்காட்சியினைப் பொறுமையாகப் பார்வையிட்டு, மகளிர் சுயஉதவிக் குழுவினரிடம், பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் விதம் குறித்து உரையாடினார். பின்னர் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் சுகாதாரத்தை வலியுறுத்தி நடத்தப்பட்ட, சுயஉதவிக் குழுவினரின் கலை நிகழ்ச்சியை மேடையிலிருந்தே கண்டுகளித்தார். பின்னர் தேசிய கீதத்துடன் விழா தொடங்கியதும், கீரப்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. கே.பி. பன்னீர்செல்வம் வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்ட ஆட்சியர் திரு.ககன்தீப் சிங் பேடி,இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது, கடலூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் பற்றியும், ஊராட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்தும், சிறந்த ஊராட்சியாகத் தேர்வு செய்யப்பட்ட கீரப்பாளையம் ஊராட்சியின் சுகாதாரத் திட்டச் செயல்பாடுகள் குறித்தும் உரை நிகழ்த்தினார்.

பின்னர், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது:

**கீரப்பாளையம் பஞ்சாயத்து பெருமக்களாகிய உங்கள் எல்லோரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். சில மாதங்களுக்கு முன்பு, மழைநீர் சேகரிப்பது குறித்து அறிந்து கொள்வதற்காக, தமிழ்நாட்டிலிருந்து ஒரு பஞ்சாயத்துத் தலைவரின் குழு வடக்கே சில மாநிலங்களில் சுற்றுப் பயணம் செய்தது. அதன் பிறகு அவர்கள் தில்லியில் என்னைச் சந்தித்தார்கள். அப்போது திரு.பன்னீர்செல்வம் அவர்களும் என்னை சந்தித்து பேசும்போது உங்கள் கிராமத்துக்கு வருவதாக நான் ஒப்புக்கொண்டேன். இன்று உங்கள் எல்லோரையும் சந்திப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.**

இந்த கிராமத்திலே உள்ள 1,125 வீடுகளிலும் சுகாதார வசதிகள் உள்ளன என்று அறிகிறேன். இது ஒரு நல்ல செய்தி. எனக்கு தூரத்தில் இருந்த சிந்து சமவெளி நாகரிகமும், பக்கத்தில் இருந்த உத்திரமேரூர் கல்வெட்டுகளும் நினைவுக்கு வருகிறது.

### புரா திட்டம் (Providing Urban facilities in Rural Areas)

கிராமங்களிலேயே நகரங்களின் அடிப்படை வசதிகளை நிறைவு செய்தால், கிராமங்களிலிருந்து நகரங்களுக்குக் குடிபெயர்வது குறையும். வாழ்க்கையின் அழகு கிராமங்களிலேயே இருக்கிறது. ஆகவே, கிராமங்களிலேயே வேலைவாய்ப்புகள் கிட்டினால் மக்கள் மகிழ்வார்கள். இதற்கு அடிப்படை சுகாதார வசதிகளோடு இன்ன பிற தொழில்நுட்ப வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். இதற்காக, கிராமப்புறங்களிலேயே நகர்ப்புற வசதிகளைச் செய்து கொடுக்கும் திட்டம் என்ற ஒரு திட்டம் உருவாகியுள்ளது. இதை ஆங்கிலத்தில் Providing Urban facilities in

Rural Areas - PURA என்று அழைக்கிறோம். இப்படிச் செய்தால்தான் நகரங்களிலுள்ள தொழிற்சாலைகளும், அலுவலகங்களும் கிராமங்களில் அமைக்க முடியும். அதன்மூலம் வேலைவாய்ப்புகள் கிராமங்களிலேயே உண்டாகும்.

அத்திட்டத்தின்படி, முதலில் கிராமங்களை அகலமான நல்ல சுற்றுச்சாலைகள் மூலம் இணைத்து அதில் போக்குவரத்துக்கென பேருந்துகளும், கல்விக்கென பள்ளிக்கூடங்களும், நோய் சிகிச்சைக்கென மருத்துவமனைகளும் அமைத்து வசதியான பரஸ்பர இணைப்புகள் (Physical Connectivity) கொடுக்க வேண்டும். அதன் பிறகு மின்னணுவியல் இணைப்பு எனப்படும் எலக்ட்ரானிக் இணைப்புகளான டெலிபோன், இன்டர்நெட் வசதிகள் கொடுக்க வேண்டும். இதன்மூலம் அங்கெல்லாம் டெலி மெடிசின், டெலி எஜுகேஷன், இ–கவர்னென்ஸ் போன்ற வசதிகள் ஏற்படும். அதிக வருமானம் கொடுக்கும் புதுத் தொழில் வேலைகள் நாட்டுப்புறத்துக்கு வரும். இதன் மூலம் நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் அறிவு இணைப்பு (Knowledge Connectivity) கொடுக்க ஏதுவாகும். அதாவது, தொழிற்கல்வி வசதிகள், virtual class room போன்றவைகள் ஏற்பட வழி பிறக்கும். கிராமத்திலிருந்தே பெரிய படிப்புகள் படித்து முடிக்க வசதிகள் உண்டாகும்.

இதனால், அந்தந்த பிராந்தியங்களில் கிராமங்களில் பயிராகும் விவசாயப் பொருட்களுக்கு மதிப்பு கூட்டும் தொழில் அமைப்புகளும், உணவுப் பொருட்களை பதப்படுத்தும் தொழிற்சாலைகளும், இதர பிற கைத்தொழில்களும் செழிக்கும். ஏராளமான சுயதொழில் மற்றும் சிறுதொழில் முனைவர்கள் பல்கிப் பெருகுவர். வேலைவாய்ப்புகளும் பெருகும்.

இதனால், கீரப்பாளையம் போன்ற கிராமங்கள் செழிப்படையும். கிராமங்கள் செழிப்படைந்தால், மாநிலங்கள் செழிப்படையும். மாநிலங்கள் செழிப்படைந்தால் நம் நாடு வளமான நாடாகும். நாம் கனவு காணும் அறிவார்ந்த சமுதாயம் (Knowledge Community) நம் வசப்படும்.

இவ்வாறு, இந்தியாவில் உள்ள ஏறக்குறைய 6,00,000 கிராமங்களை 7,000 PURA Complexes மூலம் இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் நீங்களும் பங்கேற்கலாம்.

**வரப்புயர நீர் உயரும்**

எனக்கு, ஔவையார் எழுதிய பாடல் நினைவுக்கு வருகிறது.

*வரப்புயர நீர் உயரும்*
*நீர் உயர நெல் உயரும்*
*நெல் உயரக் குடி உயரும்*
*குடி உயரக் கோல் உயரும்*
*கோல் உயரக் கோன் உயர்வான்*

பஞ்சாப் மாநிலத்தில் நான். சுற்றுப் பயணம் செய்த போது அங்கு மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர் பகத்சிங் கிராமத்திற்குப் போயிருந்தேன். அங்கு கில் என்று ஒருவரைச் சந்தித்தேன். அவர், அந்த கிராமத்திற்கு ஒரு அருமையான திட்டம் தீட்டி, அதனைச் செயல்படுத்தியுள்ளார். அந்த கிராமத்தில், அசுத்தப்படுத்தப்பட்ட கழிவு நீரை எல்லாம் சேகரித்து, சுத்தப்படுத்தி, அந்த நீரை, அந்த கிராம மக்களே, தங்களது தோட்டங்களில் பயன்படுத்தும் வகையில் ஒரு அருமையான திட்டம் அமலில் உள்ளது. அது போன்ற உபயோகமான திட்டங்கள் நடைமுறைக்கு வர வேண்டும்.

அங்கு மற்றொரு நல்ல காரியமும் நடக்கிறது. அங்கு பாபா சர்ச்சேவால் என்ற சீக்கிய துறவி இருக்கிறார். அவர் அங்கு ஒடுகின்ற புண்ணிய நதியை, அது ஒடுகிற வழியெங்கும் மக்களையெல்லாம் தன்னுடன் சேர்த்துக்கொண்டு நதியை சுத்தப்படுத்தி தூய இறை பணியாக செய்து வருகிறார். மகத்தான இது போன்ற நல்ல பணிகள் நாடெங்கும் நடக்க வேண்டும். எனக்கு திருவள்ளுவரின் குறள் ஒன்று நினைவுக்கு வருகிறது.

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற் கிவ்வைந்து.

நாம் குடியிருக்கும் வீடு அமைதி கண்டால், நம் கிராமங்களின் வாழ்வு சிறக்கும்; நம் கிராமங்களில் வாழ்வு சிறந்தால் மாநிலங்கள் உயரும். மாநிலங்களில் வாழ்க்கை உயர்ந்தால் ஒரு அமைதியான இன்பகரமான நாட்டை உருவாக்கலாம். ஆதலால் நமது நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படை கீரப்பாளையம் போன்ற சிறந்த கிராமங்களே.

**ஆண், பெண் சதவிகிதம்**

உங்களது கிராமத்தைப் பற்றிய புள்ளி விவரங்களைப் பார்த்தேன். மொத்த ஜனத் தொகை 5,347. அதில் 3,012 ஆண்கள், 2,335 பெண்கள். ஆணுக்குப் பெண் குறைந்த பட்சம் எண்ணிக்கையில் உங்கள் கிராமத்தில் சமமாக இல்லை. பெண் குழந்தைகளைப் பேணிக் காக்க வேண்டும். அந்த சதவிகிதம் கூட ஒரு Development Index Indicator வளர்ந்த சமுதாயத்தைக் காட்டும் ஒரு குறியீடு.

உங்கள் கிராமத்தில், கல்வியறிவு 100 சதவிகிதமாக இருக்க வேண்டும். உங்கள் கிராமத்தில் உள்ள 6 ஊருணிகளுக்கும் தூர் வாருதல், மராமத்து வேலைகள் நல்லபடியாக நடப்பது குறித்து மகிழ்ச்சி. இது தொடர்ந்து செவ்வனே நடக்க வேண்டும். ஏனெனில் இந்தப் பணிதான் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துவிடாமல் இருக்க உதவும். மழைநீர் சேகரிப்பது மற்றொரு நல்ல பணி.

உத்திகளும், உதாரணமாக காட்டாமணக்கு (Jatropha), பயோடீசல் கணிசமான அளவில் தயாரிக்க உபயோகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது போன்ற முயற்சிகளால், கிராமங்களில் வேலை வாய்ப்புகள் பெருகும். செல்வம் பெருகும். வளமான நாடாக வாய்ப்புகள் உருவாகும்.

உங்கள் எல்லோருக்கும் என் வாழ்த்துகள்.



**உபயோகப்படுத்திய நீரை, நீர் சுழற்சி மூலம் மீண்டும் உபயோகத்திற்குக் கொண்டு வருதல்**

ஒரு நாடு நல்ல வளமான நாடாகக் கருதப்பட வேண்டுமானால் அந்த நாட்டில் நோயின்மை, செல்வச் செழிப்பு, நல்ல விளைச்சல், அமைதியும், சுமூகமான சமுதாயச் சூழ்நிலையும், வலிமையான பாதுகாப்பும் அந்நாட்டில் நிலவ வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். என்ன அருமையாக ஒரு வளமான நாட்டைப் படம் பிடித்துக் காட்டுகிறார். நாம் எல்லோரும் உழைத்துத்தான் நம் நாட்டை வளமான நாடாக மாற்ற வேண்டும்.

**வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பணி**

"புரா" போன்ற திட்டங்களும், அந்தந்த கிராமங்களில் பயிராகும் விளை பொருட்களுக்கு மதிப்பு கூட்டும் தொழிற்கூட்டங்களும் இப்போது புதிதாக அறிமுகமாகி வருகிற புது தொழில்நுட்ப விவசாயம் போன்ற

இவ்வாறு மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்.

இந்த விழாவில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.ந. தளவாய் சுந்தரம், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.இ.பொன்னுசாமி, சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.கி. சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மு.கணேசன், சிதம்பரம் சார் ஆட்சியர் திரு.ராஜேந்திர ரத்னூ,இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறையின் கூடுதல் இயக்குநர் திரு.முருகன், கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் திரு.டி.ஜெகந்நாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

– என். பாலையா,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கடலூர்.





# 3 திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நன்கொடை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2004–ஆம் ஆண்டிற்கான மே, ஜூன் மற்றும் ஜூலை ஆகிய 3 மாதங்களுக்குரிய தமது சம்பளத் தொகை மொத்தம் ரூபாய் 30 ஆயிரத்தை, மூன்று திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக 7.9.2004 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடந்த, 2002–ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல், தமது சம்பளத்தை, தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் செயல்படுத்தப்படும் அன்னதானத் திட்டத்திற்காக, ஒவ்வொரு மாதம் ஒரு திருக்கோயிலுக்கு என நன்கொடையாக வழங்கி வருகிறார்கள்.

அதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2004ஆம் ஆண்டு மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங்களுக்குரிய தமது சம்பளத் தொகை ரூ.30 ஆயிரத்தை, தலா ரூ.10 ஆயிரம் வீதம், மதுரை மாவட்டம், மேலூர் அழகர் கோயிலில் உள்ள அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் மற்றும் கடலூர் மாவட்டம், திருப்பாதிரிபுலியூர், அருள்மிகு வீர ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக, முறையே, அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் துணை ஆணையர் / செயல் அலுவலர் திருமதி பீ.பாரதி, அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலின் துணை ஆணையர் / செயல் அலுவலர் திருமதி. என். திருமகள் மற்றும் அருள்மிகு வீர ஆஞ்சநேயசுவாமி திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு.எ. கிருஷ்ணகுமார் ஆகியோரிடம் 7.9.2004 அன்று நேரில் வழங்கினார்கள்.

# காஞ்சிபுரம் மாவட்டத்தில்
# செய்தி – மக்கள் தொடர்புத்துறையின்
# பல்துறை பணி விளக்க முகாம்




**கா**ஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் புஷ்கரமேளா சங்கு தீர்த்தப் பெருவிழா 19.8.2004, 20.8.2004 ஆகிய 2 நாட்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இப்பெருவிழாவில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். பெருவிழாவில் அரசின் சாதனைகள் மற்றும் அரசின் நலத்திட்டங்களை பொதுமக்கள் நன்கு அறிந்து கொள்ளும் வகையில் திருக்கழுக்குன்றம் பி.டி.வி.எஸ். உயர்நிலைப் பள்ளியில் செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சி 18.8.2004 முதல் 20.8.2004 முடிய 3 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. இந்த பல்துறை பணி விளக்கக் கண்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை, கூட்டுறவுத்துறை, கைத்தறித் துறை, சிறுசேமிப்புத்துறை, வனத்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குடும்ப நலத்துறை, தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், மீன் வளத்துறை, கல்வித்துறை, அறிவொளி இயக்கம், சுற்றுலாத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வேளாண்மைத் துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, தோட்டக்கலைத் துறை ஆகிய துறைகள் இக்கண்காட்சியில் சிறப்பான முறையில் அரங்குகள் அமைத்திருந்தன. இக்கண்காட்சியினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.வி.சோமசுந்தரம் அவர்கள் திறந்து வைத்து அனைத்துத் துறை அரங்குகளையும் பார்வையிட்டு விழாப்பேருரையாற்றினார்.

அவர் பேசும்போது, "செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் மிகச் சிறப்பாக பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. திருக்கழுக்குன்றம் நகரம் ஒரு தொன்மையான நகரமாகும். வேதகிரீஸ்வரர் திருக்கோயில் புஷ்கரமேளா – இலட்ச தீப பெருவிழாவில் செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 3 நாட்கள் இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்ற பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார். காஞ்சிபுரம் மாவட்டம் அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாவட்டமாகத் திகழ்ந்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்களில் சிறந்த மாவட்ட ஆட்சித்தலைவராக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை தேர்ந்தெடுத்துள்ளார்கள். இதற்காக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பாக வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். 'கடந்த 3 ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏழை, எளிய மக்கள் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாட்டில் ஒரு பக்கம் வறுமை, ஒரு பக்கம் வறட்சி, இருப்பினும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிற்கே முன்னோடியாக பல நல்ல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

அனைத்துத் துறைகளின் சார்பாக வைக்கப்பட்டுள்ள இந்தக் கண்காட்சி சிறந்த முறையில் அமைக்கப் பட்டுள்ளது. குறிப்பாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத் துறையினால் அமைக்கப்பட்ட

கண்காட்சி சிறப்பாக உள்ளது. இங்கு அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டு, அரசின் நலத் திட்டங்களை அறிந்து பயனடைய வேண்டும். மீன் வளத்துறையின் மூலம் மீனவ சமுதாயத்திற்கு என்னென்ன சலுகைகள் வழங்கி யுள்ளார்கள் என்பதை இக்கண்காட்சி மூலம் அறியமுடிகிறது. மாநிலத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு ரூ.301 கோடி வட்டியை தள்ளுபடி செய்துள்ளார்கள். நாடு முன்னேற்றமடைய மகளிர் சமுதாயம் சிறப்பாகச் செயல்படவும், குடும்ப வருமானத்தைப் பெருக்கவும் கூட்டுறவுத்துறையின் மூலம் மகளிருக்கு கடன் வசதி வழங்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் முன்னோடித் திட்டமான "நமது கிராமம்" என்ற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இதற்காக ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். "நமது கிராமம்" திட்டத்தின் மூலம் கிராமத்திலுள்ள அனைவரும் கல்வி கற்க வேண்டும். யாரும் கல்வி கற்காமல் இருக்கக்கூடாது. "நமது கிராமம்" திட்டத்தில் அனைத்து வசதிகளும் குறிப்பாக குடிநீர், சாலை வசதி, மின்வசதி போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது. 3 ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநிலத்தில் 9,694 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டங்களை தொடங்கி வைத்துள்ளார்கள். 5,31,784 நபர்களுக்கு சுமார் ரூ.326 கோடியே 60 இலட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளார்கள்'' என்று குறிப்பிட்டார்.

மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ந.கண்ணன் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றிப் பேசும்போது, "செய்தி மக்கள் தொடர்புத்துறை திருக்கழுக்குன்றத்தில் ஏற்பாடு செய்துள்ள பல்துறைப் பணி விளக்க முகாம் மூலம் பொது மக்கள் அரசு நலத்திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்வதோடு, அவற்றை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நோக்கத்தில் இந்தக் கண்காட்சி நடைபெற்று வருகிறது. தற்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளால், அனைத்துத் துறைகளும் வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வருகிறது. நமது மாவட்டம் எந்த திட்டத்தைச் செயல்படுத்தினாலும், மாநில அளவில் முதல் 3 இடங்களுக்குள் ஒரு இடத்தைப் பெற்று வருகிறது. அரசால் அறிவிக்கப்பட்ட எந்தத் திட்டத்தையும் செயல்படுத்துவதிலும் காஞ்சிபுரம் மாவட்டத்தில், அரசுத் துறை அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும், மாவட்ட நிருவாகத்திற்கு முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறார்கள் என தெரிவித்தார்.

மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.வாசுதேவன், அச்சரப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.பூவராகமூர்த்தி, மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.மா.தனபால், புனித தோமையர் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் திரு.ச.ராஜேந்திரன், திருக்கழுக்குன்றம் பேரூராட்சித் தலைவர் திரு.வீ.வேலாயுதம், இலட்ச தீப விழாக் குழுத் தலைவர் திரு.செ.து.வரதராஜன் ஆகியோர் முன்னிலை யுரையாற்றிப் பேசினார்கள். மாவட்ட அரசு இசைப்பள்ளியின் மூலம் நாதசுர இசை நிகழ்ச்சி மற்றும் பள்ளி மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.



20.8.2004 அன்று பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சியின் நிறைவு விழா நடைபெற்றது. நிறைவு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா.வெங்கடேசன், இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு அனைத்துத்துறை அரங்குகளையும் பார்வையிட்டார். சிறப்பான முறையில் அரங்குகள் அமைந்திருந்த கூட்டுறவுத்துறை, மீன் வளத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், அறிவொளி இயக்கம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கல்வித்துறை ஆகிய துறைகளுக்குக் கேடயங்களை வழங்கினார். 18.8.2004 முதல் 20.8.2004 முடிய 3 நாட்கள் நடைபெற்ற பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அரசின் சாதனைகள் அடங்கிய வீடியோ படக்காட்சி காண்பிக்கப்பட்டது. இந்த 3 நாட்கள் நடைபெற்ற கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு பயன்பெற்றனர்.

**– ந. இளங்கோ,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.

# தமிழ்நாடு வனத்துறைக்கு அகில இந்திய அளவில் விருது



தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் என்று சூளுரைத்து, பல்வேறு துறைகளில் சாதனை படைத்து வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் வழிகாட்டுதலின்படி, தரிசு நில மேம்பாடு, வனப்பாதுகாப்பு போன்றவற்றில் திறம்பட செயல்பட்டமைக்காக அகில இந்திய அளவில் 3 விருதுகளைப் பெற்று தமிழ்நாடு அரசு வனத்துறை சாதனை படைத்துள்ளது.

தரிசு நிலங்களை மேம்படுத்தி மரங்கள் பயிரிடுதல் மற்றும் வனங்கள் அழியாது பாதுகாத்தல் போன்றவற்றில், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களையும் ஒப்பு நோக்கி, சிறப்பாக சேவை செய்யும் மாநில அரசின் வன அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், மகளிர் அமைப்புகள், தனி நபர்கள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு இந்திரா பிரியதர்சினி விருக்ஷ மித்ரா (Indira Priyadarshini Vriksha Mitra) விருதுகளை மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வன அமைச்சகம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வருகிறது.

இவ்வகையில் 2001–2002ஆம் ஆண்டுக்கான விருதுகள் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் மாநில அரசின் வன அமைப்புகள், கிராம வனக்குழு மற்றும் வன வளர்ச்சிக்கு பாடுபடும் தனி நபர் ஆகிய பிரிவுகளுக்கான விருதுகளை தமிழகம் வென்றுள்ளது. மாநில அரசின் வன அமைப்புகள் பிரிவில், வேலூர் வனக் கோட்டமும், கிராம வனக் குழுப் பிரிவில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வனக் கோட்டத்தைச் சார்ந்த உங்கட்டி கிராம வனக் குழுவும், இந்திரா பிரியதர்சினி விருக்ஷ மித்ரா விருது பெற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. வன வளர்ச்சிக்குப் பாடுபடும் தனி நபர் பிரிவில், திருநெல்வேலி வனக் கோட்டத்தைச் சார்ந்த புளியங்குடியில் உள்ள திரு. வேலு முதலியார் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அகில இந்திய அளவில் வழங்கப்படும் மொத்தம் 15 விருதுகளில், 3 விருதுகளை வென்று தமிழகம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் வழிகாட்டுதலின்படி, திறம்பட செயல்பட்டதன் காரணமாக தமிழக வனத்துறை இந்த சிறப்பு மிகுந்த சாதனையைப் படைத்துள்ளது. இந்தியாவிலுள்ள வேறு எந்த மாநிலமும் இது போன்று 3 விருதுகளைப் பெறவில்லை என்பதும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசுதான் இத்தகைய சாதனையைப் படைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விருது பெற்றவர்களுக்கு ரூ.50,000 ரொக்கப் பரிசும், பரிசுப் பதக்கமும், பாராட்டு மடலும் வழங்கப்படும். இந்த விருதுகள் செப்டம்பர் திங்கள் 9ஆம் தேதி அன்று, புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.

❖ ❖ ❖




# உயராய்வில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி,
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி
நிறுவனம், சென்னை.

## தோற்றம்

**1968** ஆம் ஆண்டு சனவரித் திங்களில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது. அம்மாநாட்டில் 'தமிழிற்கு உயர் மைய ஆராய்ச்சி நிறுவனம்' ஒன்றைத் தொடங்க வேண்டும் என்னும் கருத்தை, தமிழ்நாட்டின் முதலமைச்சராக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிஞர் முன் வைத்தார்.

அதே சமயத்தில் பூனேவில் உள்ள 'தக்கணக் கல்லூரி முதுகலை ஆராய்ச்சி நிறுவனத்தின்' இயக்குநராக இருந்த டாக்டர் கத்ரே எனும் அறிஞர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அமைப்பிற்கு உரிய முன் வரைவுத் திட்டம் ஒன்றை, அக்கருத்தரங்கில் ஆய்வுரையாக வழங்கினார். அத்திட்டத்தில், பரந்துபட்ட நிலையில், மக்கள் வாழ்வியலோடு தொடர்புடைய அறிவுத்துறைகள் பலவற்றை ஒருங்கிணைத்த நிலையில் தமிழ்மொழி, இலக்கிய, பண்பாட்டு ஆராய்ச்சியை நடத்துவதற்குரிய நெறிமுறைகளை அவர் வகுத்துக் கொடுத்துள்ளார்.

மாநாட்டின் நிறைவு விழாவில், அத்திட்டத்தினை அண்ணா அவர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றார். தம் உரையில்,

"பிரான்சு நாட்டிலுள்ள பிரெஞ்சு மொழிக் கலைக் கழகத்தைப் போன்ற நிலையில் நாம் அதனை உருவாக்க வேண்டும். அக் கலைக்கழகத்தின் அடிப்படைகளையும், நெறிமுறைகளையும் பின்பற்றி இங்குத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை அமைப்போமானால், சிறப்புமிகு இந்தியக் கலைக் கழகத்தை அல்லது தமிழகக் கலைக் கழகத்தை நாம் உருவாக்க இயலும். அப்பொழுதுதான், நமது தமிழ்மொழி ஆராய்ச்சிக் கழகம் உலகளாவிய நிலையில் வீறுடன் விளங்க இயலும்"

என்று தெரிவித்தார். இந்தக் கருத்தரங்கில்தான், முதன் முதலாக 'உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நிறுவ வேண்டும்' என்னும் எண்ணம் எழுந்தது. இந்த எண்ணத்தின் விளைவாக, இந்த நிறுவனத்தை உருவாக்குவதற்கு 'யுனெஸ்கோ'வின் உதவியை அறிஞர் நாடினார்.

1970–ஆம் ஆண்டு, ஜூலைத் திங்களில் மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு, பாரிஸ் மாநகரில் நடைபெற்றது. அப்பொழுது 'யுனெஸ்கோ' டைரக்டர் ஜெனரல் பொறுப்பிலிருந்த மதிப்பிற்குரிய டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் அம்மாநாட்டினைத் தொடங்கி வைத்தார். அவருடைய தொடக்க உரையில்,

"1968–ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்களில் கூடிய பதினைந்தாவது அமர்வில், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் நிறுவுவது பற்றி, 'யுனெஸ்கோ' ஒரு

தீர்மானத்தை நிறைவேற்றியது. நீங்கள் முன்னர் நடத்திய மாநாட்டின்பொழுது விடுத்த வேண்டுகோளையும், பரிந்துரைகளையும் கருத்தில் கொண்டு அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது"

என்று குறிப்பிட்டுள்ளார்.

இம்மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டின் அறிஞர் பெருமக்களின் ஆய்விற்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனக் கட்டமைப்புப் பற்றிய திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்த மாநாட்டிலேயே இந்நிறுவனத்தை, பதிவுபெற்ற ஒரு சங்கமாக அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. அதற்குரிய விதிமுறைகள் யாவும் வகுக்கப்பட்டன. இதற்கிணங்க 1970 அக்டோபர் 21 ஆம் நாள், ஒரு சங்கமாக இந்நிறுவனம் பதிவு செய்யப்பட்டது. 1860 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சங்கங்களின் சட்டத் தொகுதி, 13ஆம் விதிக்கிணங்க உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒரு சங்கமாகப் பதிவு செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் தமிழுக்கென ஆரம்பிக்கப்பட்ட முதல் நிறுவனம் இது என்னும் பெருமை இந்நிறுவனத்திற்கு உண்டு.

**நோக்கம்:**

இயலும் வகையிலெல்லாம் தமிழாராய்ச்சியைத் தக்க முறையில் போற்றி வளர்ப்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பது இந்நிறுவனத்தின் தலையாய நோக்கமாகும். உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழ் அறிஞர்களின் ஒத்துழைப்புடன் பல்வேறு அறிவுத்துறைகளுடன் இணைந்த ஆராய்ச்சியைப் போற்றி வளர்ப்பது, இந்த அமைப்பினுடைய முதன்மையான நோக்கங்களுள் ஒன்றாகும்.

**அமைப்பு:**

தன்னாட்சி அமைப்புடைய இந்நிறுவனத்துக்கெனத் தனியே ஆளுகைக்குழு உள்ளது. இந்த ஆளுகைக்குழுவின் அலுவல்வழித் தலைவராகத் மாண்புமிகு தமிழக கல்வி அமைச்சர் அவர்களும், துணைத்தலைவர்களாக சென்னை, அண்ணாமலை, மதுரை காமராசர், மற்றும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களும் ஐ.ஏ.டி.ஆர். பிரதிநிதியாக திரு. வா.செ.குழந்தைசாமி அவர்களும், உறுப்பினர்களாகத் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர் மற்றும் இந்திய மொழிகள் நடுவண் நிறுவன இயக்குநர்-(மைசூர்) ஆகியோரும் உறுப்பினர்-செயலராக உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநரும் அமைவர்.

**இயக்குநரமைவு:**

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முதன்மை அலுவல் ஆட்சியராக 1970 முதல் முனைவர் கா.மீனாட்சிசுந்தரம் அவர்களும், 1974 முதல் முனைவர் ச.வே.சுப்பிரமணியன் அவர்களும் பணியாற்றினர். பின்னர் 1-2-1976 முதல் 1986 ஆகஸ்டு வரை முனைவர் ச.வே.சுப்பிரமணியன் அவர்களும் 23-8-86 முதல் 1987 டிசம்பர் முடிய முனைவர் அ.நா.பெருமாள் அவர்களும், 1988 சனவரி முதல் 1989 மே 5 முடிய முனைவர் க.த.திருநாவுக்கரசு அவர்களும், 1989 ஆகஸ்டு முதல் 1991 பிப்ரவரி வரை முனைவர் சு.செல்லப்பன் அவர்களும் இயக்குநர்களாகப் பணியாற்றியுள்ளனர். 1991 பிப்ரவரி முதல் 1994 அக்டோபர் வரை முனைவர் அன்னிதாமசு இயக்குநர்-பொறுப்பாகப் பணியாற்றியுள்ளார். 1994 அக்டோபர் முதல் 2002 சனவரி முடிய முனைவர் ச.சு.இராமர் இளங்கோ அவர்கள் பணியாற்றியுள்ளார். 01-02-2002 முதல் முனைவர் சா.கிருட்டினமூர்த்தி அவர்கள் இயக்குநராகப் பணியாற்றி வருகிறார்.

**நிதி :**

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் நிகரப் பற்றாக்குறைச் (Net deficit) செலவினம் முழுமையும் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.
- 1999-2000 ஆம் ஆண்டில் அரசு நல்கையாக ரூ.65.25 இலட்சம் வழங்கப்பெற்றது. 2000-2001ஆம் ஆண்டில் ரூ.58 இலட்சமாகவும், 2001-2002இல் ரூ.53 இலட்சமாகவும் வழங்கப் பெற்றுள்ளது.
- 2002-2003, 2003-2004 மற்றும் 2004-05ஆம் ஆண்டுகளுக்கு அரசு நல்கை ரூ.53 இலட்சமாகவே தொடர்ந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பெற்று வருகிறது.

**வெளியீடுகள் :**

- இந்நிறுவனத்தால் வெளியிடப்பெற்றுள்ள நூல்கள் மொத்தம் 515.
- தமிழ் நூல்கள் 433, ஆங்கிலம் 77, பிறமொழி 5.
- பரிசு பெற்ற நூல்கள் – 21.
- 2002-இல் மட்டும் 27 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- 2003-இல் 31 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- 2004- இல் இதுவரை 43 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இம்மூன்றாண்டுகளில் மட்டும் 101 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீட்டுக் கணக்கு 1986 முதல் தனியே பேணப்பட்டு வருகிறது. விற்பனை வரவுகளுக்கு ஏற்பச் செலவினங்கள் அமைக்கப்பட்டு இது சுழல் நிதியாகப் பேணப்பட்டு வருகிறது.

**தமிழியல் பருவ இதழ்:**

ஆண்டுக்கு இருமுறை வெளிவரும் பருவ இதழ் தமிழியல் இதழ். இது 1971 முதல் தொடர்ந்து வெளிவருகிறது. இறுதியாக வந்துள்ள இதழ் 65ஆகும்.

**செய்திக்கதிர்:**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் செய்திகளைத் தாங்கி வரும் காலாண்டு இதழ் செய்திக்கதிர் ஆகும். இது திங்கள் இதழாக மே திங்கள் 2004 முதல் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனச் செய்திப்பரல்கள் என கொண்டு வரப்பட்டுள்ளது.

**அறக்கட்டளைகள்:**

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பல்வேறு பெரியோர்கள் மற்றும் அமைப்பின் சார்பில் 28 அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன.
- 2002–ஆம் ஆண்டில் மட்டும் புதிதாக 4 அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன,
- 2003–ஆம் ஆண்டில் இரண்டு அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன.
- 2004–ஆம் ஆண்டில் இரண்டு அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன.
- அறக்கட்டளைப் பொழிவுகளாக இதுவரை 95 நூல்கள் வந்துள்ளன.

**நூலகம்:**

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பெரிய ஆய்வு நூலகம் ஒன்று உள்ளது. தமிழாய்வுக்குப் பயன்படும் இந்நூலகத்தில் 78,500க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. 50,000 நூல்கள் கணினியில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. சென்னை மற்றும் புறநகர் சார்ந்த மாணவர்க்கும் அறிஞர்களுக்கும் மிகுந்த பயனுடைய நூலகம், இந்திய ஆட்சிப் பணி உள்ளிட்ட போட்டித் தேர்வுகள் எழுதப் பயன் தரும் பன்முக நூலகம் ஆகும்.
- தினமலர் நாளிதழிலிருந்து மதிப்புரைக்கு வரும் நூல்களின் ஒவ்வொரு படியினை மூன்று திங்களுக்கு ஒருமுறை இந்நிறுவனத்துக்கு நன்கொடையாக வழங்குகின்றனர்.
- அறிவியல் தமிழறிஞர் பெ.நா.அப்புசாமி அவர்களின் குடும்பத்தினர் சுமார் 2,500 நூல்களை இந்நிறுவன நூலகத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.
- 2,500க்கும் மேற்பட்ட பயனுள்ள நூல்களைப் பராசக்தி மகளிர் கல்லூரி தமிழ்ப்பேராசிரியர் திருமதி. இந்திரபவானி வரதராஜபாண்டியன் இவ்வாண்டில் இந்நூலகத்துக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகத்தைச் செப்பம் செய்யத் தமிழக அரசு கடந்த நிதியாண்டில் ரூ.6.35 இலட்சம் சிறப்பு நல்கை வழங்கி அதனைப் பொதுப்பணித்துறை வழி வழங்கப்பட்டுச் செப்பம் செய்யப்பட்டுள்ளது.

**கருத்தரங்குகள் :**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கீழ்க்குறித்த வகைப்பாட்டில் கருத்தரங்குகள் நடத்தப்பெற்று வருகின்றன.

| | | |
|---|---|---|
| ஆண்டுக்கருத்தரங்குகள் | – | 20 |
| திங்கள் கருத்தரங்குகள் | – | 261 |
| வெள்ளிக்கருத்தரங்குகள் | – | 1,037 |
| ஆய்வுமன்றக் கருத்தரங்குகள் | – | 181 |
| பயிலரங்குகள் | – | 8 |
| சிறப்புச் சொற்பொழிவுகள் | – | 54 |

**முனைவர் பட்ட ஆய்வுகள்:**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் பட்ட ஆய்வுகளுக்குத் தொடர்ந்து வழிகாட்டப்பட்டு வருகின்றன. இந்நிறுவன ஆய்வு வழிகாட்டிகள் மூலம் இதுவரை 106 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். முனைவர் பட்டம் சென்னைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

இப்போது இந்நிறுவனத்தில் 10 முழுநேர மாணவர்களும் 7 பகுதி நேர மாணவர்களும் முனைவர் பட்ட ஆய்வினைத் தொடர்கிறார்கள்.

**தமிழ் மொழிப் பயிற்சி வகுப்புகள்:**

தமிழரல்லாதவர்கள் தமிழ் கற்கப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்று வருகின்றன.

| | |
|---|---|
| தமிழ் அறிமுகம் | 3 மாதம், |
| தமிழ் முதுநிலை | 6 மாதம், |
| தமிழ் தனிப்பயிற்சி | 12 மாதம். |

இப்பயிற்சி வகுப்புகள் வழி இதுவரை 222 வெளிநாட்டவர் பயன்பெற்றுள்ளனர். அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஜப்பான், கொரியா, போலந்து, செக்கோஸ்லோவேகியா, சீனா, ரீ யூனியன் தீவுகள் நெதர்லாந்து போன்ற நாடுகள் உள்ளிட்ட இடங்களைச் சார்ந்தவர்கள் பயின்று பயனடைந்துள்ளனர்.

**சுவடியியல் மற்றும் மொழிபெயர்ப்பியல் பட்டய வகுப்புகள்**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 1979 முதல் சுவடியியல் மற்றும் மொழிபெயர்ப்பியல் பட்டய வகுப்புகள் தொடங்கித் தொடர்ந்து நடத்தப்பெற்று வருகின்றன. இதுவரை இதன்வழி 120 மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**ஒலி நாடாக்களில் தமிழ்:**

தமிழரல்லாதார் தானே தமிழ் கற்க வசதியாக இந்நிறுவனம் 6 ஒலிநாடாக்களையும், ஐந்து துணை நூல்களையும் வெளியிட்டுள்ளது.

**குறுவட்டுகளில் தமிழ் :**

தமிழரல்லாதார் கணினி உதவியுடன் தானே தமிழ் கற்க வசதியாகப் பல்முனை ஊடக வழி, ஒலி-ஒளிக் காட்சியுடன் தமிழுலகம் எனும் குறுவட்டினை (இரண்டு கொண்டது) இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது.

**திட்டப் பணிகள் / பல்கலைக்கழக நல்கைக்குழுவின் பெருந்திட்டப் பணிகள்:**

✧ பத்துத் திட்டப்பணிகள் தொடங்கி நடத்தப் பெறுகின்றன.

✧ பல்கலைக்கழக நல்கைக்குழுவிலிருந்து ஐந்து பெருந்திட்டப்பணிகள் முதன்முறையாக 2003-இல் இந்நிறுவனத்துக்கு நிதியுதவியுடன் கிடைத்துள்ளன. 1.7.03 முதல் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெறுகின்றன.

**பிற செய்திகள்:**

✧ நிறுவனத்துக்கு நன்கொடையாகக் கருத்தரங்க அறையும், படிப்பறையும் கட்டுவதற்குத் தினத்தந்தி அதிபர் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்கள் ரூ.9.50 இலட்சம் முழு நன்கொடையாக வழங்கிப் பொதுப்பணித் துறை வழி, கட்டி முடிக்கப்பட்டுத் திறப்பிற்கு அணியமாயுள்ளது.

✧ அகரமுதலியின் வெளியீட்டுத் திட்டப்பணியினை இந்நிறுவனம் அரசு விரும்பியவாறு மேற்கொண்டு ஏற்று ஆறு தொகுதிகள் வெளியிட அணியமாக்கியது. இப்போது அகரமுதலியின் அச்சுப்பணி இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு அச்சுப்பணி முடியும் தருவாயிலுள்ளது.

✧ ஆய்வுக் கருத்தரங்குகள், திங்கள் கருத்தரங்குகள், தமிழ் அறிஞர் வரிசைக் கருத்தரங்குகள் ஆகியன தொடர்ந்து நடத்தப்பெற்று வருகின்றன.

✧ தமிழறிஞர் வரிசைக் கருத்தரங்கில் இதுவரை 16 தமிழறிஞர்கள் பற்றிய பொழிவுகள் நடைபெற்றுள்ளன. இவ்வகையில் எட்டு நூல்கள் வெளிவந்துள்ளன.

✧ உலகத் தமிழ் இலக்கிய வரலாறு எனும் தமிழ்வளர்ச்சித்துறைத் திட்டப்பணியில் இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

✧ மத்திய அரசின் விஞ்ஞான் பிரசார் அமைப்பின் சார்பில் தென்னிந்திய மொழிகளில் அறிவியல் பரப்புதல் எனும் கருத்தரங்கு நடத்தப்பெற்றது.

✧ சாகித்திய அகாதெமியுடன் இணைந்து செய்யுளியல் கோட்பாடுகள் எனும் ஒருநாள் கருத்தரங்கு நடத்தப்பெற்றது.

✧ அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து உலகத் திருக்குறள் மாநாடு சென்னையில் சனவரி 17, 18, 19 ஆகிய நாட்களில் சென்னை அண்ணா பல்கலையில் நிகழ்ந்தது. நிறுவனம் மூன்று நூல்களை வெளியிட்டுள்ளது.

✧ நடுவண் அரசின் பண்பாட்டுத்துறை அமைச்சகம் வழி வரப்பெற்ற நல்கையுதவியுடன் தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் ஆகிய மொழிகளில் கவிதைத் திருவிழாக் கருத்தரங்கு நடத்தப்பெற்றது.

✧ இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கின் 35-ஆம் கருத்தரங்கினை விருந்தோம்பல் நிறுவனமாக அமைந்து இந்நிறுவனம் நடத்தியது.

✧ தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் தமிழ் வளர்ச்சி இயக்கவழி இலக்கியச் சொல்லடைவுத் திட்டம் தொடங்கப் பெற்றுள்ளது.

✧ தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து தமிழ் முதுகலை மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்டம், முனைவர் பட்ட வகுப்புகள் தொடங்கி நடத்தச் செயன்மைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

✧ டாக்டர் வ.சு.ப. மாணிக்கனார் இலக்கிய ஆய்வுக் கருத்தரங்கினை மேலைச்சிவபுரித் தமிழ்க் கல்லூரியில் நடத்தவுள்ளது. ◆

# மும்பை மாணவ, மாணவியருக்கு இலவச தமிழ்ப் பாடநூல்கள்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மகாராஷ்டிர மாநிலம், மும்பையில் வசித்து வரும் தமிழ்க் குழந்தைகளின் தமிழ்க் கல்வி மேம்பாட்டிற்காக, நகராட்சி மற்றும் தனியார் பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் தமிழ்ப் பாட நூல்களை இலவசமாக வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

மகாராஷ்டிர மாநிலம், மும்பை மாநகரில், வசித்து வரும் தமிழர்கள், அங்கு 72 நகராட்சி மற்றும் தனியார் பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 7–ஆம் வகுப்பு வரை 40,320 மாணவ, மாணவிகள் பயின்று வருவதாகவும், 25 நகராட்சி மற்றும் தனியார் பள்ளிகளில், 8–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை 6,000 மாணவ, மாணவிகள் பயின்று வருவதாகவும், அவர்களுக்கு, தமிழ்நாட்டில் கற்பிக்கப்படும் தமிழ்ப் பாட நூல்களைக் கொண்டே தமிழ்ப் பாடம் கற்பிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்து, இந்த மாணவ மாணவியர்கள் தடையின்றித் தமிழ்க் கல்வி பயின்றிட ஏதுவாக இவர்களுக்குத் தமிழ்ப் பாட நூல்களை இலவசமாக வழங்கிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மும்பை வாழ் தமிழ் மக்கள் விடுத்த கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து, தமிழ் மொழிப் பாடம் கற்கும் குழந்தைகளுக்குத் தேவையான வசதிகளையும், உதவிகளையும் செய்து தர வேண்டியது கடமை என்ற உயரிய சிந்தனையின் அடிப்படையில் மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் வசிக்கும் மாணவ, மாணவியர்களின் தமிழ்க் கல்வி மேம்பாட்டிற்காக மொத்தம் 7 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான தமிழ்ப் பாடப் புத்தகங்களைத் தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலமாக இலவசமாக வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த உத்தரவினால், மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் 1–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை தமிழ் மொழிப் பாடம் பயிலுகின்ற மொத்தம் 46,320 மாணவ, மாணவியர்கள் பயன் அடைவார்கள். •

# கடலூரில் சுற்றுலா கோடை விழா

கடலூர் சில்வர் பீச்சில் சுற்றுலா கோடை விழா 23, 24, 25.7.2004 ஆகிய மூன்று நாட்கள் அரசு சார்பில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

முதல் நாள் நிகழ்ச்சியான 23.7.2004அன்று கோடை விழா மற்றும் பல்துறை பணி விளக்கக் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ககன்தீப் சிங் பேடி,இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து, அரசுத்துறை அரங்குகளைப் பார்வையிட்டார். பின்னர், அரசின் மூன்றாண்டுச் சாதனை மலரை வெளியிட்டு மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது:

"சில்வர் பீச்சை மேம்படுத்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இங்கு சிமெண்ட் சாலை, குடில்கள், பார்வை கோபுரம், படகு குழாம், குழந்தைகள் பூங்கா, உயர்மின் கோபுர விளக்கு, சுற்றுலாப் பயணிகள் உட்கார்ந்து இளைப்பாற கல் இருக்கைகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் செயல்படும் கடல் மீன் உணவகமும், மகளிர் தயாரிப்பு பொருட்கள் விற்பனையும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

அரசுத்துறை மூலம் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை, பொதுமக்கள் அதிக அளவில் பார்வையிட்டு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், வழங்கப்படும் நிதி உதவிகள் பற்றிய விவரங்களை அறிந்து பயன்பெற வேண்டும்.

தேவனாம்பட்டினம் பாலம் கட்ட ரூ.1 கோடியே 35 இலட்சம் மதிப்பிலான முன்மொழிவு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் அரசு ஆணை பெறப்பட்டு பாலம் கட்டத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறினார்.

முதல் நாளான 23.7.2004 அன்று கடலூர் ராகஸ்ரீ ஆர்கெஸ்ட்ரா, கடலூர் அரசு இசைப்பள்ளி மாணவர்களின் மங்கள இசையுடன் நிகழ்ச்சி தொடங்கியது. பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள், 5 வயது முதல் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான மாறுவேடப் போட்டி, தஞ்சாவூர் மண்டல கலைப்பண்பாட்டு மையம் மற்றும் கடலூர் மாவட்ட கலை மன்றம் இணைந்து வழங்கிய கலைமாமணி சிங்கம்புணரி தங்கராஜ் குழுவினரின் நாட்டுப்புற ஆடல், பாடல், கலை நிகழ்ச்சி, தென்னகப் பண்பாட்டு மையம் வழங்கிய பாண்டிச்சேரி ஜெய்மூர்த்தி குழுவினரின் கரகம், கோலாட்டம், கும்மி, கிராமிய ஆடல், பாடல் நிகழ்ச்சி, ஒட்டல் உரிமையாளர்கள் சங்கம் வழங்கிய மதுரை நட்சத்திராலயா குழுவினரின் பல்சுவை நிகழ்ச்சி ஆகியவை நடைபெற்றன.



இரண்டாம் நாளான 24.7.2004 அன்று 'சிவா ரிதம்ஸ்' ஆர்கெஸ்ட்ரா, பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள், புதையல் வேட்டை,கைப்பந்து, கபாடி போட்டிகள், நாய் கண்காட்சி, ருசிமிக்க உணவு தயாரிப்புப் போட்டி, கொழு கொழு குழந்தை போட்டி, கராத்தே நிகழ்ச்சி, அரசு இசைப்பள்ளி மாணவ, மாணவியரின் தமிழ் அமுது நாட்டிய நிகழ்ச்சி, தினமலர் நாளேடு வழங்கிய மதுரை "காமெடி பாய்ஸ்" நிகழ்ச்சி, பேருந்து உரிமையாளர்கள் வழங்கிய 'தரங்கினி கலை நிகழ்ச்சி' போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



வேண்டும் என்பதுதான். மாண்புமிகு முதலமைச்சர் ஆட்சியில் தான் மகளிர் சுயஉதவிக் குழு தொடங்கப்பட்டு, பெண்கள் சுயமாக சம்பாதிக்க வழி வகுத்து இன்று பல்வேறு தொழில்களை அவர்கள் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். மக்களுக்காகப் பாடுபட்டு வரும் அரசு இந்த அரசு” என்றார்.

விழாவில், பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்றவர்களுக்குப் பரிசுகளும், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளும் வழங்கி மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. அ. மில்லர் அவர்கள் பேசும் போது தெரிவித்ததாவது:

நாய்கள் கண்காட்சி மற்றும் ருசிமிக்க உணவு தயாரிப்புப் போட்டி, மாறுவேடப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சியரின் துணைவியார் டாக்டர் ஜெய்தீப் பேடி அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

கோடை விழா நிறைவு நாள் நிகழ்ச்சியில், மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. அ. மில்லர் ஆகியோர் கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டனர்.

மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம் அவர்கள், அரசுத்துறை சார்பில் சிறப்பாக அரங்கு அமைத்து முதலிடம் பெற்ற வேளாண்மைப் பொறியியல் துறை, இரண்டாமிடம் பெற்ற மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மூன்றாமிடம் பெற்ற கடலூர் நகராட்சி ஆகியவற்றிக்குப் பரிசுகள் வழங்கியும், 3 நாட்களும் பல்வேறு நிகழ்ச்சிகள் வழங்கிய கொடையாளர்கள் மற்றும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற உதவிய அரசு அலுவலர்களுக்குப் பொன்னாடை அணிவித்து பேசும் போது தெரிவித்ததாவது:

“பொதுமக்கள் இக்கோடை விழாவில் அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளைப் பார்வையிட்டு, அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், வழங்கப்படும் உதவிகள் ஆகியவற்றை அறிந்து பயன்பெற வேண்டும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் எண்ணம் அரசின் உதவிகள், திட்டங்கள் பொது மக்களை முழுமையாகச் சென்றடைய

“மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் சுற்றுலாத்துறை மேம்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் சுற்றுலாத் துறையின் மீது தனிக்கவனம் செலுத்தி வருகிறார். இந்த ஆண்டு சுற்றுலாத் துறையின் மேம்பாட்டிற்கு ரூ.30 கோடியே 35 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

2003–04ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறை மூலம் ரூபாய் 2 கோடியே 45 இலட்சம் வருமானம் பெறப்பட்டுள்ளது. கடலூர் மாவட்டம் சுற்றுலாத் துறையில் இரண்டாம் இடம் பெற்றுள்ளது. கடலூரில் உள்ள பிச்சாவரம், பரங்கிப்பேட்டை போன்ற கடற்கரைப் பகுதிகளை மேம்பாடு செய்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது” என்றார்.

இவ்விழாவிற்கு, மாவட்ட ஆட்சியர் திரு. ககன்தீப் சிங் பேடி,இ.ஆ.ப., தலைமையேற்றார். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. ஆ. அருண்மொழித் தேவன் முன்னிலை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. மு. கணேசன் வரவேற்புரையாற்றினார்.

விழாவில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எம்.சி. சம்பத், திரு. பி.எஸ். அருள், திரு. என். இராமு, கடலூர் நகர்மன்ற துணைத் தலைவர் திரு. ஜி. குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட ஊராட்சித் தலைவர் டாக்டர் சண்முக சுந்தரம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நிறைவு நாள் நிகழ்ச்சியாக தஞ்சாவூர் மண்டல கலை பண்பாட்டு மையம், கடலூர் மாவட்ட கலை மன்றம்

இணைந்து வழங்கிய செங்கை விநாயகா நாட்டியாலயா நாட்டிய நிகழ்ச்சியும், கடலூர் மாவட்ட திரையரங்க உரிமையாளர்கள் சங்கம் நடத்திய திரைப்பட நட்சத்திரங்களின் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது.



நாள்தோறும், கோடை விழா கண்காட்சி அரங்கில் அரசின் சாதனை விளக்க படக்காட்சி, செய்தி மக்கள் தொடர்புத்துறை மூலம் பொதுமக்களுக்குக் காண்பிக்கப் பட்டது.

இக்கோடை விழா, பல்துறை பணி விளக்கக் கண்காட்சியில் வேளாண் பொறியியல் துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கூட்டுறவுத் துறை, வேளாண்மைத் துறை, சுற்றுலாத்துறை, செய்தி–மக்கள் தொடர்புத் துறை, நகராட்சி, காசநோய்த்துறை, தொழுநோய்த்துறை, சுகாதாரத்துறை, சித்த மருத்துவம், மகளிர் திட்டம், வனத்துறை, கைத்தறி மற்றும் துணிநூல் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, தோட்டக்கலைத் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, தாட்கோ, சமூக நலத்துறை, ஊட்டச்சத்துத்துறை, கல்வித்துறை, கதர் கிராம தொழில் வாரியம், சிறுசேமிப்பு, ஆவின், போக்குவரத்துத் துறை, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, மாவட்ட தொழில் மையம், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆகிய துறைகளின் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

கோடை விழா மற்றும் பல்துறை பணி விளக்க முகாம் கண்காட்சியினைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் நாள்தோறும் கண்டு களித்தனர். ஒவ்வொரு துறையின் சார்பில், அரசின் சாதனைகள் குறித்த விளக்கக் கையேடுகள் விநியோகம் செய்யப்பட்டன.

செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அரங்கு அமைத்து, அரசின் மூன்றாண்டுச் சாதனை குறித்து, பொது மக்களுக்கு விளக்கப்பட்டது. நாள் தோறும், அரசின் மூன்றாண்டுச் சாதனை குறித்த சிறு கையேடு, மற்றும் "நாட்டு மக்கள் நலன் காக்க அரசின் புது அறிவிப்புகள்" கையேடும் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

– என். பாலையா,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கடலூர்.

## சில துளிச் செய்திகள்

- தாவரங்களின் உணவில் நைட்ரஜன், பொட்டாசியம், பாஸ்வரம், மக்னீசியம், கந்தகம், இரும்பு போன்ற வேதிப் பொருள்கள் சேர்ந்துள்ளன.
- பாம்பு, பல்லி, ஆமை, முதலை போன்ற ஊர்வனவற்றில் ஏறத்தாழ 5 ஆயிரம் வகைகள் உள்ளன.
- உலகில் ஏறத்தாழ 500 எரிமலைகள் உள்ளன.
- மனித உடலில் மொத்தம் 206 எலும்புகள் இருக்கின்றன.
- ஐக்கிய நாடுகள் அவை 1945ஆம் ஆண்டு ஜூன் 26ஆம் நாள் நிறுவப்பெற்றது.
- பிரான்ஸ் தலைநகர் பாரீசில் உள்ள ஈபில் கோபுரத்தின் உயரம் 984 அடி.
- ஒட்டகச் சிவிங்கி 20 அடி உயரம் வரை வளரும்.
- ஒட்டகம் ஒரே நேரத்தில் 90 லிட்டர் தண்ணீர் குடிக்கும்.
- ஸ்காட்லாந்துக்கு அருகிலிருக்கும் ஸ்டாபா தீவில் உள்ள பிங்கல் எனும் குகையில் எழுப்பப்படும் எதிரொலிகள் இசைக்கருவிகளில் இருந்து மீட்டும் இசை போல நீண்ட நேரம் கேட்கிறதாம்.
- X–கதிர்கள் தற்செயலாக 1895இல் கண்டுபிடிக்கப்பட்டவை.

# செக்கிழுத்த செம்மல்

**தே**சியத் திருவிளக்கு, தமிழ்நாடு தந்த தவப்புதல்வர், செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் அவர்கள் அரசியல் தலைவராகவும் அறிஞர் பெருமகனாராகவும், விடுதலைப் போராட்ட வீரராகவும், புகழ் வாழ்வு வாழ்ந்த புனிதர்.

வ.உ.சி. அவர்களின் வரலாறு, இந்தியத் தாயின் எழுச்சி வரலாறு.

செந்தமிழ்த்தாயின் சிறப்பு வரலாறு!

ஒட்டப்பிடாரத்தில், வ.உ.சி. தோன்றினார். தந்தை உலகநாதர். தாயார் பிரமாயி அம்மாள். 5.9.1872 கப்பலோட்டிய தமிழர், செக்கிழுத்த செம்மல் சிதம்பரம் பிள்ளை பிறந்த திருநாள்.

செல்வக்குடியில் அறிவார்ந்த பெருமக்கள் வழியிலே தோன்றியவர் வ.உ.சி. அவரது இளமைக்கல்வி ஒட்டப்பிடாரத்தில் தொடங்கியது.

அரிச்சுவடி, ஆத்திச்சூடி, எண்சுவடி, உலகநீதி, கொன்றைவேந்தன், குழிப்பெருக்கம், நளவெண்பா, மூதுரை, வெற்றிவேற்கை போன்ற நூல்களைச் சிதம்பரனார் இளமையில் பயின்றார்.

தெய்வத் தமிழைக் கற்ற சிதம்பரனாருக்கு ஆங்கிலம் கற்பிக்கும் பள்ளி அருகே இல்லாததால், உலகநாதபிள்ளை மகனுக்காக ஒரு பள்ளியை அமைத்தார். ஊராருக்கும் அது உதவியாய் அமைந்தது.

அடிப்படைக் கல்வியை ஒட்டப்பிடாரத்தில்' முடித்த சிதம்பரனார், தொடர்ந்து கற்கத் தூத்துக்குடி சென்றார்.



சேவியர் உயர்நிலைப்பள்ளியில், இடைநிலைக்கல்வி, கால்டுவெல் உயர்நிலைப்பள்ளியில் சில காலம் கல்வி, பின் மறுபடி சேவியர் உயர்நிலைப்பள்ளியில் பள்ளி இறுதி. இப்படித் தொடர்ந்த பள்ளிக் கல்வி பாங்குற முடிந்தது.

திருநெல்வேலியில் இந்துக் கல்லூரி இவரையழைத்தது. பின்னர் திருமந்திரநகர் எனச் சிதம்பரனாரால் அழைக்கப்படும் தூத்துக்குடியிலேயே உயர் கல்வி தொடர்ந்தது.

ஆங்கிலம், அருந்தமிழ் இரண்டிலும் அறிஞரானார்!
இந்த அறிவையளித்த ஆசிரியர் அனைவரையும் மறவாமல், வ.உ.சி. சுயசரிதை என்னும் தம் கவிதை நூலில் வாயாரப் புகழ்கிறார்.

சிதம்பரனாருக்கு 23 வயதிலேயே திருமணம் நிகழ்ந்தது. திருச்செந்தூர்த் திருவாளர் சுப்பிரமணிய பிள்ளையின் திருமகள் வள்ளியம்மையை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார்.

**வழக்கறிஞர் வ.உ.சி.**

சிதம்பரனாரின் பாட்டனார், தந்தையார், பெரிய தந்தையார் ஆகிய அனைவருமே வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டவர்கள். வாழையடி வாழையென வந்த வழக்கறிஞர் தொழில் வ.உ.சி. அவர்களையும் இழுத்தது. திருச்சிராப்பள்ளியில் சட்டக் கல்வியைத் திறனுடன் பெற்று 1895 – ஆம் ஆண்டு வழக்கறிஞரானார்.

உரிமையியல், குற்றவியல் இந்த இரண்டு துறையிலும் சிறந்து விளங்கிய சிதம்பரனார் குற்றவியல் துறையில் வல்லுநராக விளங்கினார். நீதிபதிகளும் அஞ்சும் வண்ணம் நேர்மையின் இருப்பிடமாய் வ.உ.சி. விளங்கினார்.

ஒட்டப்பிடாரத்தில் தொடங்கிய வழக்கறிஞர் பணி 1900 ஆம்

ஆண்டிலிருந்து தூத்துக்குடியில் தொடர்ந்தது. வாதத்திறமையால் வெற்றி மேல் வெற்றி பெற்ற வ.உ.சி.அவர்கள் இல்லத்தில் செல்வம் செழித்தது. எல்லையில்லா நிதி ஈட்டினார்.

இந்நிலையில் 1901–ஆம் ஆண்டில் வள்ளுவன் கண்ட இலக்கணத்தின்படி வாய்ந்த வாழ்க்கைத் துணைவியாகிய வள்ளியம்மையார் இயற்கை எய்தினார்.

மறுமணம் வேண்டாம் என மனவுறுதி கொண்டிருந்த பிள்ளையவர்கள், பின் முதல் மனைவியின் குடும்பத்திலேயே மீனாட்சியம்மையை மணம் புரிந்து கொண்டார். நான்கு ஆண் மக்களும் நான்கு பெண் மக்களும் சிதம்பரனாரின் செல்வங்களாகத் தோன்றினார்கள்.

மாந்தருக்குள் கீழ்மேல் என்று கருதும் பைத்தியங்களுக்கு அவர் என்றும் எதிரி. ஆகவே தான் சென்னையில் இருந்த சுவாமி சகஜானந்தர் என்னும் அரிசனப் பெரியாரை அழைத்துச் சென்று தம்முடனே வைத்துக் கொண்டார்.

புகழ்பெற்ற வழக்கறிஞர். பொருட்செல்வம் நிரம்பியவர். வரையாது வழங்கும் வள்ளல் – இந்தப் பெருமைகளுடன் நில்லாது தமிழாராய்ச்சியும் தத்துவ ஆராய்ச்சியும் நடத்தி வந்தார். ஞான வேட்கை அவரின் இளமை தொட்டு இருந்து வந்த இயல்பு. ஆகவே ‘ விவேக பானு’ என்னும் மாத இதழை அவர் நடத்தி வந்தார்.

கடலாட்சியே வெள்ளையன் ஆட்சிக்குக் கால்கோளாக அமைந்தது என்பதை உணர்ந்த வ.உ.சி., அந்தக் கடலின் ஆட்சியைக் கப்பல் மூலம் கைப்பற்ற 1906 ஆம் ஆண்டிலே ‘சுதேசி நாவாய்ச் சங்கம்’ எனும் சங்கத்தை நிறுவினார்.

‘மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்’ என்றான் பாரதி. அவன் காலத்திலேயே அதை நனவாக்க கீழைக் கடல்வெளியில் வ.உ.சி.யின் இரு கப்பல்கள் மிதக்கத் தொடங்கின.

10 இலட்சம் ரூபாய் பங்கு முதலீட்டில் பிறந்த சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு ஏழைகள் கூட இயன்றதைத் தந்திருந்தனர். வ.உ.சி.யின் முயற்சி திருவினையாக்கியது. அதன் பயனாக ஆதாயம் திரண்டது. ஆனால், ஆங்கிலேய வணிகக் கும்பல் அதிர்ச்சியடைந்தது. சுதேசிக் கம்பெனியை ஒழிக்க எல்லா வழியிலும் முயன்றது.

இந்த நேரத்தில் சிதம்பரனாரின் தேசிய உணர்வு தீவிரமாகியது. இது வெள்ளைக்கார ஆட்சிக்கும், வெள்ளை வியாபாரக் கம்பெனிக்கும் வசதியாகப் போனது.

**தேசியப் புயல்**

பிள்ளையவர்களின் பேச்சு சுதந்திர உணர்வைத் தமிழ்நாடெங்கும் தூண்டியது. அரசியலில் மிதவாதிகள், தீவிரவாதிகள் என இரு பிரிவினர் இருந்த காலம் அது. வ.உ.சி. திலகரைக் குருவாகக் கொண்டு தேசியம் வளர்த்த வீரர். ஆகவே, அவர் தீவிரவாதி. தென்னாட்டிலே சிறந்த விடுதலை வீரர் சிதம்பரனார்தாம் என்று திலகர் பாராட்டுமளவுக்கு நாடெங்கும் தேசியம் வளர்த்த வீரர்.

1905–இல் தேசாபிமானிகள் சங்கம் எனும் சங்கத்தைத் திருநெல்வேலியில் சிதம்பரனார் நிறுவினார். பாமர மக்களுக்கு எழுச்சியூட்ட, தமிழிலே உரையாற்றித் தேசியம் வளர்த்தார் வ.உ.சி. மக்களுக்கெல்லாம் கைத்தொழில் கற்பிக்க ஜனசங்கம் எனும் சங்கத்தை ஏற்படுத்தினார்.

இந்த நேரத்தில் வந்தது 1908ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 9–ஆம் நாள்! அது அரவிந்தகோஷ் மீது தொடரப்பட்ட சதி வழக்கில் ஆறுமாத சிறைத் தண்டனைக்குப் பின் விபின்சந்திரபாலர் விடுதலை செய்யப்படுகிற நாள், அந்நாளைக் கொண்டாடவும், அன்று முதல் “சுயராஜ்ஜியம்” எனும் பத்திரிகை வெளியிடவும், தரும புத்தகசாலை, தரும வைத்தியசாலை, நல்லதோர் பள்ளி இவை நிறுவவும் திட்டங்கள் தீட்டப்பட்டன.

கொதித்துப் போன வெள்ளையராட்சி, ‘கொண்டுவா பிள்ளையை’ என்று கூவிற்று! கலெக்டர் விஞ்சு அழைத்தான். ‘வேண்டாம் ஊர்வலம்’ என்று தடுத்தான்! அரசாங்கத்தை அவமதித்துப் பேசியதற்காக, அரசாங்கமே வழக்குத் தொடர்ந்தது. விசாரணை வந்தது. நாட்டின் ‘அமைதியைக் குலைத்தார், வந்தே மாதரம் என்று கூறி அரசாங்கத்தை அவமதித்தார்!’ என்ற குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டன!

ஆத்திரம் தாங்காத கலெக்டர் விஞ்சு, சிதம்பரனார், சிவா, பத்மநாபர் மூவரையும் சிறைக்கு அனுப்பினான். 1908 மார்ச் 12ஆம் நாள் மாலை 3 மணிக்கு மூவரும் பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

சிதம்பரனாரை விடுதலை செய்ய சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு கொடுக்கப்பட்டது. வெளிவிடச்

சொல்லி ஆணை பிறந்தது. வெள்ளை அரசாங்கம் அடம் பிடித்தது; 'அரசநிந்தனைக் குற்றம்' என்ற புதிய குற்றம் சாட்டி விடுதலை செய்ய மறுத்தது.

வழக்கு நடந்தது; முதலில் மாஜிஸ்டிரேட் வாலஸ், பிறகு மாவட்ட நீதிபதி ஃபின்ஹே வழக்கை விசாரித்தனர். இந்த விசாரணையைக் 'கேலிக் கூத்து' என்று வருணித்தார் சிதம்பரனார்.

**தேசமே திகைத்த தீர்ப்பு**

நீதிபதி ஃபின்ஹேயின் தீர்ப்பு –

அரசாங்கத்தை எதிர்த்துப் பேசியதற்காகக் கிடைத்த தீர்ப்பு – சிதம்பரனாரின் அருகே இருந்த சிறையதிகாரியைக் கூட அதிர்ச்சியடைய வைத்தது.

இருபதாண்டுகள் – அரசநிந்தனைக்கு

இருபதாண்டுகள் – சிவாவுக்கு உடந்தையாய் இருந்தமைக்கு. ஆக மொத்தம் 40 ஆண்டுகள் அந்தமான் சிறையில்.

கூடியிருந்தவர் உள்ளம் பதைத்தார். குமுறத் தொடங்கியது தோழர்கள் உள்ளம். தீரர் சிதம்பரனார். நீதியை நினைத்து நெஞ்சோடு நகைத்தார்.

'தாயை வணங்குவோம்' என்ற முழக்கத்துக்குத் தனிமைச் சிறையா ? தமிழகம் அழுதது.

ஆனால் உறுதி படைத்த உள்ளம் கொண்ட சிதம்பரனார் சித்தம் கலங்கிடவில்லை.

ஃபின்ஹேயின் தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் முறையிடப்பட்டது.

**ஒரு புனித யாத்திரை**

அப்பீல் முடிவதற்குள், அந்தமான் அனுப்ப முடியாததால், கோவை சிறைக்குக் கொண்டு சென்றார்கள். வழி நெடுக மக்கள் கூட்டம். புகை வண்டிப் பயணம், அன்னை பாரதத்தின் விலங்கை ஒடிக்கும் புனிதப் பயணமாயிற்று.

கோவை சிறையில் சிதம்பரம்பிள்ளை பட்ட கொடுமைகள் கூறுந்தரமன்று. சணல் கிழிக்கும் இயந்திரத்தைச் சுற்றினார். கைத்தோல் உரிந்தது; கசிந்தது ரத்தம்!

எண்ணெய்ச் செக்கு. அதை இழுப்பதற்கு மாட்டுக்குப் பதிலாக மாமனிதர் வ.உ.சி. நுகத்தடியைக் கையிலேந்தி வெயிலிலே பகலெல்லாம் இழுத்த பரிதாபம்! அந்த நேரத்திலும் பாரதத்தாயின் ஆலயத்தை வலம் வருவதாகவே அகமகிழ்ந்தார் அவர்.

இதற்கிடையில், அரக்கத்தனமான ஃபின்ஹேயின் தீர்ப்பு ஆங்கிலேயருக்கும் அருவருப்பையூட்டியது. மார்லி பிரபு இந்தத் தண்டனை நியாயமற்றது என உரைத்தார். சென்னை உயர்நீதிமன்றம் சிதம்பரனார் தண்டனையைப் பத்து ஆண்டுகளாகக் குறைத்தும், அதை ஏககாலத்தில் அனுபவிக்குமாறும் தீர்ப்பளித்தது. அதன் பின்னர், லண்டன் பிரிவு கவுன்சிலில் முறையீடு மூலமாக அது ஆறு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

சிதம்பரனார் சிறைக்குச் செல்கையில் வயது முப்பத்தைந்து. வாலிபப் பருவம்! வாழ்வின் இன்பங்கள் அழைக்கிற வேளையில், சிறையிலே தண்டனை; செக்கிழுக்கும் கொடுமைகள்.

குறைக்கப்பட்டது தண்டனைக் காலம்தானே தவிர, தண்டனையல்ல!

1912ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு நாள் மாலை, சிறைச்சாலையின் கதவு திறந்தது. சிங்கம் ஒன்று வெளியே வந்தது. மைத்துனர் அனுப்பிய பட்டுடை தரித்து, கைதியாய்ச் சென்ற வ.உ.சி. அவர்கள், தமிழகத்தார் மன்னனென மீண்டார்.

சென்னை வந்தார் சிதம்பரம் பிள்ளை. மயிலை, சிந்தாதிரிப்பேட்டை, பெரம்பூர் ஆகிய பகுதிகளில் அரிசி, நெய் வாணிபம் செய்து வாழ்ந்தார்; இல்லை, வாடினார் வ.உ.சி. வழக்குரைஞர் பட்டயம் பறிக்கப்பட்டிருந்தது; வழக்காட வழியில்லை.

தென் ஆப்பிரிக்காவிலிருந்த அண்ணல் காந்தியடிகள் அவருக்கு நிதி திரட்டி உதவினார். சிதம்பரனார் துன்பம் கண்டு துடித்தபெருமக்கள் இருவர், ஒருவர் சிவா, மற்றவர் பாரதி. ஈ.எச். வாலஸ் என்ற நீதிபதி தேடி வந்து வக்கீல் சன்னத்தைத் திரும்ப வழங்கியதால் கோவில்பட்டியிலும், தூத்துக்குடியிலும் வழக்குரைஞராயிருந்தார்.

**இறந்தார் என்றும் இருப்பவரானார்**

சிறையிலே அவர் உடல் நலம் சிதைந்தது. பின்னர் வறுமை அவரை வாட்டிக் கொண்டிருந்தது. இந்த இருமுனைத் தாக்குதலால் 1935–இல் சிதம்பரனார் நோய்வாய்ப்பட்டார். இறுதி நேரத்தில் பாரதியாரின் நாட்டுப்பாடலைப் பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டே 1936 நவம்பர் 18 அன்று அவர் உயிர் பிரிந்தது. ❖

நாகை மாவட்டத்தில்

# சம்பா முனைப்பு இயக்கம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் வழக்கமாக நெல் சாகுபடி குறுவையில் 34,200 எக்டரிலும், சம்பாவில் 1,06,000 எக்டரிலும், தாளடியில் 26,800 எக்டரிலும் ஆக கூடுதல் 1,67,000 எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நெல்லுக்கு அடுத்தபடியாக இம்மாவட்டத்தில் கரும்பு, பருத்தி, பயறு வகைப் பயிர்கள், எண்ணெய்வித்துப் பயிர்களான எள், கடலை, தென்னை, காய்கறி, மலர் மற்றும் பழவகைப் பயிர்களும் பயிரிடப்படுகின்றன.

நெல் சாகுபடி இம்மாவட்டத்தில் காவிரி ஆற்றுப் பாசன நீரை மட்டுமே நம்பி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சென்ற ஆண்டு வறட்சி நிலைமையைச் சமாளிக்க கோடைப்பருவத்தில் மாற்றுப் பயிர்த்திட்டம் செயல்படுத்தப்பட்டு எள், நிலக்கடலை, சூரியகாந்தி, பயறுவகைப் பயிர்களும், காய்கறிகளும் இம்மாவட்டத்தில் சோதனைமுறையில் பயிரிடப்பட்டன.



இதன் மூலம் இம்மாவட்ட விவசாயிகள் கணிசமான நிகர லாபம் அடைந்துள்ளனர்.

சென்ற ஆண்டில், வறட்சியின் காரணமாக நெல் சாகுபடி 1,34,917 எக்டரில் மட்டுமே செய்யப்பட்டது. எனவே, இவ்வாண்டில் நெல் சாகுபடியினை சீரிய முறையில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. எனினும் இவ்வாண்டில் குறுவை நெல் சாகுபடி 21,200 எக்டரில் நிலத்தடி நீர் வசதியுள்ள காவிரி ஆற்றுப் பாசனப் பகுதிகளான மயிலாடுதுறை, சீர்காழி மற்றும் செம்பனார்கோவில் கோட்டங்களில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டு தற்சமயம் அறுவடை நடைபெற்று வருகிறது. மகசூல் சராசரியாக எக்டருக்கு 5.8 மெ.டன் கிடைத்துள்ளது.

தற்சமயம் சம்பா சாகுபடிக்கு பாசன நீர் திறந்து விடப்பட்டுள்ள நிலையில் இவ்வாண்டு சம்பா சாகுபடியினை 1,19,000 எக்டரில் மேற்கொண்டு 6.5 இலட்சம் மெ.டன் நெல் உற்பத்தி செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயிகள் உரிய தொழில் நுட்பங்களை மேற்கொண்டு அதிக மகசூல் பெற 14.8.2004 அன்று இம்மாவட்ட விவசாயப் பணிகளை ஆய்வு செய்த வேளாண்மைத் துறை ஆணையர் திரு. ஜக்மோகன்சிங் ராஜ் அவர்கள், மாவட்ட ஆட்சியர் திரு. மா. வீரசண்முகமணி,இ.ஆ.ப. அவர்களுடன் கலந்தாலோசித்து ஒரு மாத காலத்திற்கு தீவிர சம்பா முனைப்பு இயக்கங்கள் இம்மாவட்டத்தில் அனைத்து வருவாய் கிராமங்களிலும் நடத்திட முடிவு செய்யப்பட்டு 16.8.2004 முதல் முனைப்பு இயக்கங்கள் நடைபெற்று வருகின்றன. இம்முனைப்பு இயக்கம் 15.9.2004 முடிய நடத்திடவும் மாலையில் விவசாயிகள் கூட்டம் நடத்தப்பட்டு அவர்களது ஐயங்களைத் தீர்த்து வைத்தல், செயல் விளக்கங்கள் செய்து காட்டுதல் மற்றும் சிறு கருத்துக்காட்சி அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் பயோ டீசல் உற்பத்திக்காக காட்டாமணக்கு, சர்க்கரைக் கிழங்கு மற்றும் சர்க்கரைச் சோளம் ஆகியவற்றைப் பயிரிடவும், இதற்கான ஆலைகள் அமைத்திடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். எனவே, இப்பயிர்களின் முக்கியத்துவம் மற்றும் இதன் சாகுபடி தொழில் நுட்பங்களை ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு சம்பா முனைப்பு இயக்கத்தில் எடுத்துரைக்கப்பட்டு வருகின்றது.

மேலும் நாகப்பட்டினம் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் சம்பா தகவல் மையம் ஒன்று அமைக்கப்பட்டு காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை செயல்பட்டு வருகின்றது. இதன் மூலம் சம்பா சாகுபடி பற்றிய ஐயங்கள், இடுபொருட்கள் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள இத்தகவல் மையத்தை விவசாயிகள் பயன்படுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மையத்தினை விவசாயிகள் தொடர்பு கொண்டு பயன்பெற்று வருகின்றார்கள்.

இது தவிர விவசாயிகளுக்கு விதைகள், உயிர் உரங்கள், நுண்சத்துகள் தடையின்றிக் கிடைத்திட அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களும் விடுமுறை தினமான சனிக்கிழமைகளிலும், 15.9.2004 முடிய திறந்து வைத்து செயல்பட உத்தரவிடப் பட்டுள்ளது.

நாகப்பட்டினம் வேளாண்மை, இணை இயக்குநர் திரு. ஜி. சுவாமிநாதன் தலைமையில் சம்பா முனைப்பு இயக்கத்தில் இம்மாவட்டத்தின் அனைத்து வேளாண்மைத் துறை அலுவலர்களும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த சம்பா முனைப்பு இயக்கங்களில் பங்குகொண்டு உரிய விளக்கங்கள் பெற்று, சம்பா பட்டத்தில் அதிக மகசூல் அடைந்து அதன் மூலம் நல்ல லாபம் பெற்று தங்களது வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்ள நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகளை மாவட்ட ஆட்சியர் திரு. மா. வீரசண்முகமணி,இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**– கா. பேரின்பநாயகம்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
நாகப்பட்டினம்.



# தமிழக அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி பாதிக்கப்படா வண்ணம் தேவையான நிலக்கரி வழங்கப்பட வேண்டும்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் **மன்மோகன்சிங்** அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் எழுதிய கடிதம் (27.8.2004)

இந்திய அரசின் நிலக்கரி நிறுவனங்களால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கப்படும் நிலக்கரி விநியோகத்தின் அளவு போதுமான அளவில் இல்லை என்பதையும், அதனால் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை குறித்து தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விழைகின்றேன். தமிழ்நாடு மின்சார வாரியம் மொத்தம் 2,970 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட 4 அனல் மின் நிலையங்களை இயக்கி வருகிறது. இந்த அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியானது மேற்கு வங்கத்திலுள்ள கிழக்கத்திய நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்தும் மற்றும் ஒரிசா மாநிலத்திலுள்ள மகாநதி நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்தும் இரயில்–கடல்–இரயில் வழியாகக் கொண்டுவரப்படுகிறது.

இந்த அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி ஆண்டுக்கு 14.5 மில்லியன் டன்கள் ஆகும். இந்த அளவு நிலக்கரியை இந்திய அரசின் ஒருங்கிணைப்பு நிலைக்குழு ஒதுக்குகின்றது. மத்திய நிலக்கரித்துறை, இரயில்வேத்துறை, எரிசக்தித்துறை ஆகியவற்றிலிருந்து தலா ஓர் உறுப்பினர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் காலாண்டிற்கு ஒருமுறை கூடி முடிவெடுக்கின்றனர்.

மேற்கண்ட நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து தமிழ்நாட்டில் உள்ள அனல் மின் நிலையங்களுக்கு எடுத்து வரப்படும் நிலக்கரியானது மிக நீண்ட அளவில் இரயில்–கடல்– இரயில் வழியாக எடுத்துவர வேண்டியுள்ளது. அனல் மின் நிலையங்கள் மின் உற்பத்திப் பணியில் ஈடுபடும்போது குறைந்தபட்சம் 21 நாட்களுக்குத் தேவையான நிலக்கரி அந்தந்த மின் உற்பத்தி நிலையங்களில் கையிருப்பாக வைக்க வேண்டும் என்ற நிலையானது நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரி விநியோகம் செய்வது காலதாமதம் ஏற்படும் பட்சத்திலும் அதே போன்று நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து அனல் மின் உற்பத்தி நிலையங்களுக்கு எடுத்து வரப்படும் நிலக்கரி போக்குவரத்தில் ஏற்படும் காலதாமதங்களில் பராமரிப்பதற்கு மேற்கண்ட அனல் மின் நிலையங்களில் 21 நாட்கள் கையிருப்பு நிலக்கரி இருக்க வேண்டும் என்ற அடிப்படை நியதியைக் கூட பின்பற்ற இயலாத சூழ்நிலை உள்ளது.

கடந்த 6 மாதங்களாக மத்திய அரசின் நிலக்கரி நிறுவனங்கள் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குக் குறைவாக நிலக்கரி விநியோகத்தைச் செய்துள்ளது. கடந்த ஜனவரி 2004 முதல் ஜூன் 2004 வரையுள்ள இடைப்பட்ட காலத்தில் வழங்கப்பட வேண்டிய 82.95 இலட்சம் டன் நிலக்கரிக்குப் பதிலாக மேற்கண்ட காலக்கட்டங்களில் 70 இலட்சம் டன் நிலக்கரி மட்டுமே மத்திய அரசு நிறுவனங்களால் தமிழக மின்வாரியத்திற்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று கடந்த ஜூலை 2004 முதல் செப்டம்பர் 2004–க்கு இடைப்பட்ட காலாண்டுப் பகுதிகளில் ஜூலை 2004க்கான நிலக்கரியின் அளவை 11.55 இலட்சம் டன்களாகக் குறைத்து ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய மாதங்களுக்கு 12.55 இலட்சம் டன்களாக பின்னர் உயர்த்தியுள்ளது. ஆனால் உண்மையிலேயே ஜூலை மாதம் தமிழக மின்சார வாரியம் பெற்ற நிலக்கரியின் அளவு 10.31 இலட்சம் டன்கள்தான். மேலும் ஆகஸ்ட் மாதத்திற்கான நிலக்கரி ஒதுக்கீட்டில் 25.8.2004 வரை 9.20 இலட்சம் டன்கள்தான் பெறப்பட்டுள்ளது.

கணிசமான அளவிற்கு நிலக்கரி விநியோகம் குறைந்ததன் விளைவு அனல் மின் உற்பத்தி நிலையங்களில் கையிருப்பில் இருக்க வேண்டிய நிலக்கரியின் அளவு மிகவும் வேகமாக ஒரு இக்கட்டான நிலைக்குக் குறைந்து தற்போது 6 நாட்களுக்குத் தேவைப்படும் அளவிலான நிலக்கரியைத்தான் கையிருப்பில் வைத்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

கடந்த ஜனவரி 2004–இல் மேற்கண்ட அனல் மின் நிலையங்களில் கையிருப்பில் இருந்த நிலக்கரியின் அளவு 17 நாட்கள் போதுமான அளவுக்கு இருந்தது. தற்போது நிலக்கரி விநியோகம் மிகவும் மோசமான ஒரு வீழ்ச்சியில் உள்ளது. மேலும் இது கைக்கும், வாய்க்கும் பற்றாக்குறையான சூழ்நிலையில் உள்ளது. தற்போது கையிருப்பில் இருக்கும் நிலக்கரியின் அளவு மிகவும் அபாய நிலையை எட்டியுள்ளது.

இதே நிலை தொடருமானால் தேவைக்கு ஏற்ப அனல் மின் நிலையங்கள் மின் உற்பத்தி செய்ய முடியாத நிலையை எதிர்கொள்ள நேரிடும். தமிழக மின் தொகுப்பிற்கு மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம்தான் அடிப்படையாக அமைந்துள்ளது. ஒருவேளை நிலக்கரி கட்டுப்பாட்டால் இந்த அனல் மின் நிலையங்களின் உற்பத்தி தடைபடும் சூழ்நிலை உருவாகும் பட்சத்தில் தமிழக மின் தொகுப்பில் மிகப்பெரிய அளவிற்கு மின் தடை உருவாகும்.

நிலக்கரி விநியோக சூழ்நிலை தற்போது மிகவும் ஒரு சிக்கலான சூழ்நிலையை எட்டியுள்ளது. எனவே அனல் மின் உற்பத்தி நிலையங்களில் மின் உற்பத்தி பாதிக்கப்படாத வண்ணம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக்கரியை வழங்குவதற்கு உடனடியாக தாங்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக் கொள்கின்றேன்.

தற்போது மாதம் ஒன்றுக்கு அதிகபட்சம் 10 இலட்சம் டன்கள் என்ற அளவில் நிலக்கரி பெறப்பட்டு வருகின்றது. இதனை குறைந்தபட்சம் மாதமொன்றுக்கு 14.5 இலட்சம் டன்கள் நிலக்கரி என்ற அளவுக்கு ஒதுக்கீடு செய்து வழங்க வேண்டும். நிலக்கரி கையிருப்பு சூழ்நிலை கணிசமான அளவுக்கு அதிகரிக்கப்பட வேண்டும். உற்பத்தி நடைமுறைகள் மேம்படுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளது. உடனடியாக இப்பிரச்சினையில் மேம்பாடு காணப்படாவிட்டால் தமிழ்நாடு மின்சார வாரியம் நிலக்கரி பற்றாக்குறை பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

இச்சூழ்நிலையால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உட்பட்ட அனல் மின் நிலையங்கள் உற்பத்தி பாதிப்பதுடன் இந்த மின் உற்பத்தித் தொகுப்பில் மிகப்பெரிய அளவிற்கு மின்தடை ஏற்படும் சூழ்நிலை உருவாகும். எனவே தாங்கள் இவ்விஷயத்தில் உடனடியாகத் தலையிட்டு தேவையான அளவு நல்ல நிலக்கரி விநியோகம் கிடைப்பதை உறுதி செய்யத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கீழ் இயங்கும் அனல் மின் நிலையங்களில் நிலக்கரி கையிருப்பு 21 நாட்கள் என்ற நிலையை எட்ட இயலும்.



# தமிழகத்திற்கு ரூ.1,682 கோடி நிதி உதவி வழங்கவேண்டும்

**மாண்புமிகு இந்தியப் பிரதமர்** அவர்களுக்கு
**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் எழுதிய கடிதம்
(28.8.2004)

கடந்த 29.7.2004 அன்று நான் தங்களுக்கு எழுதிய கடிதம் குறித்து தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விழைகின்றேன். அக்கடிதத்தில் தமிழ்நாட்டில் மழைப் பற்றாக்குறையால் உருவாகியுள்ள சூழ்நிலை குறித்து தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தேன். அக்கடிதத்தில் மழையளவு பற்றாக்குறை உள்ள மாநிலங்களில் தமிழ்நாட்டையும் இணைத்து அம்மாநிலங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகைகள் தமிழ்நாட்டிற்கும் கிடைப்பதற்கு வழி வகை செய்ய வேண்டும் என்றும் நான் எழுதியிருந்தேன். இந்தக் கடிதம் நடப்பு 2004–2005–ஆம் ஆண்டில் தற்போது பெய்து வரும் தென்மேற்குப் பருவ மழை அடிப்படையில் எழுதுகின்றேன்.

தற்போது 11 மாவட்டங்களில் மழை அளவு விகிதம் மிகப்பெரிய அளவுக்கு மாறுபாடு உள்ளது. நடப்பு மழைக்காலத்தில் சில இடங்களில் 20 சதவிகிதம் அளவிற்குக் கடுமையான பற்றாக்குறை நிலவி வருகின்றது.

இந்தச் சூழ்நிலையிலும் தென்மேற்குப் பருவமழையின் போக்கு மேம்படும் என்று நாங்கள் மிகப்பெரிய அளவில் எதிர்பார்த்து நம்பி இருக்கின்றோம். தென்மேற்குப் பருவமழையால் குஜராத், மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் நல்ல பலனை அடைந்துள்ளன. ஆனால் தமிழகத்தில் நிலைமையோ மிக மோசமான நிலையில் உள்ளது. சமீபத்தில் நான் மழை அளவு குறித்த புள்ளி விவரங்களை ஆய்வு செய்தேன்.

கடந்த 1.6.2004 முதல் 18.8.2004 வரையுள்ள இடைப்பட்ட காலக் கட்டத்தில் தமிழ்நாட்டில் பெய்த மழையின் அளவு வழக்கத்தைவிடக் குறைவாக, அதாவது 26 சதவிகிதம் குறைவாகப் பெய்தது எனக்குத் தெரியவந்தது. மேலும் மேற்கண்ட அதே புள்ளி விவரங்கள் தெரிவிப்பது என்னவென்றால் மாநிலத்திலுள்ள 30 மாவட்டங்களில் 18 மாவட்டங்களில் மழை அளவு வழக்கத்தைவிட 20 சதவிகிதம் குறைவாகத்தான் பெய்துள்ளது என்பதை தெரியப்படுத்துகிறேன். மேற்கண்ட தகவல்களின் மூலம் வறட்சியான சூழ்நிலை உருவாவது தெரிய வருகின்றது.

2004–ஆம் ஆண்டு தென்மேற்குப் பருவமழை குறித்து ஆய்வு செய்த போது கிடைத்த உண்மைநிலை என்னவென்றால் தமிழ்நாட்டில் இந்தப் பருவ நிலையின்போது மிகவும் மோசமான மழை அளவைத்தான் பெற்றுள்ளது தெரிய வருகின்றது. நான் ஏற்கெனவே தமிழ்நாட்டில் வறட்சியின் காரணமாக ஏற்பட்ட நிலை குறித்து ஒரு விரிவான அறிக்கை அனுப்பி அதனைச் சீர் செய்வதற்குத் தேவையான நிதியுதவியும் கேட்டிருந்தேன். தமிழ்நாடு கடந்த 2002–2003 மற்றும் 2003–2004 ஆகிய நிதியாண்டுகளில் கடுமையான வறட்சியை எதிர்நோக்கியதை தாங்கள் அறிந்திருப்பீர்கள். தற்போது 2004லிலும் தென்மேற்குப் பருவமழை பொய்த்துள்ள நிலையில் இப்பிரச்சினையை உடனடியாக கவனமுடன் பரிசீலனை செய்ய வேண்டும் என்று தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

கடந்த 1.2.2004 அன்று தமிழ்நாட்டில் சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் நிலவும் வறட்சியான சூழ்நிலை குறித்து தமிழ்நாடு அரசு தங்களுடையக் கவனத்தை ஈர்ப்பதற்காக ஒரு விரிவான அறிக்கையை அனுப்பி வைத்தது. மேலும் சென்னை மாநகரில் இதுவரை இல்லாத அளவிற்கு குடிநீர்ப் பற்றாக்குறை மிகவும் கடுமையான சூழ்நிலை நிலவுவதை சீர்செய்து அந்நிலையைச் சீரமைத்து மேம்படுத்துவது குறித்து தனியாக ஓர் அறிக்கையை கடந்த 16.1.2004 அன்று தமிழக அரசு அனுப்பியுள்ளது.

நாங்கள் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் வறட்சி நிவாரண நிதி ரூ.1,584 கோடியும் மற்றும் 10.8 இலட்சம் டன் அரிசியும் வேலைக்கு உணவு திட்டத்தை மாவட்டங்களில் செயல்படுத்துவதற்குக் கேட்டிருந்தோம். மேலும் சென்னை மாநகரில் நிலவி வரும் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்வதற்குத் தனியாக ரூ.700 கோடி நிதியுதவியும் ஏற்கெனவே கேட்டிருந்தோம். இந்திய அரசு, இந்தக் கோரிக்கையின்படி ரூ.292.95 கோடி மற்றும் 3.04 டன் அரிசியும் வேலைக்கு உணவு திட்டத்திற்கு வழங்கியுள்ளது.

கடந்த 2003–2004–ஆம் ஆண்டிற்கான வறட்சி நிவாரணப் பணிகள் தொடர்பான மேற்கண்ட மத்திய அரசு வழங்கிய நிதியையும் உணவு தானியத்தையும் வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் முழுமையாகப் பயன்படுத்தியுள்ளோம். வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நாங்கள் மத்திய அரசிடமிருந்து பெற்ற உதவியைவிட அதிக அளவிற்குச் செலவுகள் செய்துள்ளோம்.

கடந்த 1.6.2004–இல் தொடங்கிய தென்மேற்குப் பருவ மழையின் அளவுகளைப் பொருத்து உருவாகியுள்ள நடப்பு 2004–2005–ஆம் ஆண்டிற்கான வறட்சி நிலையின் அடிப்படையில் நாங்கள் மீண்டும் நிதியுதவியைக் கோர வேண்டிய நிலையில் உள்ளோம். கடந்த 2003–2004–ஆம் ஆண்டிற்கான வறட்சி நிவாரண திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு ஒதுக்கிய நிதியையும், அரிசியையும் நாங்கள் ஏற்கெனவே முழுமையாகப் பயன்படுத்தி விட்டோம் என்பதை நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளேன்.

மாநிலத்தில் பல்வேறு பகுதிகள் நடப்பு தென்மேற்குப் பருவமழைக் காலங்களில் போதுமான அளவு மழையளவைப் பெறாததால் உருவாகியுள்ள புதிய வறட்சி சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அதனை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான பணிகளை நாங்கள் தொடங்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

எனவே நடப்பு 2004–2005–ஆம் ஆண்டில் உருவாகியுள்ள வறட்சியை எதிர்கொள்வதற்கு எடுக்கப்பட உள்ள நிவாரணப் பணிகளுக்குத் தேவையான நிதியுதவியையும் மற்றும் அனைத்து உதவிகளையும் முழு அளவில் செய்துதர வேண்டும் என்று நான் தங்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாநகரம் எதிர்கொண்டு வரும் மிகவும் சிக்கலான ஒரு பிரச்சினை குறித்து நான் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விழைகின்றேன். சென்னை மாநகரில் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை நிலவி வருவதில் தங்களுக்கு எந்தவித ஐயமும் இருக்காது என்று நான் நம்புகின்றேன். நடப்பு தென்மேற்குப் பருவ மழைக்காலத்தில் சென்னை மாநகரம் பெற்ற மழையளவு, வழக்கமாகப் பெய்யும் மழையளவைவிட 52 சதவிகிதம் குறைவாகத்தான் பெய்துள்ளது.

அருகிலுள்ள காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெய்துள்ள மழையின் அளவு 64 சதவிகிதம் பற்றாக்குறையுடனும் மேலும் திருவள்ளூர் மாவட்டத்தில் பெய்த மழை அளவில் பற்றாக்குறை 51 சதவிகிதமாகவும் உள்ளது.

சென்னை மற்றும் அருகிலுள்ள மாவட்டங்களிலும் நடப்பு தென்மேற்குப் பருவமழை காலத்தில் போதுமான அளவிற்கு மழை பெய்யவில்லை. இது ஏற்கெனவே உள்ள சூழ்நிலையை மேலும் சிக்கலாக்கி உள்ளது. நாங்கள் இப்பிரச்சினையின் விளைவாக ஒவ்வொரு மாதமும் குடிநீர் வழங்குவதற்காக மேலும் ரூ.27 கோடி கூடுதலாக செலவு செய்து வருகின்றோம். நிலத்தடி நீர் மட்டமும் வெகு வேகமாகக் குறைந்து வருகின்றது. சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காக மிக நீண்ட தொலைவிலிருந்து லாரிகள் மூலம் தேவைப்படும் குடிநீரை வழங்கி வருகின்றோம். இதுபோன்ற சூழ்நிலை வெகு அரிதாகத்தான் ஏற்படும். எனவே இதற்குத் தேவையான முழு நிதியுதவியையும் மத்திய அரசு அளிக்க வேண்டும்.

நடப்பு தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் மழை அளவு பற்றாக்குறை குறித்தும் அதனால் ஏற்பட்ட விளைவுகள் குறித்தும் ஒரு விரிவான அறிக்கை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். பல்வேறு மாவட்டங்களில் மழையளவு மிகவும் குறைவாகத்தான் பெய்துள்ளது. பல மாவட்டங்களில் பெய்த மழையளவு வழக்கத்தைவிட 40 சதவிகிதம் பற்றாக்குறையுடன்தான் பெய்துள்ளது. நடப்பு தென்மேற்குப் பருவமழை போதுமான அளவு பெய்யாததால் கடுமையான பற்றாக்குறை உருவாகியுள்ளது. நான் ஏற்கெனவே சென்னை மாநகரம் மிகப்பெரிய அளவில் பாதிப்புக்குள்ளாகி இருப்பதை தங்களுக்கு விளக்கியுள்ளேன். சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் 3 ஏரிகளும் முற்றிலும் வறண்டு விட்டன. எனவே இந்த நிலையை எதிர் கொள்ளும் விதமாக லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள இப்பிரச்சினை ஒட்டு மொத்தத்தில் மிகவும் ஒரு சிக்கலான சூழ்நிலையாகும்.

நாங்கள் அனுப்பியுள்ள விரிவான அறிக்கையில் நடப்பு தென்மேற்குப் பருவமழை பொய்த்ததால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை எதிர்கொள்வதற்குத் தேவையான நிவாரண வழிமுறைகள் குறித்து விளக்கியுள்ளோம். இதற்கு ரூ.1,682 கோடி நிதியுதவி தேவைப்படும். இந்த நிதியுதவி மட்டுமின்றி கூடுதலாக வேலைக்கு உணவு திட்டத்திற்கு 5.4 இலட்சம் டன் உணவு தானியமும் வழங்க வேண்டும் என்று நான் தங்களை வேண்டி, கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு தொடர்ந்து 3–ஆவது முறையாக கடுமையான வறட்சியைச் சந்தித்துள்ளது. எனவே மத்தியக்குழுவை அனுப்பி தமிழகத்தில் நிலவும் சூழ்நிலை குறித்து ஆய்வு செய்ய உத்தரவிட வேண்டும். மத்தியக் குழுவின் ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் நிதியுதவியும் உணவு தானிய உதவியையும் மழைநீர்ப் பற்றாக்குறை உள்ள மற்ற மாநிலங்களுக்கு வழங்கப்படும் அளவிற்குத் தமிழகத்திற்கும் நிவாரண உதவியும் உணவு தானியமும் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் நிலவும் மிகவும் கடுமையான வறட்சி நிலையை எதிர்கொள்வதற்கும் தேவையான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கும் நிதியுதவியும், உணவு தானியமும் வழங்குவதற்கு உடனடியாக முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, தங்களை வேண்டி கேட்டுக் கொள்கின்றேன். ✱



# இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில், 25.8.2004 அன்று தலைமைச் செயலகத்தில், இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் வழங்கும் வர்த்தக ஆங்கிலச் சான்றிதழ் கல்வியை, தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் கற்பிக்கும் வகையில், தமிழ்நாடு அரசின் தொழில் நுட்பக் கல்வித் துறைக்கும், பிரிட்டிஷ் கவுன்சில் அமைப்புக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. இந்த நிகழ்வின்போது, தென்னிந்தியாவிற்கான பிரிட்டிஷ் துணை ஹை கமிஷனர் திரு.ஸ்டுவர்ட் இன்னஸ் (Mr.Stuart Innes, Deputy High Commissioner, British Deputy High Commission, Chennai) உடன் இருந்தார்.

தகவல் தொழில் நுட்பத்துறை மற்றும் சேவைத்துறை நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் தொழில்நுட்பம், பணி ஈடுபாடு மற்றும் கடமை உணர்வு ஆகியவற்றில் உலக அளவில் சிறந்து விளங்கினாலும், பேச்சுத் திறன், தன்னம்பிக்கை மற்றும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுதல் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் இன்னும் தங்களது திறமையை மேம்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர் என்பது தெரிய வந்துள்ளது.

தமிழ்நாட்டில், உலகளாவிய பன்னாட்டு நிறுவனங்கள் பலவும் தங்களுடைய தொழில் மையங்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தமிழகத்து மாணவர்கள் அந்நிறுவனங்களில் வேலைவாய்ப்பைப் பெருமளவில் பெறும் வகையில், அவர்களுக்கு இத்தகைய திறமைகள் வழங்கப்பட்டு, மேம்படுத்தப்பட வேண்டுமென்று தெரிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இதற்கென ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இந்த ஆணையின்படி தமிழ்நாட்டில் உள்ள மாணவர்கள் சரளமாக



ஆங்கிலத்தில் பேசவும், தங்கள் பேச்சுத் திறனை மேம்படுத்திக் கொள்ளவும், தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும், தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வித் துறை பொறியியல் கல்லூரிகளில் வர்த்தக ஆங்கிலச் சான்றிதழ் கல்வியை வழங்கும் புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது. உலகப் புகழ் வாய்ந்த கல்வி நிறுவனமான இங்கிலாந்து நாட்டின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வழங்கப்பட உள்ள இந்த வர்த்தக ஆங்கிலச் சான்றிதழ் கல்வித் திட்டம் பிரிட்டிஷ் கவுன்சிலுடன் இணைந்து செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், 25.8.2004 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வித் துறையின் சார்பாக தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் திரு. எஸ். கே. பிரபாகர் அவர்களும், பிரிட்டிஷ் ஹை கமிஷனின் பிரிட்டிஷ் கவுன்சில் சார்பாக அதன் பண்பாட்டுத் துறை முதல் செயலர் யூனிஸ் குரூக் (Ms. Eunice Crook, First Secretary (Cultural Affairs), British Council Division, British Deputy High Commission) அவர்களும் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வின் போது, தென்னிந்தியாவிற்கான பிரிட்டிஷ் ஹை கமிஷனர் திரு. ஸ்டூவர்ட் இன்னஸ் (Mr.Stuart Innes, Deputy High Commissioner, British Deputy High Commission, Chennai) அவர்கள் உடன் இருந்தார்.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது குறித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமது மன நிறைவையும், மன மகிழ்வையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்தத் திட்டத்தில் பயன்படுத்துவதற்கான பாடங்களின் வடிவமைப்பு, பயிற்சிக்கான புத்தகங்கள், ஆசிரியர்களுக்கான பயிற்சி ஆகியவை பிரிட்டிஷ் கவுன்சில் மூலமாக ஏற்பாடு செய்யப்படும். தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் இந்த சான்றிதழ் கல்வியை அளிக்கக்கூடிய கல்லூரிகளை ஆய்வு செய்து அனுமதி அளிப்பதுடன், இத்திட்டம் செயல்படும் முறையைக் கண்காணிக்கும். மாணவர்கள் மற்றும் பயிற்சியாளர்களைக் கல்லூரிகள் தேர்ந்தெடுக்கும். இப்பயிற்சிக்கான காலம் மூன்று மாதங்கள் ஆகும்.

வர்த்தக ஆங்கிலக் கல்விச் சான்றிதழ் தேர்வு பிரிட்டிஷ் கவுன்சில் மூலம் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்குக் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் தேர்வுக் குழுவினால் சான்றிதழ்கள் வழங்கப்படும். இந்தச் சான்றிதழ் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். இத்திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் ஏறத்தாழ 12,000 மாணவ, மாணவிகள் பயன் பெறுவார்கள்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் சார்பாக, மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர், நிதித்துறை திரு. என்.நாராயணன், இ.ஆ.ப., உயர் கல்வித்துறைச் செயலாளர், திரு. கே. ஞானதேசிகன், இ.ஆ.ப., ஆகியோரும், பிரிட்டிஷ் கவுன்சில் சார்பாக, தென்னிந்திய தேர்வு சேவைப் பிரிவின் தலைமைப் பொறுப்பாளர் நிரூபா பெர்னான்டஸ், மேலாளர் திரு. டி.கே. அருணாசலம் ஆகியோரும் பங்கேற்றனர். *



# காவல்துறை அலுவலர்களுக்கு ரொக்கப் பரிசு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் வழங்கினார்.

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 8.9.2004 அன்று தலைமைச் செயலகத்தில், ஐதராபாத்தில் அண்மையில் நடைபெற்ற 47–ஆவது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டிகளில் (All India Police Duty Meet, Hyderabad) பதக்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த காவல் துறை அலுவலர்களுக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான ரொக்கப் பரிசுகளை நேரில் வழங்கினார்கள்.

அகில இந்திய காவல் பணித்திறன் போட்டிகள் (All India Police Duty Meet, Hyderabad) இந்த ஆண்டு ஜுன் மாதம் 11ஆம் தேதி முதல் 15ஆம் தேதி வரை ஆந்திர மாநிலம் ஐதராபாத் நகரில் நடைபெற்றன. இந்தக் காவல் பணித்திறன் போட்டிகள் 1) அறிவியல் சார்ந்த புலன் விசாரணை திறன் போட்டி, 2) கணினி திறன் போட்டி, 3) ஒளி/ஒலி படம் எடுத்தல் திறன் போட்டி, 4) நாசவேலைத் தடுப்புத் திறன் போட்டி, 5) நிழற்படம் எடுக்கும் திறன் போட்டி, 6) மோப்ப நாய்கள் திறன் போட்டி ஆகிய ஆறு பிரிவுகளில் நடைபெற்றன. இப்போட்டிகளில் 22 மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசம் மற்றும் 6 மத்திய அமைப்புகள் என 29 காவல்துறைக் குழுக்கள் கலந்து கொண்டன. இதில், காவல் பணி சார்ந்த பல்வேறு போட்டிகளில் பங்கேற்ற தமிழ்நாடு காவல் துறை குழு ஒரு தங்கப்பதக்கம், ஒரு வெள்ளிப் பதக்கம், நான்கு வெண்கலப் பதக்கங்கள் என ஆறு பதக்கங்களையும், நிழற்பட தொழிற் கலைஞர் பிரிவுக்கான சுழற் கோப்பையையும் வென்று, அகில இந்திய அளவில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.



தமிழக காவல் துறை அலுவலர்கள் வென்ற பதக்கங்களின் விவரம்

இது மட்டுமின்றி, நிழற் படம் எடுக்கும் போட்டி பிரிவுக்கான சுழற் கோப்பையைத் தமிழக காவல் துறை குழு வென்றுள்ளது.

### ரொக்கப் பரிசுத் தொகையை அதிகரித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை

அகில இந்திய காவல் பணித் திறன் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்குக் கடந்த ஆண்டில் தங்கப் பதக்கத்திற்கு ரூ.10,000, வெள்ளிப் பதக்கத்திற்கு ரூ.5,000, வெண்கலப் பதக்கத்திற்கு ரூ.3,000 ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டது. தமிழ்நாடு காவல் துறையினர் பணித் திறன் போட்டிகளில் மேலும் திறனுடன் பங்கேற்கவும், பதக்கங்கள் வென்றிடும் வகையில் அவர்களுக்கு ஊக்கம் அளித்திடவும் இந்த ஆண்டு முதல், தங்கப்பதக்கம் வெல்வோருக்கு ரூ.50,000–ம், வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு ரூ.30,000–ம், வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு ரூ.20,000–ம் ரொக்கப் பரிசாக வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 8.9.2004 அன்று தலைமைச் செயலகத்தில், தங்கப்பதக்கம் வென்ற திரு.வி. சந்தானம் அவர்களுக்கு ரூ.50,000, வெள்ளிப் பதக்கம் வென்ற திரு.எஸ்.காமராஜ் அவர்களுக்கு ரூ.30,000, வெண்கலப் பதக்கம் வென்ற திரு.எம்.இ.ராமச்சந்திரமூர்த்தி அவர்களுக்கு ரூ.40,000 (இரண்டு பதக்கங்கள்) மற்றும் திரு.புகழ்மாறன், திரு.ராஜகோபால் ஆகிய இருவருக்கும் தலா ரூ.20,000 ஆகிய ரொக்கப் பரிசுகளுக்கான காசோலைகளை நேரில் வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

இந்த நிகழ்வின் போது, தமிழக அரசின் உள்துறைச் செயலாளர் திருமதி. ஷீலா ராணி சுங்கத்,இ.ஆ.ப., காவல் துறை தலைமை இயக்குநர் திரு.ஐ.கே.கோவிந்த், இ.கா.ப., கூடுதல் காவல் துறை இயக்குநர் திரு.கே.வி.எஸ். மூர்த்தி, இ.கா.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

காவல் துறை சார்ந்த நிழற்படம் எடுக்கும் திறன் போட்டியில், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த காவல் துறை நிழற்படக் கலைஞர் திரு. வி. சந்தானம் தங்கப்பதக்கம் வென்றார்.

போதைப் பொருள்களைக் கண்டுபிடிக்கும் மோப்ப நாய் திறன் போட்டியில், சென்னை தமிழ்நாடு கமாண்டோ பள்ளியைச் சேர்ந்த தலைமைக் காவலர் திரு.எஸ். காமராஜ் வெள்ளிப்பதக்கம் வென்றார். இவர் பயிற்றுவித்த மோப்ப நாயின் பெயர் ஷீபா ஆகும்.

அறிவியல் சார்ந்த புலன் விசாரணைத் திறன் போட்டியில், கால் தடம் பதிவு மற்றும் நிழற்படம் எடுத்தல் ஆகிய இரு பிரிவுகளில் சென்னை காவல் துறை கணினிப் பிரிவைச் சேர்ந்த சார் ஆய்வாளர் திரு.எம்.இ.ராமச்சந்திரமூர்த்தி தனித்தனியே இரண்டு வெண்கலப் பதக்கங்களையும், கைரேகைப் பதிவுப் பிரிவில், வேலூர் மாவட்டம் குருசிலாப்பேட்டை காவல் நிலைய சார் ஆய்வாளர் திரு.புகழ்மாறன் வெண்கலப் பதக்கத்தையும், கணினி திறன் பிரிவில், சென்னை, தமிழ்நாடு கமாண்டோப் பள்ளியைச் சேர்ந்த முதல் நிலைக் காவலர் திரு.வி.ராஜகோபால் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

**தே**சிய கண் தான இருவார விழா ஆகஸ்ட் 25ஆம் தேதியிலிருந்து செப்டம்பர் 8ஆம் தேதி வரை கொண்டாடப்படுகின்றது. இதன் முக்கிய நோக்கம் கண் தானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே ஆகும்.

கண் தானம் என்பது நாம் இறந்த பிறகு கண்களை தானமாக எடுத்து கருவிழி பாதிப்படைந்தவர்களுக்கு பயன்படும்படி பொருத்த அனுமதி வழங்குவதே.

நம் நாட்டில் 10 இலட்சம் பேர் கருவிழி (Cornea) பாதிப்பினால் பார்வையிழந்தவர்கள். இதில் கணிசமானவர்கள் இருபது வயதிற்குட்பட்டவர்கள்.




ஒவ்வொரு ஆண்டும் ஏழாயிரத்திலிருந்து எட்டாயிரம் நபர்களுக்கு மட்டுமே கருவிழி மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படுகின்றது. ஆனால், ஒவ்வொரு ஆண்டும் 15,000 முதல் 20,000 புதிய நபர்கள் ஏற்கெனவே காத்திருக்கும் 10 இலட்சம் எண்ணிக்கையோடு கூடுதலாகின்றனர்.

தானமாக வழங்கிய இறந்தவர்களின் கண்களை சேகரித்து பாதுகாத்து கண் மருத்துவமனைகளுக்கு கருவிழி மாற்று அறுவை சிகிச்சைக்காகக் கொடுக்கும் நிறுவனம்தான் கண் வங்கி. இந்தியாவிலேயே முதன் முறையாக கண்வங்கியை ஆரம்பித்ததும் கருவிழி மாற்று அறுவை சிகிச்சை செய்ததும் சென்னையில் உள்ள அரசு கண் மருத்துவமனையில்தான். இதை 1948ஆம் ஆண்டு செய்தவர் மருத்துவர் முத்தையா என்பவர்.

கருவிழி (கார்னியா) என்பது கருப்பானது அல்ல. இது கைக்கடிகாரங்களில் முன்புறம் பொருத்தப்பட்டுள்ள ஒளி ஊடுருவும் கண்ணாடி போன்றது. இந்தப் பகுதியில் ஏதேனும் வெண்மை படர்ந்தால் ஒளி ஊடுருவிச் செல்ல முடியாமல் பார்வை பாதிக்கப்படுகின்றது. இந்த வெண்மை படர்வதற்குக் காரணங்கள் பின்வருமாறு: 1.கருவிழியில் புண் அல்லது காயம், 2.புரதச்சத்து மற்றும் வைட்டமின் 'ஏ' குறைபாடு, 3.பிறவியிலேயே கருவிழியில் குறைபாடு, 4.தட்டம்மை, சின்னம்மை பாதிப்பு, 5.கண்ணீர் பற்றாக்குறை, 6.தவறான மருந்துகளை உபயோகித்தல்.

வெண்மை படிந்த கருவிழியை எடுத்துவிட்டு இறந்தவரின் தெளிவான கருவிழியை பொருத்துவது தான் கருவிழி மாற்று அறுவை சிகிச்சை என்பது. மற்ற மாற்று உறுப்பு அறுவை சிகிச்சைகளை விட இதில் ஒவ்வாமை மிகவும் குறைவு. அதனால் இந்த அறுவை சிகிச்சையில் நல்ல வெற்றி வாய்ப்பு உள்ளது.

கண் தானம் எப்படி செய்வது என்பதைப் பார்ப்போம். கண் வங்கிகளில் கண் தான உறுதிப்பத்திரங்கள் பெற்று அதில் நம் பெயர், முகவரி முதலானவைகளைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். பிறகு நமக்கு கண் தான அட்டை வழங்கப்படும். நம் விருப்பத்தை நம் நெருங்கிய உறவினர்களுக்கோ, பிள்ளைகளுக்கோ அல்லது நண்பர்களுக்கோ சொல்லி வைக்க வேண்டும். இறந்தவர்கள் கண் தான உறுதிப்பத்திரம் பூர்த்தி செய்து கொடுக்காவிட்டாலும் நெருங்கிய உறவினர்கள் விரும்பினால் கண் தானம் செய்யலாம்.

இறந்தவர்களின் கண்கள் கெடாமல் பாதுகாப்பதற்கு கண்களை மூடி வைக்க வேண்டும். அதன் மேல் ஈர பஞ்சினை வைக்கலாம். தலையை ஒன்று அல்லது இரண்டு தலையணைகளால் உயர்த்தி வைக்க வேண்டும்.

**கண் தானம் பற்றி தெரிய வேண்டிய சில அரிய தகவல்கள் :**

1. கண் தானம் செய்வதில் பெரியவர், சிறியவர் என்றோ ஆண், பெண் என்றோ வேறுபாடு இல்லை. இரத்த இன வேறுபாடும் இல்லை.

2. கண் தானம் என்பது ஒருவர் இறந்தவுடன் அவருடைய கண்களை, இறந்த 6 மணி நேரத்திற்குள் எடுத்துவிட வேண்டும்.

**மரு. கு. மோகன்ராஜ்**, எம்.எஸ்.டி.ஒ.,
திட்ட இயக்குநர்,
தமிழ்நாடு மாநில கண்பார்வை இழப்பு
தடுப்புச் சங்கம்




3. கண் தானம் பற்றிய தகவலை கண்வங்கிகளுக்குத் தெரிவித்தவுடன் மருத்துவர் வீட்டிற்கே வந்து கண்களை எடுத்து கண்வங்கியில் சேர்ப்பார்.



அறுவை சிகிச்சைக்கு முன்



அறுவை சிகிச்சைக்குப் பின்

4. கண்களை எடுக்க 15 முதல் 20 நிமிடங்கள் ஆகும். இதனால் முகத்தில் விகாரம் ஏற்படாது.

5. ஒருவர் கண் தானம் செய்தால் இருவர் பார்வை பெறுவர்.

6. எடுத்த கண்களை அநேகமாக 24 முதல் 48 மணி நேரத்திற்குள் உபயோகப்படுத்துவார்கள்.

7. இறந்தவர்களின் முழு கண்களை மற்றவர்களுக்கு பொருத்த முடியாது. கருவிழி மட்டும் தா்ன் பொருத்த முடியும்.

8. சென்னையில் மிகச் சிறப்பாக செயல்பட்டு வரும் கண்வங்கி, அரசு கண் மருத்துவமனையில் உள்ள அரிமா கண் வங்கி ஆகும். இதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் பின் வருமாறு – 28555281 அல்லது 28553840. மற்ற மாவட்டங்களில் உள்ளவர்கள் அங்குள்ள கண் வங்கிகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டும்.

9. அரசு கண் மருத்துவமனையில் கருவிழி மாற்று அறுவை சிகிச்சை முற்றிலும் இலவசமாக செய்யப் படுகின்றது.

இவ்வுலகில் பிறந்த யாவரும் வாழ்ந்து கடைசியில் இறந்தே ஆக வேண்டும் என்பது இயற்கை நியதி. இதிலிருந்து யாரும் தப்ப முடியாது. இறந்த பிறகு யாரும் எதையும் கொண்டு செல்லவும் முடியாது. இத்தருணத்தில் ஒருவர் இறந்தவுடன் எரித்து விடுகின்றோம் அல்லது புதைத்து விடுகின்றோம். அவ்வாறு செய்யும் போது இறந்தவரின் உடல் எரிந்து சாம்பலாகி விடுகின்றது. அல்லது மண்ணில் புதைந்து மண்ணோடு மண்ணாகி விடுகின்றது. இப்படி வீணாகும் மனித உறுப்பாகிய கண்களைப் பிறருக்குத் தானமாகக் கொடுப்பதனாலும், அதன்மூலம் மற்றவர்கள் பெறும் பார்வையினாலும் நம் வாழ்நாளுக்குப் பின்னரும் நம் உறுப்பு இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்ற மனநிறைவும், மட்டற்ற மகிழ்ச்சியும் நமக்குக் கிடைக்கும். கண் தானம் கொடுப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் கண் தானத்திற்காகப் பதிவு செய்து காத்திருப்போரின் எண்ணிக்கை குறையும்.

**"கண்களை தானமாகக் கொடுப்பீர்; இருவர் வாழ்வினை ஒளி பெறச் செய்வீர்''**

# முந்து தமிழ்க் கல்வெட்டுகள்



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் மாதாந்திரச் சொற்பொழிவு வரிசையில் ஆகஸ்ட் மாதச் சொற்பொழிவு தரமணியிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. "முந்து தமிழ்க் கல்வெட்டாய்வு – அண்மைக் கால வளர்ச்சி" என்ற தலைப்பில் ஐராவதம் மகாதேவன் சொற்பொழிவு நிகழ்த்தினார். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் மதுரைக்கருகிலுள்ள மாங்குளம், கீழவளவு, கேரளத்திலுள்ள எடக்கல் ஆகிய ஊர்களில் தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டபோதும் 1906இல் இந்தியத் தொல்லியல் துறைக் கல்வெட்டாய்வாளர் வெங்கையாதாம் இவை அசோகன் பிராமி எழுத்துகளில் அமைந்திருப்பதைக் கண்டறிந்து வெளிப்படுத்தினார். ஆனாலும் இவை பிராகிருத மொழிக் கல்வெட்டுகள் என்றே அவர் கருதினார். 1919இல் ஹெச். கிருஷ்ணசாஸ்திரி, இக்கல்வெட்டுகளில் திராவிட மொழி குறிப்பாகத் தமிழ் இடம் பெற்றிருக்கலாம் என்ற கருத்தை வெளியிட்டார். "ள" என்ற தமிழ் பிராமி எழுத்து இக்கல்வெட்டுகளில் இடம் பெற்றிருப்பதையும் கண்டறிந்தார். 1924இல் கே.வி. சுப்பிரமணிய ஐயர் 'ழ, ள, ற, ன' என்ற தமிழுக்கே உரிய எழுத்துகள் இக்கல்வெட்டுகளில் இடம் பெற்றிருப்பதைக் கண்டறிந்தார். 1964இல் புகளூர்(கரூர்)க் கல்வெட்டில் சேர அரசர் பரம்பரையும், மாங்குளம் கல்வெட்டில் பாண்டிய மன்னர் நெடுஞ்செழியனும் குறிப்பிடப்பட்டிருப்பதை ஐராவதம் மகாதேவன் வெளிப்படுத்தினார். மேலும், இக்கல்வெட்டுகளில் 75% தமிழ்ச் சொற்களும் 25% பிராகிருதச் சொற்களும் கலந்து எழுதப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளில் கி.பி.7–13ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையிலான பல்லவர், சோழர் கல்வெட்டுகளை விட வடமொழிக் கலப்பு குறைவே. மேலும் தமிழ்ச் சொற்றொடரமைப்பு, வினைச் சொல் வடிவங்கள் ஆகியவையே இக்கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

சித்தன்னவாசல் கல்வெட்டில் சிறுவாசல் (சித்தன்னவாசல்) என்பது சிறுபோசில் எனக் குறிப்பிடப்படுகிறது. போசில் என்பது வாசல் என்பதற்குரிய கன்னடச் சொல்லாகும்.

தாய்லாந்தில் கண்டறியப்பட்டுள்ள "பெரும்பதன்கல்" எனப் பொறிக்கப் பட்ட பொன் உரைகல், க்வாஸிர் அல்காதிம் துறைமுகத்திலும் பெரனி கேயிலும் கண்டறியப்பட்ட பானை ஓடுகளில் கணன் சாதன், கொ(ற்)ற பூமான் ஆகிய தமிழ் பிராமிப் பொறிப்புகள் ஆகியவை, தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட வணிகர்களும், பொற் கொல்லர் (பத்தன்) போன்ற கைவினைஞர்களும் உலகின் பல பகுதிகளுக்குச் சென்று தொழில் புரிந்துள்ளனர் என உணர்த்து கின்றன.

இக்கல்வெட்டு வழக்குகளையும் இலக்கிய வழக்குகளையும் இணைத்து ஆராய்ந்து தமிழ் மொழிக்கு வரலாற்று முறை இலக்கணம் தயாரிக்கப்பட வேண்டும். இது மிகவும் அவசியமான பணியாகும் என்று ஐராவதம் மகாதேவன் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் 90 இடங்களில் பாறைகள், குன்றுகளில் பொறிக்கப் பட்டுள்ள தமிழ் பிராமிக் கல்வெட்டு களை டிஜிட்டல் நிழற்படம் எடுத்து, கணினி மூலமாகத் தெளிவான பிரதிகள் எடுத்தல், வண்ண வீடியோ படம் எடுத்தல், இக்கல்வெட்டுகளை மழை, வெயிலிலிருந்து பாதுகாத்தல் ஆகிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கல்குவாரிகளால் ஏற்படும் சிதைவுகளிலிருந்தும் இக்கல்வெட்டுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ள பாறைகளைச் சுற்றி மேற்கூரையுடன் கூடிய செங்கல் கட்டுமானங்கள் எழுப்பலாம் என்றும் அவர் ஆலோசனை வழங்கினார்.



சொற்பொழிவுக்குப் பார்வையாளராக வந்திருந்த திரு. கொடுமுடி சண்முகன், பண்டைய நாணயங்கள் சிலவற்றைத் தொல்லியல் துறைக்கு அன்பளிப்பாக வழங்கினார். முன்னதாகத் தொல்லியல் துறை சிறப்பு ஆணையர் திரு. தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,இ.ஆ.ப., அறிமுக உரை நிகழ்த்தினார். கல்வெட்டாய்வாளர் திரு. சு. இராசகோபால் வரவேற்புரை நிகழ்த்தினார். கல்வெட்டாய்வாளர் திருமதி.ஆ.பத்மாவதி, கூட்டத்தின் இறுதியில் நன்றி கூறினார். கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் சென்னை தொல்லியல் அலுவலர் திரு. ச. கிருஷ்ணமூர்த்தி செய்திருந்தார்.

❖ ❖ ❖



கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 133ஆவது பிறந்த நாளையொட்டி, தமிழக அரசின் சார்பில், 5–9–2004 அன்று சென்னையிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயகுமார் அவர்களும், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்களும் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

# கவுரவிப்பு

• சி.சு. செல்லப்பா

ஒரு கைத்தாங்கலைக் கூட வேண்டாம் என்று கையசைத்துவிட்டு, கைத்தடியை டொக் டொக்கெனப் படிகளில் சப்திக்கச் செய்துகொண்டே அந்தத் தொண்டு கிழம் மேடைக்கு ஏறி நாற்காலியில் உட்கார்ந்து கொண்டதைப் பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தின் வியப்புக்கு ஒரு எல்லையே இல்லை. கிழவர் வரும்போது சற்று அடங்கினாற்போல் தோன்றிய கசமுசல் மறுபடியும் ஆரம்பமாயிற்று.

"என்ன இது. ஒரு கிழத்துக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பாரேன்'' என்று ஒரு குரல்.

மற்றொரு குரல்: 'இந்தப் பூமாலையை வாங்கிப் போட்டுக் கொள்வதற்காக எண்பது வயதையும் முழுங்கிட்டு ஜாம்பவான் மாதிரி உட்கார்ந்து இருக்கிறதே' என்று மூக்கில் விரல் வைக்கும்.

அதே சமயம் வேறு ஒரு குரல், 'இதெல்லாம் எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதா? பூர்வ ஜன்மத்தில் அது ரொம்ப புண்ணியம் செய்திருக்க வேண்டும்' என்றது.

அதைத் தொடர்ந்து வேறொன்று, 'இத்தனை வயதாகியும் கண்ணும் காதும் பல்லும் அவருக்கு கொஞ்சமாவது ஒச்சமாகி இருக்கணுமே, வீட்டில் இருந்து, கிழவர் தானே நடந்து பள்ளிக்கூடத்துக்கு வந்தாராமே' என்று வியக்கும்.

'பழங்காலக் கிழடு அல்லவா, நல்ல வைரக்கட்டை' என்று இன்னொரு குரல் கலந்தது.

இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பு வைப்பது போல ஒருவர் 'சாமிநாத முதலியாரால்தான் இந்தப் பெருமை பூராவும் கிழவருக்கு. நாமும் இந்த ஊரிலேயே இருக்கிறோம். இந்தக் கிழத்தைப் பற்றி யாராவது கவலைப்பட்டோமா? இல்லை, அவரது பூர்வகாலத்தைப் பற்றித்தான் நம்மில் எத்தனை பேர்களுக்குத் தெரியும் என்றார்.

'ஆமாம், பாருங்களேன், சாமிநாத முதலியார் இங்கு வந்து மூன்று மாதத்திற்குள் எப்படியோ இந்தக் கிழவரைக் கண்டு பிடித்துவிட்டாரே, கண்டு பிடித்தது மட்டுமின்றி ஊரையே திரட்டி விட்டாரே. அவருக்குத்தான் எவ்வளவு அக்கறை!

'அக்கறை கிடக்கட்டும். கிழவர் பக்கத்தில் அவர் உட்கார்ந்திருக்கிற தோரணையைப் பாருங்களேன்.



ரிடயர்ட் சப் ஜட்ஜ் சாமிநாத முதலியார் மாதிரியாகவா தெரிகிறது? பள்ளிக் கூடத்துப் பையன் உபாத்தியாயர் கிட்ட உட்கார்ந்திருக்கிற மாதிரி எவ்வளவு பவ்யம், மரியாதை கிழவரிடம்! அவர் பேசும்போது தான் பாருங்கள், வாயில் விரல்களை வைத்துப் பொத்திக் கொண்டு குனிந்து முகத்தோடு முகம் கொண்டு போய் எவ்வளவு பயபக்தியான குரலில் பேசுகிறார்!'

'பின்னே இருக்காது? ஐம்பது வருஷத்திற்கு முந்தி அவர் கிட்ட பாடம் கற்றுக் கொண்டது இன்னும் முதலியார் நினைவில் இருக்கிறாப் போலிருக்கு' என்று பேசி நடந்த சந்தேக சம்பாஷணையை தெளிவுபடுத்தியது ஒரு குரல்.

'என்ன! நமது முதலியார் இவர்கிட்ட படித்தவரா? முதலியாருக்கே அறுபதுக்கு சமீபம் ஆகிக் கொண்டிருக்கே. அவரே கிழவராகிவிட்டார். அவருக்கு அரிச்சுவடி பாடம் சொல்லிக் கொடுத்த கிழமா இன்னும் உயிரோடு இருக்கிறது!'

'அப்படி சொல்லுங்கள்; அதுதான் முதலியாருக்கு இவ்வளவு அக்கறை, நியாயம்தானே. இது ரொம்ப ஆச்சர்யமான சம்பவம்தான்.' "இதை மனுஷன் நினைத்து வைத்துக் கொண்டு செய்கிறார் பாரு, அதுதான் தன்மை.' இப்படிப் பல குரல்கள் பேசிக்கொண்டன.

'அதுதான் கிழவர் முகத்தை பாருங்களேன். அந்த சருகு முகத்திலேயேும் ஒரு பளபளப்புத் தெரிகிறது. இவ்வளவு பெருமை தனக்குக் கடைசி காலத்தில் கிடைக்கப்போகிறது' என்று எப்போதாவது எதிர்பார்த்திருக்குமா கிழம்? ஏதோ புது உலகத்திலே நுழைந்த மாதிரி அல்லவா கூட்டத்தை வெறித்து வெறித்துப் பார்க்கிறது!'

'பின்னே, இருக்கத்தான் செய்யும்; டெபுடி கலெக்டர் கையால் மாலை கழுத்திலே விழப்போகிறதே. அதை நினைத்துப் பார்த்துக் கொள்கிற சந்தோஷத்திலே கிழத்துக்கு வயதுகூட இருபது குறைந்துவிட்டது மாதிரி இருக்கு இல்லையா?'

'இந்தக் குறை ஏதாவது அதன் மனதிலே உறுத்திக்கிட்டே இருந்திருக்கும்.' 'அதற்காக உயிரைப் பிடித்துக் கொண்டு இருந்திருக்கும்.'

'அதெல்லாம் இல்லை. இப்படி வரப்போகுதுன்னு அவருக்கு எப்படித் தெரியும். எல்லாம் ஒத்துக் கொண்டது அவ்வளவுதான்.'

' ஆமாம் சாமிநாத முதலியார் இந்தக் கிழம் கிட்ட படித்து முன்னுக்கு வந்தார் என்றால் கிழம் மண்டை போடுகிற வரைக்கும் இரண்டு வேளைச் சோற்றுக்கு ஏற்பாடு செய்யட்டுமே, இதற்கு ஊரைக் கூட்டி........' என்று ஒரு சந்தேகக் குரல் கிளம்பியது.

' நன்றாகச் சொன்னீர்கள்? கிழத்தை கவுரவிக்க செய்யப்பட்டுள்ள இந்த ஏற்பாடு சாமிநாத முதலியாருக்கும் கிழவருக்கும் ஏற்பட்டுள்ள தனிப்பட்ட உறவைப் பொறுத்ததல்ல. கதையை விவரமாகக் கேளுங்கள். வைபவம் ஆரம்பமாவதற்குள் முடித்துவிடுகிறேன்' என்று அங்கிருந்த ஒரு குரல் விஸ்தாரமாக பேசவும் விஷயம் அறிய வராத காதுகள் அத்தனையும் அந்த விவரத்தை கேட்கத் தயாராயின.

இந்த தேவதான பாளையம் கிராமத்து உயர்தரப் பள்ளியில் இப்படி கிராமமே திரண்டு கவுரவிக்கக் கூடியிருக்கும் இந்தத் தொண்டு கிழவர் செந்நெல்பட்டி நமசிவாயம் பிள்ளையை சாமிநாத முதலியார் கண்டுபிடிக்கும் வரையில், சாதாரணமாக யாருக்கும் தெரியாதுதான். கோவிலை அடுத்து உள்ள ஒரு ஓரத்துக் கோடி வீட்டிலே திண்ணையோடு திண்ணையாகக் கண்களை அவ்வப்போது மூடிமூடித் திறந்து சதா ஏதோ யோசனையில் ஆழ்ந்து ஒருவேளை கழியும் நேரத்தை விநாடி விநாடியாக எண்ணிக்கொண்டு இருக்கிறதோ என்று தோன்றும்படியான பாவனையில் உட்கார்ந்திருக்கும் ஒரு முடிச்சுப்போன்ற வற்றிச் சருகான உயிர் மூட்டையை தெருவில் பம்பரம், குண்டு ஆடிக்கொண்டிருக்கும் ஒரு தலைமுறை கொஞ்சமும் தெரிந்து கொண்டிருக்கப் பிரமேயமே இல்லை.

இந்தப் பால தலைமுறை என்ன, வாலிப தலைமுறை, நாற்பதுக்கு இரண்டு மூன்று கூடியும் குறைந்தும் உள்ள வயதான ஒரு நடுத்தர வயது பரம்பரைக்கும் கூட அவரைப் பற்றி ஒரு வார்த்தை தெரிய வராது. அந்தக் கிராமத்து வாழ்வோடு இணைந்திருந்த நமசிவாயம் பிள்ளையின் வாழ் நாட்கள் அவ்வளவு பழமையானது. அந்தப் பழமையான நாளத்து உறவைத்தான் இந்தக் கிராமம் பூராவும் இன்றைய ஒரு பொழுதுக்காவது ஞாபகப்படுத்திக் கொள்ளும் சம்பவம் நடைபெற இருக்கிறது.

இப்போதைய தேவதான பாளையத்தைத்தான் உங்களுக்குத் தெரியும். இது ஒரு பெரிய மேஜர் யூனியனாகி ஒரு ஹைஸ்கூல், ஒரு ஜில்லா போர்டு ஆஸ்பத்திரி, சப் ரிஜிஷ்டிரார் ஆபீஸ், போலீஸ் ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்டு, சினிமா தியேட்டர் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. ஐம்பது வருஷத்திற்கு முன் இந்தக் கிராமம் இருந்த நிலைமை இங்கு கூடி இருக்கும் எத்தனை பேருக்குத் தெரியுமோ?

பஸ் ரூட் எல்லாம் இப்போதுதான். தபால் வண்டி ஓடிக் கொண்டிருந்த காலம் அது. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து பத்து மைல், இந்தக் கிராமம். இதுக்குவர இரண்டு தடவை நடுவில் மாடு மாற்றி தபால்வண்டி ஆட்களை சுமந்து கொண்டு வந்த நாட்கள் ஊரைச் சுற்றி ஏதோ பயிர் பச்சை கணிசமாக விளைகிற நஞ்சை புஞ்சை உள்ள

ஊராக இருந்ததினால் இந்த வட்டையிலே குடிபடை அதிகமாக உள்ள கிராமமாக அந்தக் காலத்திலேயே விளங்கியது.

இப்படியெல்லாம் இருந்த இந்த ஊரிலே ஒரு பள்ளிக்கூடம்--அந்தக் காலத்திலே திண்ணைப் பள்ளிக்கூடம் தானே கிராமங்களில் இருக்கும்-- கிடையாது. இந்த ஜில்லாவிலே, டவுன்கள் ஒன்று இரண்டிலே கொஞ்சம் பெரிய பள்ளிக்கூடங்கள் இருக்கும். ஐந்து கிளாஸ் படிக்கணும்னாலும் டவுனுக்குத்தான் பிள்ளைகள் படிக்கப் போகணும். அதுவும் கொஞ்சம் பசை உள்ள பிள்ளைகள் தான் அங்கே போக முடியும்.

இப்படி இருந்த நாட்களில் தான் செந்நெல்பட்டி நமசிவாயம் பிள்ளை இந்த ஊருக்கு வந்து சேர்ந்தார். இப்போது நீங்கள் பார்க்கிறீர்களே இந்த நமசிவாயம் பிள்ளைக்கும் அப்போது வாலிப வயதாக இருந்த நமசிவாயம் பிள்ளைக்கும் ரொம்ப வித்தியாசம்.

நீங்கள் யூகிக்கவே முடியாது.

காலம் அப்படி உருக்குலைத்து விடுகிறது மனித உடலை.

இதை மறித்து ஒரு குரல், 'யூகிக்க முடியாமல் என்ன? கூனல் இல்லாமல் அதோ நாற்காலியிலே நிமிர்ந்து பாலியப் பிள்ளை மாதிரி உட்கார்ந்து இருப்பதைப் பார்த்தாலே தெரியுதே' என்றது.



கதை சொன்னவர் தொடர்ந்து ஆரம்பித்தார். 'சீக்கிரம் சொல்லி விடுகிறேன். அதோ கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் டெபுடி கலெக்டர் வருகிறார் போல் இருக்கிறது. தடபுடல் செய்கிறதைப் பார்த்தால் வேறென்ன இருக்கும்? சரி.'

நமசிவாயம் பிள்ளைக்கு சொந்த ஜில்லா திருநெல்வேலி, செந்நெல்பட்டி நமசிவாயம் பிள்ளை என்று தான் சொல்லிக் கொண்டார். தமிழ் படிப்பில் நல்ல பாண்டித்யம் என்றாலும் இங்கிலீஷ் படிப்பு சிறிதும் தெரியாத அவர் இளம்வயதிலேயே தன் வாழ்வுக்குச் சிறிதும் ஏது இல்லாத அந்த கிராமத்தை விட்டு புறப்பட்டு எங்காவது சற்று ஆதரவும் அனுகூலமும் கிடைக்கும் இடத்தைத் தேடி ஜில்லா விட்டு ஜில்லா வந்தவர், நமது ஊருக்கு வந்து சேர்ந்தார். அவரை வைத்து ஊரிலே காணியாச்சி உடைய முதன்மைக்காரர்கள் ஒரு சாவடியிலே திண்ணைப் பள்ளிக்கூடம் அமைத்தார்கள். ஆமாம் இன்று நீங்கள் இப்போது உட்கார்ந்திருக்கும் இந்த இடம் தான் அந்தச் சாவடியாக இருந்தது என்றால் நீங்கள் நம்பவே முடியாது.

அதோ அந்தக் காம்பவுண்டின் ஓரத்திலே பள்ளிக்கூடக் காவற்காரனுக்கு ஒரு சிறு ஓட்டுக்கொட்டகை இருக்கிறது பாருங்கள். அதிலே தான் நமசிவாயம் பிள்ளை நாலு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்து தன் பாடுக்கு வழி செய்து கொண்டார்.

நமசிவாயம் பிள்ளை பாடம் சொல்லிக் கொடுத்த முறையைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமானால் நீங்கள் சாமிநாத முதலியாரைக் கேட்டால் சொல்லலாம். அவர் இந்தக் கூட்டத்தில் அதையெல்லாம் சொல்லுவாரோ என்னமோ? இதெல்லாம் ஞாபகத்திலே இருக்கணுமே. எதானாலும் சரி, அவர்கிட்ட படித்த சாமிநாத முதலியார் ரிடயர்ட் சப்ஜட்ஜாக ஆனது மாதிரி இன்னும் எத்தனையோ பேர்கள் நல்ல நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் இந்த ஊருக்கு வரவில்லை. சாமிநாத முதலியார் மாதிரி.

நமசிவாயம் திண்ணைப் பள்ளிக்கூடம் நன்றாகத் தான் வளர்ந்து வர ஆரம்பித்தது.

'அதோ டெபுடி கலெக்டர் வந்து விட்டார்' என்று ஒரு குரல் கிளம்பியது.

'இருக்கட்டும். விவரத்தை தெரிந்து கொள்வோம். மேலே சீக்கிரமாக கதையைச் சொல்லுங்கள், விழா ஆரம்பிப்பதற்குள்' கதைக்காரர் மேலே தொடர்ந்தார்.

சுற்று வட்டாரத்தில் உள்ள நடை தூரத்து கிராமங்களிலிருந்தெல்லாம் பிள்ளைகள் வந்து

நமசிவாயம் பிள்ளையிடம் பாடம் கற்றுக் கொண்டன என்றால் பாருங்களேன். அவ்வளவு பிரபலம் அடைந்து விட்டது பிள்ளைவாளுடைய திண்ணைப் பள்ளிக்கூடம்.

சொல்ல மறந்துவிட்டேனே. பிள்ளை ஒரு பிரம்மச்சாரி, தானே சோறு சமைத்துத்தான் சாப்பிடுவார்.

'அப்படியா ? அதுதான் தேகம் இந்த வயதுக்கு இவ்வளவு தெம்பாக இருக்கிறது. அப்புறம் மேலே.'

ஊர் ஆதரவு எல்லாம் பிள்ளைவாளுக்கு எவ்வளவோ இருந்தும் பத்து வருஷத்திற்குப் பிறகு அந்த ஒரு சமயத்திலே அடி பலமாக விழுந்து விட்டபோது நமசிவாயம்பிள்ளை அப்படியே இடிந்து போய் உட்கார்ந்துவிட்டார்.

ஹூம்... சொல்கிறேன். இரண்டு எழுத்து இங்கிலீசு சொல்லித் தருகிற பள்ளிக்கூடம் வேணும்னு கிராமத்தாருக்கு யோசனை தோன்றிவிட்டது. அப்படிப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தினால் தாங்கள் உதவித் தொகை கொடுப்பதாக ஜில்லா போர்டு நிருவாகம் எழுதி அனுப்பியதுதான் காரணம். ஜில்லா போர்டு இந்த ஆசையை காட்டினவுடனே – அவ்வளவுதான். கிராமப் பெரியதனக்காரர்கள் அந்த ஒரு க்ஷணத்திலேயே நம் திண்ணைப் பள்ளிக்கூடத்திற்குப் பதில் இங்கிலீஷ் முறைப்பள்ளிக்கூடமாக ஆக்கிவிட முடிவு செய்துவிட்டார்கள்.

'அட பாவமே! இவர் பிழைப்பு என்ன ஆகிறது ?'

'அதோ பாருங்கள். சாமிநாத முதலியார் டெபுடி கலெக்டரிடம் விஷயத்தைப் பேசிக் கொண்டிருக்கிறார். பிரசங்கம் ஆரம்பமாகிவிடும் போலிருக்கு. சீக்கிரம் சொல்லுங்கள்'.

கதைக்காரர் மீண்டும் தொடர்ந்தார்.

பிழைப்பு ஆகிறதென்ன ? நமசிவாயம் பிள்ளை திண்ணைப் பள்ளிக்கூடத்தை அப்படியே நாலாம் கிளாஸ் வரைக்கும் உள்ள எலிமென்டரி ஸ்கூலாக மாற்றிவிட்டார்கள். நமசிவாயம் பிள்ளை அவர்களிடம் அழாக்குறையாக 'நீங்கள் வேறே பள்ளிக்கூடம் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். நான் இப்படியே ஏதாவது சொல்லிக் கொடுத்துக்கொண்டு என் நாளைத் தள்ளிக்கொண்டு போகிறேன்' என்றார்.

அவர்கள் அதற்கு பதில், 'எங்கள் பிள்ளைகளுக்கு இந்தப் படிப்பு இனிக் கட்டாது. ஏதோ கடை கண்ணியிலே உட்காருவதற்கு உங்கள் படிப்பு போதும். மதிப்பாக இருப்பதற்கு இது எடுத்துக் குத்தாது. ஜில்லா டிரெயினிங் பள்ளிக்கூடத்திலேயிருந்து இரண்டு வாத்தியார்களை அனுப்புவதாக ஜில்லா நிருவாகக்காரர்கள் எழுதி இருக்கிறார்கள். நீங்கள் இவ்வளவு நாளாக இருந்ததுனாலே வேணுமானால் தமிழ்ப் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டு இருங்கள். மற்றவைகளை எல்லாம் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்' என்று முடிவாகச் சொல்லிவிட்டார்கள்.

நமசிவாயம் பிள்ளை துடித்துப் போனார். 'என்ன, இத்தனை வருஷமாக இந்தப் பள்ளிக்கூடத்திலே நிமிர்ந்து நடமாடிக் கொண்டு இருந்ததற்கு இப்போது தலை குனிந்து நடக்கவா சொல்கிறீர்கள். நமசிவாயம் இனி இன்னொரு வாய் உத்தரவுக்கு எதிர்பார்த்து நிற்கவா ?' என்று நெஞ்சை அழுத்தும் துக்கக் குரலில் தட்டுத்தடுமாறி பேசியபோது பொலபொலென கண்ணீர் உகுத்துவிட்டார். ஆனால் இதெல்லாமா ஊர்க்காரர்கள் முடிவை மாற்றச் செய்துவிடும்—ஊர் முக்கியமா, பிள்ளை முக்கியமா என்பதில் இரண்டிலொன்றைத் தேர்ந்தெடுத்துவிட்ட பிறகு!

அவ்வளவுதான், நமசிவாயம் பிள்ளை கண்களைத் துடைத்துக் கொண்டார். உறுதியும் தீர்க்கமுமான குரலாக மாறியது அவர் பேச்சு.

இந்தத் திண்ணையை இப்போதே ஒப்பித்து விடுகிறேன். ஒப்புக்கொள்ளுங்கள். என் ரத்தத்தை வற்ற வைத்து நாலு பிள்ளைகளுடன் ஆரம்பித்து நூற்றுக்கு மேற்பட்ட தொகை வளர்ந்துவிட்ட இந்தத் திண்ணையின் எதிர்காலம்தான் நமசிவாயத்தின் எதிர்காலத்தைவிட மிகமிக முக்கியமானது. அது நன்றாக நடப்பதை எட்டி இருந்து பார்த்துக் கொண்டிருப்பேன். 'இந்தக் கை நட்டு, குழந்தைகள் தண்ணீர்விட்டு வளர்ந்திருக்கும் இந்த குட்டி அரசமரங்கள் கிளை வீசி வளர்ந்து நிழல் பரப்புவதை எட்டி நின்று பார்த்துக் கொண்டிருப்பேன். எனக்கு நிழல் தரத் தவறிவிட்டது இந்த விருக்ஷம். சந்ததி சந்ததிக்குமாக நிழல் தருவதைப் பார்த்து ஆனந்தித்துக் கொண்டிருப்பேன். நான் வருகிறேன்' என்று அந்தக் கூட்டத்தை விட்டு கிளம்பியவர்தான் நமசிவாயம் பிள்ளை...

'பாவம்! மனிதனுக்கு அப்போது எப்படி இருந்திருக்கும்!' 'மனசே முறிந்து போயிருக்குமே.' 'அப்போது பெரியவர்கள் செய்த அநீதிக்குப் பிராயச்சித்தமாக சாகிற காலத்திலே கிழத்துக்கு இந்த மரியாதையாவது கிடைச்சது சரிதான்.' 'கிழத்தின் குறை இப்போதாவது தீருமல்லவா' என்றெல்லாம் ஆளுக்கொரு அபிப்பிராயமாகப் பேசினார்கள்.

'அதோ சாமிநாத முதலியார்கிட்ட பள்ளிக்கூட ஹெட் மாஸ்டர் பேசிக்கொண்டிருக்கிறார். அப்புறம் என்ன ஆச்சு ? சீக்கிரம் கதையை முடியுங்கள், கிழவரைப் பாரு்ங்கள், அரச மரத்தையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்' என்றார் ஒருவர்.

கதைக்காரர் தொடர்ந்தார்: அந்த அரச மரம் அவருக்கு பழைய ஞாபகம் அவ்வளவையும் கொண்டு வராமல் இருக்க முடியுமா?

அப்போது கன்றுகளாக இருந்த அதுகள் பக்கத்திலே இருந்துதான் அவர் அந்தக் குழந்தைகளிடம் விடை பெற்றுக் கொண்டார். அந்தக் காட்சியை பார்த்தவர்கள் உருகிப் போய் விடுவார்கள். 'குழந்தைகளே, நமசிவாயம் பெயர் சொல்லும் படியாக நீங்கள் எல்லாம் நடந்து கொள்ளுவீர்களல்லவா? இந்த அரசங் கன்றுகளை பட்டுப்போக விட்டு விடாதீர்கள். நான் வருகிறேன். நன்றாகப் படியுங்கள்' என்று கண்ணீருடன் தனக்குச் சொந்தமாக இருந்த ஒரு கோரப்பாய், கட்டைப் பலகை அடங்கிய படுக்கையையும் சில தட்டு முட்டு சாமான்களையும் எடுத்துக் கொண்டு ஊர்ப் பிரமுகர்கள் முன்னால் அந்தப் பள்ளிக்கூடத்தை விட்டுச் சென்றவர்தான் நமசிவாயம் பிள்ளை, இப்போது தெரு ஓரத்துத் திண்ணையிலே அவர் குந்திக்கொண்டு இருக்கிறாரே அந்த இடத்திற்குச் சென்றார்.

'பாவம்! அப்புறம்?'

'அதோ சாமிநாத முதலியார் பேச எழுந்திருக்கிறார்' என்று ஒருவர் உஷார்ப்படுத்தினார். 'பேசட்டுமே, அவரும் இதைத்தானே சொல்லப் போகிறார். நான் இதோ முடித்து விடுகிறேன்' என்று கதைக்காரர் கதையை தொடர்ந்தார்.

நமசிவாயம் எந்த வேளையிலே அந்தப் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தாரோ பள்ளிக்கூடம் துடியாக முன்னேறியது. கமிட்டியிடம் இருந்த பள்ளிக்கூடத்தை தாலுகா போர்டு ஒப்புக்கொண்டு ஐந்தாவது வகுப்பு வரைக்கும் உயர்த்தியது. அப்புறம் மிடில் ஸ்கூலாகி ஏழாம் வகுப்பு வரை உயர்ந்தது. இப்போதுதான் இது ஜில்லா போர்டு ஹைஸ்கூலாக சுற்று வட்டம் முப்பது மைலுக்கு ஒரே பள்ளிக்கூடமாக உயர்ந்து நிற்பதைப் பார்க்கிறீர்களே!' என்று கதைக்காரர் நிறுத்தினார்.

சாமிநாத முதலியார் பேசிக்கொண்டிருந்தார். ஒருவரைத் தவிர கதை கேட்டுக்கொண்டிருந்த மற்றவர்கள் எல்லோரது பார்வைகளும் மேடைப் பக்கம் திரும்பின. ஒரு குரல் மட்டும் கதைக்காரரை, 'அப்புறம் கிழவர் பிழைப்பு என்ன ஆயிற்று? எனக்குச் சொல்லுங்கள்' என்று கேட்டது.

அடங்கிய குரலிலே கதைக்காரர் தொடர்ந்தார்.

பிழைப்பென்ன? வைராக்கிய மனிதன். கைத்தாங்கல் இல்லாமல் இப்போது மேடைமேல் ஏறின



கிழம் அந்த வாலிபத்திலே எப்படி இருந்திருக்கும். யூகித்துப் பாருங்கள். 'வேறே ஊருக்குப் போய் பள்ளிக்கூடம் ஆரம்பித்து நடத்தி இப்படி திரும்பவும் வாழ்க்கை முறிவு எனக்கு வேண்டாம். ஒரு அதிர்ச்சி போதும். இந்தப் பள்ளிக்கூடம் வளருவதை பார்த்துக் கொண்டு இருந்தாலே மனதுக்குப் போதும். என் ஆசையையும் அபிமானத்தையும் இன்னொரு ஊருக்கும் பள்ளிக்கூடத்துக்கும் மாற்றவா?' என்று சொல்லிவிட்டார்.

வலியபோய் பாடம் சொல்லித் தரமாட்டார். தன் திண்ணை தேடி யாராவது அனுப்பும் ஏழைக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதுடன் நிறுத்திக் கொண்டார். தான் மனம் இன்றிப் பிரிந்த பள்ளிக்கூடத்துக் குழந்தைகள் இன்னும் வந்து போய்க் கொண்டிருக்க வேண்டும் என்ற ஆசை நமசிவாயம் மனதிலே உறைந்தது. தன் திண்ணை வாசலிலேயே பொட்டுக்கடலை, பொரி, சர்க்கரை மிட்டாய், கொடுக்காப்புளி, சிலேட்டுக் குச்சி இதெல்லாம் வைத்து விற்க ஆரம்பித்தார். நமசிவாயத்தின் வாழ்க்கை இப்படித்தான் கழிந்து கொண்டிருந்தது...'

அப்போது சாமிநாத முதலியாரின் பேச்சு அவர்கள் காதில் விழுந்தது... 'நீங்கள் சுருக்கமாக டி.என்.ஹைஸ்கூல் என்று அழைக்கிறீர்களே அதன் முழுப்

பெயர் என்ன தெரியுமா? தேவதான பாளையம் நமசிவாயம் ஹைஸ்கூல் என்பது, கமிட்டி அவரிடம் இருந்து ஒப்புக்கொண்டதும் இந்தப் பெயரை வைத்தது.'

அட, கிழவர் பெயர் தாங்கிய பள்ளிக்கூடமா இது! என்று சபை ஆர்ப்பரித்து கரகோஷம் செய்தது.

'இவ்வளவு நாட்களாக யாருக்கும் தெரியவராதே.' 'நல்ல ஞாபகார்த்தம்தான் கிழவர் சாதனைக்கு.' 'அதோ பாருங்கள். இதைக் கேட்டு சந்தோஷத்தாலே கிழம் படுகிற பாட்டைப் பாரு. நாற்காலியிலே இருந்து கீழே விழுந்து விடுவது போலல்லவா தள்ளாடுகிறது' என்று குரல்கள் பல தினுசாகப் பேசின.

'அடடா, சொல்ல மறந்து விட்டேனே' என்று கதைக்காரர் மீண்டும் பக்கத்து ஆளிடம் தொடர்ந்தார்.

இருக்காதா சந்தோஷம் அந்தத் தொண்டு கிழத்துக்கு? இந்த ஊர் பூராவும் அதைத் தெரிந்து கொண்ட இந்தச் சமயம் தானே கிழத்தின் வாழ்க்கையிலேயே உச்சஸ்தாயில் நிற்கும். நீங்கள் எல்லாம் அது ஏதோ ஒரு கிழடு என்று தள்ளிப் போய் விடுவீர்கள். அவர் மனதிலே இது எப்படி அழுத்திக் கொண்டு இருந்தது தெரியுமா? தினம் காலையிலே கம்பை ஊன்றிக் கொண்டு இந்தப் பள்ளிக்கூடம் பக்கமாக இந்தக் கிழம் தள்ளாடிக் கொண்டு போகிறதை எத்தனை பேர்கள் கவனித்திருக்கிறார்களோ? அப்படிக் கவனித்தாலும் அவர்களில் எத்தனை பேர் ஏன் அந்தக் கிழம் தடியை ஊன்றிக் கொண்டு அப்படி நின்று அந்தக் கட்டடத்தையும் அரச மரங்களையும் வெறித்துப் பார்த்துவிட்டு திரும்பத் திண்ணைக்குப் போவதன் அர்த்தத்தை அறிந்திருப்பார்கள்? யார் கிட்டவும் வாயைத் திறந்து தானாக எதுவும் சொல்லாமல் நாட்களைத் தள்ளி விட்டது கிழம். தன் மாதிரி கிழம் ஏதாவது இது கிட்ட வந்து பேசி இருந்தால் தன் மனத்திலே உள்ளதைச் சொல்லி இருக்குமோ என்னமோ? மற்றவர்களிடம் சொன்னால் பைத்தியக்காரப் பட்டம் தானே மிச்சம்...

'அதோ பாருங்கள், சாமிநாத முதலியார் பழங்கதையெல்லாம் சொல்லிக் கொண்டு வரும்போது கிழவர் எப்படித் தலையை ஆட்டுகிறார் பாருங்கள்' என்றார் கதை கேட்டுக் கொண்டிருந்தவர்.

இந்தப் பழைய நினைவும், பழைய நாளும் இருக்கிறதே அதைக் கிளறிப் பார்க்கிற போது ஏற்படுகிற உணர்ச்சியின் வேகமே தனி தான். அதிலே சிறிது சபலத்தையும் சேர்த்துக் கொண்டால் கேட்க வேண்டுமா? எந்த மனுஷனுக்குத் தான் படபடப்பு இருக்காது! நமது கதையை நிறுத்தி சாமிநாத முதலியார் சொல்வதைக் கேட்போம் என்றார் கதை சொன்னவர். சாமிநாத முதலியார் சொல்லிக் கொண்டிருந்தார்.

'ஐம்பது வருஷங்களுக்கு முன்பு திடீரென ஒரு நாள் இந்த கிராமம் செந்நெல்பட்டி நமசிவாயம் பிள்ளை அவர்களை மறந்துவிட்டது. இன்று ஐம்பது வருஷத்திற்குப் பிறகு நாம் இங்கு கூடி இருப்பது அன்று அவருக்குச் செய்யப்பட்ட அநீதிக்கு மாற்றுச் செய்வதாக மட்டும் இல்லை. சாமிநாதன் மாதிரி சிறு பையன்களை மனிதர்களாக ஆக்கி விட்டதற்காக மட்டும் இல்லை. இன்று அரச மரம் தழைத்து ஓங்குவது போல் நம் ஊர் ஒரு மதிப்பாக ஆக அன்று இந்த கல்வி திண்ணையை கட்டிய பாட்டையாவைக் கும்பிடவே நாம் கூடி இருக்கிறோம்.'

சபையின் கரகோஷம், அரச மரத்தையும் ஒரு ஆட்டம் காணச் செய்த மாதிரி இருந்தது.

கதைக்காரர் பக்கத்து ஆசாமியை உஷார்ப்படுத்தி 'எங்கேயோ பார்க்கிறீர்களே. கிழவரைப் பாருங்கள். இந்த மரங்களையும் கட்டடத்தையும் மாறி மாறி வெறித்துப் பார்க்கிறதைப் பாருங்கள்.'

'அடடா, கண்களிலிருந்து கண்ணீர்... என்ன இது! பைத்தியம் மாதிரி அல்லவா மிரள மிரளப் பார்க்கிறார்!' என்றார் அவர்.

மனிதனுக்கு சந்தோஷம் துக்கம் எதுவானாலும் சரி ஒரு அளவுக்கு மேல் டோஸ் அதிகமாக ஆகிவிட்டால் அவன் நிதானம் தடுமாறித்தான் விடும். இதிலே ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

அப்போது சாமிநாத முதலியார் மேலும் தொடர்ந்தார்:

'ஐம்பது வருஷ கால ஓட்டம் ஒரு தேச வாழ்விலேயே பெரிய நடப்பு. சராசரி வயது இருபத்தாறாக இருக்கும் நம் நாட்டிலே இதையும் தாண்டி வாழ்ந்து, அன்று இளம் கைகள் மண்ணைப் பிசைந்து கட்டிய திண்ணையும் தண்ணீர் விட்டு வளர்த்த அரசங் கன்றும் இன்று நீங்கள் பார்க்கும் கல்விக் கோயிலாக ஆகி இருப்பதைத் தான் பார்க்கும் பாக்கியம் பெற்ற பாட்டையாவை அவர் கட்டிய கோவிலிலேயே கவுரவித்துக் கும்பிடக் கூடி இருக்கிறோம்... இந்தக் கிராமத்தின் சார்பாக இந்த வயதில் அவருக்கு நாம் அளிக்கும் கவுரவம் இதைவிடச் சிறந்தது வேறென்ன இருக்கிறது' என்று கூறிக் கொண்டே கையிலிருந்த புஷ்ப மாலையைக் கிழவரின் கழுத்தில் அணிவித்து விட்டு அவரது பாதங்களை தொட்டுக் கும்பிட்டார்.

சபையின் பலத்த கரகோஷம் அந்த க்ஷணத்தில் அந்தக் கிழட்டு உருவத்தையே ஒரு அலட்டு அலட்டி விட்டது. அதே சமயம் இன்னும் பலர் மேடைக்கு வந்து அவரது கால்களைத் தொட்டுக் கும்பிட்டு மரியாதையை தெரிவித்துக் கொண்டனர்.

மறுபடியும் கதைக்காரர் குரல் பக்கத்து நண்பரை உஷார்ப்படுத்தியது. 'எங்கேயோ பார்க்கிறீர்களே

கிழவரைப் பாருங்கள். ஒரு நிலையில் நிலைக்க முடியாமல் தவியாகத் தவிக்கிறதை.'

'ஏதோ வெறி பிடித்த மாதிரியல்லவா கிழவர் மிரண்டு மிரண்டு பார்க்கிறார். ஏன் இப்படி? பாருங்கள், எழுந்திருக்கவல்லவா பார்க்கிறார். சாமிநாத முதலியார் கையைப் பிடிச்சு ஏதோ சொல்லி அமர்த்தினாலும் முரண்டிக் கொண்டு உதறி எழுந்திருக்கிறாரே! என்ன இது...'

அதே சமயம் உடல் முழுவதும் நடுநடுங்க திகைத்து அண்ணாந்து பார்த்த கிழவர், உதறல் எடுக்கும் விரல்களை சேர்த்து கூப்பிக் கொண்டே அந்த அரச விருக்ஷங்களையும் மாடிக் கட்டடத்தையும் விறைக்கப் பார்த்துக் கும்பிட்டு விட்டு கீழே குனிந்தார். நாற்காலியில் உட்காரப் போனார் கிழவர். சாமிநாத முதலியாரும் டெபுடி கலெக்டரும் ஆளுக்கொரு கை கொடுத்து கிழவரை சரியாக நாற்காலியில் அமர்த்தினார்கள்.

நாற்காலியில் கிழவர் தட்டித் தடவி உட்கார்ந்ததும் உடலும் உள்ளமும் சேர்ந்து அயர்ச்சி காட்டும் பாவனையில் நாற்காலி முதுகுப் பக்கமாக தலையை சாய்த்துக் கொண்டார் கிழவர். அவர் கண்கள் மூடி இருந்தன.

'அடடா என்ன ஆசை ஐயா மனுஷனுக்கு?'

'எப்போதோ தனக்கு ஒரு சம்பந்தம் இருந்ததைப் பற்றி இவ்வளவு மனதிலே வைத்துக் கொள்வதென்றால் ஆச்சரியம் தான்.'

'இருக்கிறது நியாயம் தானே. தன்னுடையது என்றால் மனுசனுக்கு ஒரு விதன் தான்.'

இப்படி கூட்டத்துக்குக் குரல் ஆளுக்கொரு அபிப்ராயம் பேசிக் கொண்டன.

"அதோ சாமிநாத முதலியார் கிழவரை கூப்பிட்டு ஏதோ பேசச் சொல்லுகிறார் போல் தெரிகிறதே" என்றார் ஒருவர்.

'ஆமாம், கிழவரை கூப்பிட்டுக் கொண்டிருக்கிறார். ஆனால் கிழவர் கண்ணைத் திறக்கக் காணோம். அயர்ச்சி இன்னும் தீரவில்லை போலிருக்கு.'

'என்ன இது, ஆளைத் தொட்டு உலுப்பியும் அசையக் காணோமே, ஏன், என்னது!'

அதே சமயம் நாற்காலியில் சாய்ந்தபடியே கிழவர் கண்களை திறந்து கூட்டத்தை ஒருதரம் சுழற்றிப் பார்த்தார். அடுத்த விநாடி கண் மூடிக்கொண்டது. தலை நாற்காலியில் தொங்கினாற் போல் சாய்ந்துவிட்டது. கிழவரை தொட்டுக் கொண்டிருந்த சாமிநாத முதலியார் பதறிப்போய் கிழவரைத் தாங்கினார்.

'அடடா'... 'ஐயோ!" 'பாவம்!' 'ச்சு! சொ!' என்ற குரல்கள் கூட்டத்தில் நாலா பக்கத்திலும் வெடித்த மாதிரி மேடையை நோக்கித் தெறித்தன.

'கிழவருக்கு என்ன ஆகிவிட்டது?'

'மூச்சு இருக்கா பாருங்கள்!'

'என்ன, தலை தொங்கிவிட்டதே!'

'டாக்டர்--டாக்டரைக் கூப்பிடுங்கள்!'

வைபவத்தில் கலந்து கொண்டிருந்த ஆஸ்பத்திரி டாக்டர் மேடை மீது ஏறிக் கிழவரின் கையைத் தொட்டுப்பார்த்தார்.

கிழவரின் மூச்சு நின்றுவிட்டது.

கூட்டத்தில் பேச்சு கலவரத்தது.

'ஆஹா! தொண்டு கிழத்துக்கு இவ்வளவு அஞ்ஞானம் இருந்தால்...'

'கிழமாவது குஞ்சாவது! மனித உடம்பை முழுக்க முழுக்க மூடி இருக்கிறது அஞ்ஞானம்தானே. தோலியை உறிச்சு எறிகிற மாதிரி முடிகிறதா!'

ஆசையை சுடுகாட்டு வரைக்கும் மனிதன் கொண்டு போகத்தானே ஆசைப்படுகிறான்.

'ஆசை மனதிலே இருந்தால் நெஞ்சு லேசில் வேகாது என்று சொல்வார்களே. இந்த கிழத்தின் நெஞ்சு இனி...'

'ரோஜாப்பு மாலையோடே நெஞ்சு வேகுவதற்கு இந்த எண்பதுக்கு அப்புறம் இந்தக் கிழத்துக்கு கிடச்ச கவுரவிப்பு இருக்கிறதே இது காணாத அதிசயம்தான்.'

இப்படி பல குரல்கள் பேசின. ஒரு கைத்தாங்கலைக் கூட வேண்டாம் என்று கையலைத்து மேடையில் ஏறிய அந்தக் கிழம் பல கைகள் தாங்க மேடையிலிருந்து இறக்கப்பட்டதை பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தின் வியப்புக்கு எல்லையேயில்லை. கிழவரை அப்புறப்படுத்தும்போது அடங்கினாற் போல் தோன்றிய கசமுசல் மறுபடியும் ஆரம்பமாயிற்று.

---

**"தலைவாழை''**
***(மூத்த தலைமுறைச் சிறுகதைகள்***
**நூலிலிருந்து)**

# குற்றாலம் சாரல் திருவிழா



தேனருவித் திரை எழும்பி வானின் வழி ஒழுகும் திருக்குற்றாலம், நெல்லை மாவட்டத்தில் தென்காசி நகருக்கு தென்மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது. தென்றல் மணம் கமழ்ந்து வரும் தென்பொதிகை மலையைச் சேர்ந்த குற்றால அருவிகளின் இன்பத்தை அனைவரும் நுகர்ந்திடும் வகையில் சாரல் திருவிழா அரசின் சார்பில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு ஜூலை மாதம் சாரல் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. விழாவின் தொடக்க நாளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அதுல் ஆனந்த்,இ.ஆ.ப., வரவேற்புரையாற்றிட, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. சொ. கருப்பசாமி அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி வைத்திட, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் தலைமை வகித்திட, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. அ. மில்லர் அவர்கள் சாரல் திருவிழா கலை நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார்கள்.

விழாவிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் வண்ணம் கலைவாணர் அரங்கில் தினந்தோறும் கரகாட்டம், காவடியாட்டம், தப்பாட்டம், தேவராட்டம், களியாட்டம், பரதநாட்டியம், இன்னிசை நிகழ்ச்சி, பல்சுவை நிகழ்ச்சி, சமூக நாடகம் போன்றவை நடத்தப்பட்டன. வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு நீச்சல் போட்டி, படகு போட்டி; ஸ்கேட்டிங் போட்டி, வண்ணகோல போட்டி, நீண்டதூர ஓட்ட போட்டி, புதையல் தேடுதல் வேட்டை போட்டி போன்றவை நடத்தப்பட்டன. சாரல் திருவிழாவினை சுற்றுலாப் பயணிகள் கண்டு மகிழ்ந்திடும் வகையில் அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி, குழந்தைத் தொழிலாளர் பள்ளியில் படிக்கும் மாணவர்களின் கை வண்ணத்தில் உருவான கலைப் பொருட்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு நாளும் துறை வாரியாக அரசின் சாதனைகள், திட்டங்கள் பற்றி உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு எடுத்துக் கூறியது மக்களை மிகவும் கவரும் வண்ணம் இருந்தது.

சாரல் விழா நிறைவு நாளன்று இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் பங்கேற்று போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்கள். நாள் தோறும் விழா நிகழ்ச்சிகளை 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பார்த்து மகிழ்ந்தனர்.

தாய்த் திருநாட்டின் எல்லாப் பிரிவு மக்களையும் குற்றாலத்தில் பார்க்கலாம். ஓடிவரும் அருவிகளைக் காண வருவோர் பலர், உள்ளத்திலுள்ள பல்வேறு



சுமைகளை இறக்கி விட்டு ஒய்வுக்காக கூடி வருவோர் பலர், இப்படி மகிழ்ச்சிக்கு ஏற்ற இடமாக இருக்கும் குற்றாலத்தில் ஆண்டுதோறும் சாரல் திருவிழாவினை அரசு சார்பில் நடத்தி திருக் குற்றாலத்தின் பெருமையைத் தரணி முழுவதும் அறியச் செய்து வருவது உள்ளூர் மக்களை மட்டுமின்றி சுற்றுலாப் பயணிகளையும் பெரிதும் மகிழ்விக்கும் வண்ணம் இருந்தது.

**– உல. இரவீந்திரன்,**
**செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருநெல்வேலி.**

# தந்தை பெரியார்

## பொன்மொழிகள்



- ஒருவன், தான் விரும்பும் நலன்கள் அனைத்தும் பிறருக்கும் உண்டாகச் செய்வதுதான் நாகரிகம். அதற்கேற்ற வகையில் நமது உழைப்புப் பயன்பட வேண்டும்.
- ஒருவன் தன்னுடைய சொந்தக் காரியத்தைப் பொறுத்தமட்டில்தான் மானத்தையும், கவுரவத்தையும் கவனிக்க வேண்டும். பொதுநலம், பொதுத் தொண்டு என்று வந்துவிட்டால் அவை இரண்டையும் பார்க்கக் கூடாது.
- ஒவ்வொரு பெண்ணும், தானும் எதாவது சம்பாதிக்கும் தகுதிபெறத் தக்கபடி ஒரு தொழில் கற்றிருக்க வேண்டும். குறைந்தது தன் வயிற்றுக்குப் போதுமான அளவாவது சம்பாதிக்கத் தகுந்த திறமை இருந்தால், எந்தக் கணவனும் அடிமையாய் நடத்தமாட்டான்.
- மனிதனிடம் சுலபத்தில் ஒழுக்கத்தைப் புகுத்த வேண்டுமானால், மாணவப் பருவத்தில்தான் முடியும்.
- பிறருக்கு எவ்விதத் தொல்லையும் தராத வாழ்வே ஒழுக்கம். இது எல்லாவித பேத நிலையும் ஒழிந்த நிலையில்தான் வளர முடியும்.
- ஒழுக்கம் என்பது தனக்கும் அந்நியனுக்கும் துன்பம் தராமல் நடந்து கொள்ளுவதாகும்.
- எப்படிப்பட்ட கலையும், ஒழுக்கக் குறைவுக்கும் மூட நம்பிக்கைக்கும் சிறிதும் பயன்படக்கூடாததாய் இருக்க வேண்டும்.
- அறிவினால் உய்த்துணர்ந்து ஒப்புக்கொள்ளக் கூடியனவும், இயற்கையோடு விஞ்ஞானத்துக்கு ஒப்ப இயைந்திருக்கக் கூடியனவும் ஆன கருத்துகளையே கொண்டு இயங்குகிறது வள்ளுவர் குறள்.
- இலக்கியம் என்பது நாகரிகத்தைப் புகட்ட வேண்டும். மக்களிடம் உயரிய குணங்களைப் புகுத்துவதாக இருக்க வேண்டும்.
- மக்களுடைய வாழ்க்கைக்குப் பயன்படக் கூடியதும் அறிவையும் திறமையையும் தைரியத்தையும் உண்டாக்கக் கூடியதும் ஆகிய சிறந்த கலைகளையெல்லாம் தமிழில் எழுதிப் பரவச் செய்வதன் மூலம், மக்களுடைய அறிவையும், தமிழ் மொழியையும் செம்மை செய்வதே உண்மையான தமிழ் உணர்ச்சியாகும்.
- மாணவர்கள் கடைபிடிக்க வேண்டிய அருங்குணங்கள் – ஒழுக்கம், நாணயம், நேர்மை, மற்றவர்களுக்கு நன்மை பயத்தல், பிறருக்கு ஊறு செய்யாமல் இருத்தல்.
- படிப்பு எதற்கு ? அறிவுக்கு, அறிவு எதற்கு ? மனிதன் மனிதத் தன்மையோடு வாழ்ந்து மற்ற மனிதனுக்கு உதவியாய் – தொல்லை கொடுக்காதவனாய் – நாணயமாய் வாழ்வதற்கு.
- உலக உயிர்களில் அறிவு நிரம்பப் பெற்ற உயிர் – பகுத்தறிவுள்ள உயிர் மனிதன்தான். அவன் தன் அறிவைப் பயன்படுத்தினால் மிகச் சிறந்த காரியங்களை எல்லாம் சாதிக்க முடியும்.
- எனக்கு மக்கள் நலம்தான் இலட்சியம்.
- மக்கள் உலகம் முழுவதும் ஒன்றுபட வேண்டும். மற்ற உயிர்களுக்குத் தன்னால் கெடுதி இல்லாத வாழ்வு பெற வேண்டும். மனிதனிடத்திலே பொறாமை, வஞ்சகம், துவேசம், கவலை, துக்கம் ஏற்படுவதற்கு இடமில்லாத சாந்தி வாழ்வுக்கு வகை தேட வேண்டும். இதுதான் எனது ஆசை.
- எனது சீர்திருத்தம் என்பதெல்லாம் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்து சரி என்று பட்டபடி நடவுங்கள் என்பதேயாகும்.

◆ ◆ ◆

# பேரறிஞர் அண்ணா அறிவுரைகள்



- இந்த உலகிலே நாம் காணுகின்ற பேருண்மைகளில் ஒன்று – இங்கே ஏழையும் வாழ முடியாது. பணக்காரனும் வாழ முடியாது.

- கட்டுப்பாடும், ஒழுங்கும் கட்டாயம் நமக்குத் தேவை. இவை சாதாரணமானவைதான். ஆனால் இம்மாதிரி சாதாரண விஷயங்களைக் கொண்டுதான் ஒரு சமூகத்தை எடை போட முடியும்.

- சொற்சுவையும், பொருட்சுவையும் இழைத்து கேட்போருக்குக் களிப்பூட்டுவதோடு கருத்தையும் குழைத்தூட்டும் இசை போன்ற பருவம் – சுயநலமும் சுக போகப் பித்தும் எருமை எனப் புகுந்து இருதய கமலத்தைத் துவைத்துப் பாழ் செய்யாப் பருவம் மாணவப் பருவம்.

- காலம் மாறக்கூடியது. மாறிக்கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்பக் கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.

- இலட்சியம் வெற்றி பெறவேண்டுமானால் அந்த இலட்சியத்தின் நியாயத்தை விளக்கிவிட்டால் போதாது. அந்த இலட்சியத்திற்குப் பலத்தையும் சேர்த்தாக வேண்டும். ஏனெனில் எவ்வளவு நியாயமான இலட்சியமும் பலத்துடன் கூடி இருந்தாலொழிய வெற்றி பெற முடியாது.

- தொழிலாளி வெறும் உழைப்பாளியாக மட்டும் இருக்கும் நிலை மாறி, அவன், தொழிற்சாலைகளிலே பங்காளியாகவும் ஆக்கப்பட்டால்தான் விஞ்ஞானத்தைத் தன் கூட்டாளி என்று உறவு கொண்டாட முடியும்.

- மலர் கொண்டு மாலை தொடுத்தலில் கைத்திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் கைத்திறன் முழுவதும் காட்டி காகிதப் பூமாலை தொடுத்தால் பயன் என்ன? பேச்சுக்கு அழகு தேவைதான். ஆனால் அழகு மட்டுமே இருந்து கருத்து இல்லையானால் என்ன பயன்?

- ஒரு சிறு மின்சார விளக்கு தரும் அளவுக்கு ஒளிபெற நாம் எத்தனை அகல் விளக்குத் தேட வேண்டும் – கணக்குப் போட்டுப் பாருங்கள் – பிறகு கூறுங்கள். விஞ்ஞானம் அதிக உழைப்பு எனும் சிறையிலிருந்து நம்மை மீட்டு, விடுதலை வீரனாக்குமா, அல்லவா என்பதை!

- வாலிபர்கள் ஆசிரியர்களாக வேண்டும் – உலகத்தைக் கிராமத்தாருக்குக் காட்ட வேண்டும். வாலிபர்கள் வைத்தியர்களாக வேண்டும் – நாட்டு மக்களின் உடல், உள்ளம் இரண்டிலும் உள்ள நோய் தீர்க்கும் மருந்தளிக்க வேண்டும். ஆம்! வாலிபர்கட்கு வேலை ஏராளமாக இருக்கிறது.

- நமக்கென்ன என்று கூறும் சுயநலமிகளும், நம்மால் ஆகுமா என்று பேசும் தொடை நடுங்கிகளும், ஏன் வீண் வம்பு என்று சொல்லும் கோழைகளுமல்ல நாட்டுக்குத் தேவை. வீரர்கள் தேவை. உறுதிபடைத்த உள்ளங்கள் தேவை.

- கருகிவிட இருந்த அரும்பு மலர்ந்தது போல – மங்கி விட்ட கண்கள் மீண்டும் ஒளி பெறத் தொடங்கியது போல – தேய்ந்த நிலவு திடீரென முழு மதியானது போல – ஒரு நாட்டின் வரலாற்றிலே ஏற்படுகின்ற உன்னதமான சம்பவம் – சுதந்திரம்!

- மாற்றான் வீட்டுத் தோட்டத்திலே பூத்திடும் மல்லிகைக்கும் மணம் உண்டு – ரசிக்கத்தான் செய்வோம். அது போலத்தான் பேசுபவரின் கருத்து பயன் தருமாயின் கேட்போரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும் கேட்பவர்கள் ஏற்றுக் கொள்வது உறுதி.

- எல்லாப் புத்தகங்களையும் விட சிறந்த புத்தகம் இந்தப் பரந்த உலகம்தான். உலகத்தைவிட உன்னதமான புத்தகம் வேறு கிடையாது. ▫

# தருமபுரி மாவட்டம்
# ஒகேனக்கல் ஆடிப்பெருக்கு விழா

"வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி"

– என்பது ஆன்றோரின் வாக்கு.

அவ்வாக்கின்படி வானம் பொய்த்தாலும் தான் பொய்க்காமல் அன்னை காவிரி தன் கடமையை அல்லும் பகலும் அயராது செவ்வனே செய்து கொண்டிருக்கிறாள். வளம் நிறைந்த காலத்தில் பிறர் போற்றுவதையும் வளம் குறைந்த நிலையில் தன்னை தூற்றுவதையும் பொருட்படுத்தாமல் உழைத்துக் கொண்டிருப்பவள் அன்னை காவிரி என்பது மிகையாகாது.

பண்டைக்காலத்தில் நம் முன்னோர்கள் பெண்களை பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை பேரிளம்பெண் என ஏழு பருவங்களாகப் பகுத்தனர். அவ்வேழு பருவங்களையும் தன்னகத்தே உள்ளடக்கியவள் அன்னை காவிரி. ஒவ்வொரு பருவத்திலேயும் தன் பணியினைச் சிறப்பாகச் செய்து வருகிறாள். இயற்கை எழில்மிகு குடகிலே பிறந்து பேதையாகத் தவழ்ந்து பெதும்பையாக நடந்து மங்கையாக ஒடி மடந்தையாக நாணி அரிவையாகப் பொங்கி எழுந்து தெரிவையாக விரிந்து பேரிளம்பெண்ணாகக் குறுகி அமைதியுடன் ஆழ்கடலில் சென்று ஐக்கியமாகிறாள். இத்தகு சிறப்புமிகு அன்னைக் காவிரியைப் பற்றி எழுதாத இலக்கியங்கள் இல்லை; பாடாத கவிதைகள் கிடையாது; புகழாத புராணங்கள் இல்லை. உலகில் எத்தனையோ நதிகள் இருந்தாலும் காவிரிக்குக் கிடைத்த புகழ் வேறெந்த நதிகளுக்கும் கிடைக்கவில்லை என்பது திண்ணம்.

வரலாற்றில் தனக்கென்று தனி இடத்தைப் பிடித்த அன்னை காவிரி குடகிலே பிறந்து கடலிலே கலக்கும் வரை மேடு பள்ளங்களைக் கடந்து பல்வேறு மாவட்டங்கள் வழியாகச் சென்றாலும் புன்னகைப் பொலிவோடு பொங்கி வழிவது தருமபுரி மாவட்டம் ஒகேனக்கலில்தான் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

ஆடியிலே பெருக்கெடுத்து ஆடிவரும் காவிரிக்கு மேலும் பெருமை சேர்ப்பது ஒகேனக்கல். அன்னை காவிரியின் கரையோரங்களில் எல்லாம் ஆடிப் பதினெட்டாம் நாளினை சிறப்பாகக் கொண்டாடினாலும் இலட்சக்கணக்கான மக்கள் புனித நீராடுவது ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியில்தான். புதுமணத் தம்பதிகள், சுற்றுலாப் பயணிகள் இந்நீர் வீழ்ச்சியில் நீராட ஆர்வத்துடன் வருகை தருகின்றனர். இந்நாளில் இவர்களையெல்லாம் மேலும் மகிழ்விக்க ஒகேனக்கல்லில் ஆண்டுதோறும் அரசின் சார்பில் ஆடிப்பெருக்கு விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒகேனக்கல் பகுதியை சிறந்த சுற்றுலாத் தலமாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை அர்ப்பணித்து ஆடிப்பெருக்கு விழா நடத்தவும் ஆணையிட்டதின் பேரில் இவ்விழா சிறப்பாக நடத்தப்பட்டது.

ஒகேனக்கல்லில் ஆடி பதினெட்டாம் நாள் 2.8.2004 அன்று ஆடிப்பெருக்கு விழா மாவட்ட ஆட்சித்தலைவர்



திரு.ஆஷிஷ் வச்சானி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்தோடு விழாத் தொடங்கிற்று. விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் சுற்றுலா அலுவலர் திரு. அ. இஸ்மாயில் அவர்கள் வரவேற்றார். மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் அரசின் பல்துறைப் பணி விளக்கக் கண்காட்சியினைத் திறந்து வைத்தார். இக்கண்காட்சியில் அரசின் பல்துறையும் இடம் பெற்றிருந்தன. அரசின் சாதனைகளோடு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் நம்நாட்டின் கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றையும் விளக்கும் வகையில் அரங்குகள்




அமைக்கப்பட்டிருந்தன. இவ்வரங்குகளை மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டுப் பாராட்டினார்கள்.

பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆரண்யா பூங்காவில் காட்டாமணக்குச் செடியினை நடவு செய்யும் பணியினைத் தொடங்கி வைத்து ரூ.41.29 இலட்சம் மதிப்பில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குக் கடன் உதவிகள், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட உதவிகள், முதியோர் உதவித் தொகை, நலிவடைந்தோர் உதவித் தொகை, இலவச வீட்டுமனைப் பட்டா உள்ளிட்ட அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழா பேருரையாற்றினார். அவர் பேசும்போது,

“மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2001இல் தமிழக ஆட்சியை நடத்த பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் குறிப்பாக, சுற்றுலாத்துறை, ஒரு முன்னுரிமை பெற்ற துறையாகச் செயல்பட ஆரம்பித்தது. தமிழகத்திலுள்ள சுற்றுலா வளங்களை உலகில் பல பகுதிகளிலும் தெரியும் வண்ணம் விளம்பரங்கள் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் உள் கட்டமைப்பு வசதிகளை அதிகரித்து அடிப்படை வசதிகளைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் முதலாண்டில் (2001–2002) ரூ.17 கோடியும், அடுத்த ஆண்டில் (2002–2003) ரூ.26.79 கோடியும், இவ்வாண்டு ரூ.30.35 கோடியும் அனுமதித்து உள்ளார்கள்.

தமிழ்நாடு, சிறப்பு மிக்க கோயில்கள், கோட்டை கொத்தளங்கள் தமிழகத்தின் சிறப்பைப் பறைசாற்றும் பாரம்பரியமிக்க கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை, எழில் கொஞ்சும் இயற்கை சூழல் மிக்க மலை வாழிடங்கள், வனவிலங்கு சரணாலயங்கள், உலகப் புகழ் பெற்ற அழகான கடற்கரை, சுற்றுலாவுக்குத் தேவையான அமைப்புகள், முகில் முட்டும் சிகரங்கள், அதில் இருந்து உருவாகி வரும் அருவிகள், கடல், தாவர உயிரினங்கள் முதலான சுற்றுலாச் சிறப்பியல்புகளை, தன்னகத்தே கொண்டுள்ளது.

ஒரு நாட்டின் மொழி, மதம், நிறம், இனம் என்ற எல்லைகளைக் கடந்து மக்களிடையே மனித நேயத்தை வளர்க்கும் ஒரு சக்தி வாய்ந்த பாலமாக சுற்றுலாத் திகழ்கிறது.

சுற்றுலாத்துறை பல்வேறு விழாக்கள் நடத்தி சுற்றுலா குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி வருகிறது. தமிழகத்தில் கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு ஆகிய இடங்களில் கோடை விழாக்களும், குற்றாலத்தில் சாரல் விழா, மாமல்லபுரத்தில் நாட்டிய விழா, சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி விழாவும் நடத்தி வருகிறது. ஒகேனக்கல்லில் ஆண்டுதோறும் ஆடிப்பெருக்கு விழாவும் நடத்தப்பட்டு வருகிறது.

2003–2004ஆம் ஆண்டில் சுற்றுலா மூலம் சுமார் ரூ.17 ஆயிரம் கோடி ரூபாய் அந்நியச் செலாவணியாக கிடைக்கப் பெற்றது. அந்நியச் செலாவணி ஈட்டுவதில் ஜவுளித்துறை, விலையுயர்ந்த ஆபரணங்கள் ஏற்றுமதி ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக சுற்றுலாத்துறை மூன்றாம் இடத்தில் உள்ளது.

இந்தியாவிற்குக் கடந்த ஆண்டு சுமார் 23 இலட்சம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளார்கள். இதில் தமிழ்நாட்டிற்கு வந்தவர்களின் எண்ணிக்கை 8 இலட்சம் ஆகும்.

ஒகேனக்கல் சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகளுக்காகச் சுற்றுலாத்துறை ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து இருந்தது. இதில் பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் இன்னும் ஒரு மாதத்தில் செய்து முடிக்கப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள தீர்த்தமலை சுற்றுலாத் தலத்திற்கு சுற்றுலாத்துறை ரூ.50 இலட்சம் நிதி அனுமதி



வழங்கி உள்ளது. இத்திட்டப் பணிகள் இந்த ஆண்டிலேயே தொடங்கப்படும்.

ஒகேனக்கல் சுற்றுலாத் தலத்தில் சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகளுக்காகவும், அடிப்படை வசதிகள் செய்திடவும் மற்றும் சுற்றுலா வசதிகள் செய்திடவும், ரூபாய் இரண்டு கோடி அளவில் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு சுற்றுலாத்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி அணைப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன்படும் வகையில் உல்லாசப் படகு வசதிகள் ஒரு சில தினங்களில் தொடங்கப்படவுள்ளது.

மனமகிழ்விற்காக, வேலைவாய்ப்பிற்காக, இந்திய ஒருமைப்பாட்டிற்காக, அந்நியச் செலாவணி ஈட்டுவதற்காக பாரம்பரிய கலைகளை வளர்க்க சுற்றுலா பயன்படுகிறது" என்று கூறினார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆஷிஷ் வச்சானி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையாற்றும் போது, "தருமபுரி மாவட்டத்தைப் பின் தங்கிய பகுதி என்று கூறுகிறார்கள். அதனை மாற்றியமைக்க ஒரு முக்கியத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. வாணியாறு, தும்பலஅள்ளி, சித்தேரி மலை ஆகிய பகுதிகளை ரூ.3.5 கோடி மதிப்பீட்டில் சுற்றுலாத் தலமாக மாற்றியமைக்க அரசுக்குத் திட்ட அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒகேனக்கல்லில் கண்ட இடங்களில் குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொட்டாமல் சுத்தமாக வைத்துக் கொள்வது ஒவ்வொருவரின் தலையாயக் கடமையாகும். இதற்குப் பொது மக்களும் சுற்றுலாப் பயணிகளும் மிகுந்த ஒத்துழைப்புத் தர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்" என்று பேசினார்.

மேலும், இவ்விழாவில் மொரப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. பழனியப்பன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் சுற்றுலாத் துறை, கலைப் பண்பாட்டுத் துறை சார்பில் கரகம், காவடி, பொய்க்கால் குதிரை, மயில் நடனம் ஆகிய கிராமியக் கலை நடனங்கள், இன்னிசை நிகழ்ச்சிகள், இசைப்பாட்டு மன்றம், நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் ஆடல் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இவ்விழாவினை ஒட்டி அமைக்கப்பட்ட வளம் தரும் திசையில் வளரும் தருமபுரி மாவட்டத்தின் பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சியினை ஆயிரக் கணக்கான சுற்றுலாப் பயணிகள் கண்டுகளித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மூன்றாண்டு காலச் சாதனைகளைப் பாராட்டினார்கள்.

**– மூ. நா. கிருட்டிணசாமி,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி.



# தேனியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் உலகத் தரம் வாய்ந்த மாவட்ட விளையாட்டு அரங்கம்

தேனி மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி, அரசு கலைக் கல்லூரி, மகளிர் தொழில்பயிற்சி நிலையம், சேடப்பட்டி – ஆண்டிபட்டி கூட்டுக் குடிநீர் திட்டம், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் போன்ற எண்ணற்ற சிறப்பான பணிகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக பதவி ஏற்றவுடன் நடைபெற்று வருகின்றது. இத்தனை சிறப்புகள் அமைந்த தேனி மாவட்டத்திற்கு விளையாட்டு அரங்கம் வேண்டும் என்று மாணவ/மாணவியர்களிடமும், விளையாட்டு ஆர்வமுள்ளவர்களிடமும் மேலோங்கி நின்றது.

இந்த நீண்ட நாள் கனவை நனவாக்கிடும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேனி மாவட்டத்தில் விளையாட்டு அரங்கம் அமைக்க உத்தரவிட்டார்கள். அதனைத் தொடர்ந்து தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சுனீல் பாலீவால்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட விளையாட்டு அலுவலர் ஆகியோர் விளையாட்டு அரங்கத்திற்கான இடத்தினை தேர்வு செய்தார்கள். மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பின்புறத்தில் பெருந்திட்ட வளாகத்தில் நவீன விளையாட்டு அரங்கம் அமைத்திட முடிவு செய்யப்பட்டது. இங்குள்ள 15.66 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு அரங்கமும், விளையாட்டு மைதானமும் அமைக்கப்படவுள்ளது. விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு ரூ.43 இலட்சமும், 400 மீட்டர் ஓடுதளம் ரூ.4.5 இலட்சத்திலும், கால்பந்து, ஹாக்கி மைதானங்கள் அமைப்பதற்கு ரூ.4.05 இலட்சமும், வாலிபால் மைதானம் அமைக்க ரூ.69,950மும், கபடி மைதானம் ரூ.30 ஆயிரம் மதிப்பீட்டிலும், கோ–கோ மைதானம் ரூ.75 ஆயிரம் மதிப்பீட்டிலும் அமைக்கப்படவுள்ளன. உடற்பயிற்சி செய்வதற்காக நவீன கருவிகள் கொண்ட உள்விளையாட்டு அரங்கம் ரூ.13.50 இலட்சத்தில் கட்டப்படவுள்ளது. மொத்தம் ரூ.70,48,850 மதிப்பீட்டில் விளையாட்டு அரங்கம் கட்டப்படவுள்ளது.

மாநிலங்களவை உறுப்பினர் திரு.டிடிவி தினகரன் அவர்கள் ரூ.25 இலட்சத்தை இறகு பந்து உள் விளையாட்டு அரங்கத்திற்கும், ரூ.10 இலட்சத்தை மாவட்ட விளையாட்டு அரங்கத்தின் சுற்றுச் சுவருக்கும் நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மொத்தம் ரூ.35 இலட்சம் உடனடியாக ஒதுக்கீடு செய்து தந்துள்ளார்கள்.

மேலும் இந்த விளையாட்டு அரங்க வளாகத்தில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் நீச்சல் குளமும், ரூ.4.5 இலட்சம் மதிப்பீட்டில் ஸ்குவாஷ் உள் விளையாட்டு அரங்கமும் மற்றும் திறந்தவெளி டென்னிஸ் மைதானமும் அமைக்கப்பட உள்ளது. திறந்தவெளி ஜிம்னாஸ்டிக் பயிற்சி அரங்கமும் கட்டப்படவுள்ளது.

மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்கான கால்கோள் விழா மாண்புமிகு பொதுப்பணித்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட விளையாட்டு அரங்கிற்கு கால்கோள் நாட்டி மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில், "மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தொகுதி அடங்கிய இம்மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அரசு திட்டங்களின் முழுப் பயன்களும் கிராமப்புறங்களில் வாழ்கின்ற அடித்தட்டு மக்களைச் சென்றடையும் வகையில் செயல்படுத்தப்படுகின்றன.

தமிழகத்தை விளையாட்டுத் துறையில் முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தனி கவனம் செலுத்தி வருகிறார். மாநிலத்தில் விளையாட்டு பல்கலைக்கழகம் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



மாவட்டத்தில் ஏராளமான வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றாலும், இதுவரை மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்கப்படாமல் இருந்தது. விளையாட்டு அரங்கம் அமைக்க விளையாட்டு வீரர்கள் மற்றும் நகர பொதுமக்கள் அரசுக்குக் கோரிக்கை விடுத்து வந்தனர். அதன் அடிப்படையில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு முதலாவதாக ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் பணிகளைத் தொடங்க பூமி பூஜை நடைபெற்றுள்ளது. இந்த விளையாட்டு அரங்கம் தமிழகத்திலேயே சிறந்த விளையாட்டு அரங்கமாக அமைக்கப்பட உள்ளது. இந்த விளையாட்டு அரங்கத்திற்கு, வரும் ஆண்டில் என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் வழங்கப்படும். தமிழ்நாட்டில் உள்ள விளையாட்டு அரங்கங்களைவிட இது மிகச் சிறந்ததாகவும், உலகத்தரம் வாய்ந்ததாகவும் அமையும். மாவட்டத்தில் தொழிற்சாலைகள் அமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இம்மாவட்டத்தில் கிடைக்கக் கூடிய மூலப் பொருள்கள் மற்றும் கச்சாப் பொருள்களை வைத்து எந்தவிதமான தொழிற்சாலைகள் அமைக்கலாம் என்பதற்கான கருத்துரு தயாரித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

தேனியில் புதிதாக பஸ் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் பஸ் நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு, அந்த இடத்திற்குப் பதிலாக வனத்துறைக்கு அரசு நிலம் இரண்டு மடங்கு கூடுதலாக வழங்குவதற்கும் மாவட்ட நிருவாகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் பஸ் நிலையம் அமைக்கப்படும். தேனி மாவட்டம் அனைத்துத் துறைகளிலும் சிறந்த மாவட்டமாகத் திகழும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சுனீல் பாலிவால் இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில் " தேனி மாவட்டத்தில் நிறைய வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் மக்கள் கேட்பதற்கு முன்பாகவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து மாவட்டத்திற்குத் தேவையான கோரிக்கைகளை நிறைவேற்றி வருகிறோம்.

தேனி மாவட்டத்தில் விளையாட்டை ஊக்குவிப்பதற்காக மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்க குழு ஏற்படுத்தப்பட்டது. அக்குழு விளையாட்டு அரங்கத்தை தேனி–பெரியகுளம் புறவழிச்சாலையில் மாவட்ட பெருந்திட்ட வளாகத்திற்குள் அமைக்க முடிவு செய்யப்பட்டு இன்று பூமி பூஜை நடைபெற்றுள்ளது.

மத்திய அரசின் பங்குத் தொகையாக ரூ.28 இலட்சமும், மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.14 இலட்சமும், பொதுமக்களின் பங்களிப்பாக ரூ.14 இலட்சமும் நிதி கோரப்பட்டுள்ளது. மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் ஷட்டில்காக் அரங்கம் அமைப்பதற்கு ரூ.25 இலட்சமும்,

வளாகத்தைச் சுற்றி பாதுகாப்புச் சுவர் கட்டுவதற்கு ரூ.10 இலட்சம் உட்பட மொத்தம் ரூ.35 இலட்சத்தை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மாநிலங்களவை உறுப்பினர் திரு.டிடிவி தினகரன் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார். பொதுமக்களின் பங்குத் தொகை ரூ.14 இலட்சத்தில் நன்கொடை மூலமாக ரூ.5.65 இலட்சம் பெறப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள தொகையையும் நன்கொடையாளர்கள் இம்மாதத்திற்குள் வழங்குவதாக தெரிவித்துள்ளார்கள்.

இந்த விளையாட்டு அரங்கில் வேறு சில விளையாட்டு அரங்கங்களும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதில் இரண்டு திடல் கொண்ட ஷட்டில்காக் வளாகம், இரண்டு மேஜை கொண்ட டேபிள் டென்னிஸ் வளாகம், புல் மெத்தை டென்னிஸ் அரங்கம், ரூ.40 இலட்சத்தில் நீச்சல் குளம் ஆகியவை சர்வதேச தரத்திற்கு நிகராக அமைக்கப்படவுள்ளன. நீச்சல் குளத்திற்கு வைகை ஆற்றிலிருந்து கிணறு அமைக்கப்பட்டு அதிலிருந்து பைப் லைன் மூலமாக தண்ணீர் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. இக்கூடுதல் பணிகளை நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் தமிழக அரசு மானியம் பெற்று ஸ்குவாஷ் அரங்கம் அமைக்கப்படவுள்ளது. அரங்கத்தின் அனைத்துப் பணிகளும் உலகத்தரம் நிர்ணயித்ததின்படி மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணிகள் அனைத்தும் முடிவுறும் பொழுது மாணவ/மாணவியர்கள், பொதுமக்கள், விளையாட்டு ஆர்வலர்கள் ஆகியோர் பயனடைவார்கள் என்பது திண்ணம். மாவட்ட நிருவாகம் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளுக்கும் அனைத்து தரப்பினரும் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர்கள் திரு.டிடிவி தினகரன், திரு.தங்க தமிழ் செல்வன், திரு.எஸ்.பி.எம்.சையதுகான், போடி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.இராமராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் எஸ்.செல்லமுத்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அ.அமல்ராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் திருமதி ஜி.முத்துமீனாள், மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.சின்னபொன்ராஜ் மற்றும் நன்கொடையாளர்களும், பொதுமக்களும் திரளாக கலந்துகொண்டனர். தேனி மாவட்டத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ள இந்த விளையாட்டு அரங்கம் மேலும் ஒரு சிறப்பைச் சேர்த்து முன்னோடியாகத் திகழும்.

**– ச. செல்வராஜ்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தேனி.



## கல் நாதஸ்வரம்

**நா**தஸ்வரம் ஒரு மங்கல வாத்தியம். தென்னந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் கோயில் திருவிழாவாக இருந்தாலும் சரி திருமணம் முதலான மங்கலமான நிகழ்ச்சியானாலும் சரி அல்லது பொங்கல் தீபாவளி முதலான பண்டிகையாக இருந்தாலும் சரி, நாதஸ்வர நிகழ்ச்சி இல்லாமல் நடைபெறாது. இது ஒரு காற்றிசை துளைக்கருவி. இதைக் கல்லிலேயே செய்து பெருமை படைத்தது தமிழ்நாடு.

திருநெல்வேலி சந்திப்பிலிருந்து திருச்செந்தூர் செல்லும் நெடுஞ்சாலையில் 30 ஆவது கிலோ மீட்டரில் தாமிரபரணி ஆற்றின் தென்கரையில் அமைந்த திருப்பதியில், ஆதிநாதசுவாமி கோயிலில் கல்லினால் செய்யப்பட்ட இரு நாதஸ்வரங்கள் உள்ளன. இதில் ஒன்று சற்று உடைந்துவிட்டது. மற்றொன்று நல்ல நிலையில் உள்ளது.

இந்த நாதஸ்வரம் ஊர் பெயர் தெரியாத ஒரு கற்சிற்பியின் அபூர்வமான கைவண்ணம். அடி அகன்று மேலே குறுகி இருக்கும்படி ஒரே கல்லில் செதுக்கப்பட்டது. பின்னர் இதிலே துளையிட்டு நாதஸ்வரமாக உருவாக்கப்பட்டது. வாய் வைத்து ஊதுமிடத்தில் ஒரு அங்குல குறுக்களவும் அடுத்த முனையில் மூன்று அங்குல குறுக்களவும் கொண்ட நீள் துளை இரண்டு அடி நீளமுள்ள இந்த நாதஸ்வரத்தின் உட்புறமாகச் செல்லுகிறது.

இதன் மேல்புறத்தில் விரல் வைத்து ஸ்வர ஒழுங்கு செய்வதற்கான ஏழு துளைகள் ஒரு குறிப்பிட்ட இடைவெளி விட்டு அமைக்கப் பட்டிருக்கின்றன. மற்றொரு புறத்தில் நான்கு துளைகள் தொனி அளவைக் கட்டுப்படுத்த வைக்கப்பட்டவைதான் இந்த துளைகள். மிக வழுவழுப்பாகவும், மென்மையாகவும் செய்யப்பட்டிருக்கின்றன. வாய் வைத்து ஊதி, பக்கவாட்டில் அமைக்கப்பட்டிருக்கும் விரல் துளைகளைச் சரியாக கையாளுவதன் மூலம் எந்தப் பாடலையும் இதிலே இசைக்கமுடியும்.

இந்தப்போன்று கல் நாதஸ்வரம் ஒன்று கும்பகோணத்திலுள்ள கும்பேஸ்வரர் கோயிலிலும் உள்ளது. நம் முன்னோர்கள் செய்த விந்தைகளில் இதுவும் ஒன்று. ✧

# இதய நோய்கள்

□ பேராசிரியர் **ச. இளங்கோவன்,** எம்.டி.டி.எம்., (இதயம்)
□ பேராசிரியர் **வா. செகந்நாதன்,** எம்.டி.டி.எம்., (இதயம்)
'இதயஇயல் துறை'
சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும்
அரசு பொது மருத்துவமனை, சென்னை.

## உலக இதய கூட்டமைப்பு
(World Heart Federation)

உலக இதய நாளினை வருடந்தோறும் கொண்டாடி வரும் உலக இதய கூட்டமைப்பு (World Heart Federation) ஒரு அரசு சாராத அமைப்பாகும். இது ஜெனிவா நகரைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. இவ்வமைப்பில் ஐந்து கண்டங்களைச் சார்ந்த 97 நாடுகளின் 166 அமைப்புகள் அரிய பல சேவைகளைச் செய்து வருகின்றன.



## உலக இதய நாள்

உலக இதய நாள் என்பது ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் திங்கள் கடைசி ஞாயிறன்று இதயம் பற்றிய நோய்களின் அறிவியல் குறித்த விழிப்புணர்வை உலக மக்களுக்கு உண்டாக்கிட ஏற்படுத்தப்பட்ட நாளாகும். இந்நாளை உலக இதய கூட்டமைப்பினர் (World Heart Federation) ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடு கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஒரு கருப்பொருளை (Theme) மையமாகக் கொண்டு அது சார்ந்த நோய்களைத் தடுத்திடும் (Prevention) விதமாய் இது தன் பணியினைச் செய்து வருகின்றது.

இவ்வாண்டின் உலக இதய நாளின் கருப்பொருள் (Theme) "குழந்தைகள், இளம் சிறார்கள் – இதய நோய்" பற்றிய விழிப்புணர்வு என்பதாகும்.

குழந்தைகள், இளம் சிறார்களுக்கு ஏற்படும் பிறவி இதய நோய்கள், கீல்வாத காய்ச்சலைத் தொடர்ந்து வரும் இதயத்து தடுப்பி நோய்கள் பற்றியும், உடல் பருமன், மற்றும் இதய அழற்சி நோய் பற்றியும், உடற்பயிற்சி செய்யாமலிருந்தால் ஏற்படும் விளைவுகளைப் பற்றியும் அறிந்திடுவோம்.

## பிறவி இதய நோய்கள்

பிறவி இதய நோய்கள் என்பது குழந்தை, தாயின் கருப்பையில் உண்டாகி வளரும் காலத்து நிறப்புரிக் குறைபாடுகள் (chromosomal defects), மரபுவழிக் காரணிகள் (genetic factors), சுற்றுப்புறச் சூழல் காரணிகள் (environmental factors) மற்றும்




மேற்கூறிய காரணிகள் ஒன்றோடொன்று கலந்து வருவதால், அவற்றைப் பல்வகைக் காரணிகள் (multifactorial) என நால்வகை காரணங்களால் வருவதாகும்.

### பிறவி இதய நோய் வகைகள்

இத்தகு இதயக் குறைபாடுகளை நீலம் ஏறாப் பிறவிக்குறை இதய நோய் (acyanotic congenital heart disease), நீலம் ஏறிய பிறவிக்குறை நோய் (Cyanotic congenital heart disease) என்றும் இரு வகையாகப் பிரிப்பர்.

### நீலம் ஏறாப் பிரிவு

இப்பிரிவில் உள்ள குறைபாடுகளினால் அசுத்த இரத்தமும், சுத்த இரத்தமும் கலக்காத உள்ள நிலையில் அமைந்திட்ட குறைபாடுகளாகும். பிறவி குறைப் பெருந்தமனி தடக்கிதழ்க்குறுக்கம் (congenital aortic valve disease), பிறவிக் குறை நுரையீரல் தமனி தடுப்பிநோய் (congenital pulmonic valve disease), மேலறைத் தடுப்புச் சுவர் குறை / ஓட்டை (atrial septal defect), கீழறைத் தடுப்புச் சுவர் குறை / ஓட்டை (ventricular septal defect), பெருந்தமனி / நுரையீரல் தமனி இணைப்புக் குழல் திறப்பு (patent ductus arteriosus) போன்றவை இப்பிரிவில் அடங்கும்.

### நீலம் ஏறும் பிரிவு

இதில் இருவகை இரத்தமும் கலந்து விடுவதால், இக்குறை பாடுடைய குழந்தைகள் நீல வண்ணத்தில் இருப்பர். இது பெரும்பாலும் உதடு, நாக்கு போன்ற பாகங்களில் நன்கு காணப்படும். ஃபேலோ நான்மை (tetralogy of fallot) மூவிதழ்க் குறை (tricuspid atresia) போன்றவை இதில் அடங்கும்.

### கீல்வாதக் காய்ச்சல் மற்றும் அதன் சார்பான இதய நோய்கள்

கீல்வாதக் காய்ச்சல் என்ற நோயானது தொண்டை மற்றும் நாவடிச் சதை எனச் சொல்லப்படுகின்ற நிணநீர் முடிச்சினை குருப் "ஏ" பீட்டாஈமாலிடிகஸ் என்னும் நுண்கிருமிகள் தாக்குவதால் உண்டாவதாகும். இந்த நுண்கிருமி ஸ்ரெப்டோகாக்கஸ் என்னும் நுண்கிருமி வகையின் உட்பிரிவில் ஒன்றாகும்.

இந்நோயானது வளரும் நாடுகளான இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் அதிகமாக உள்ளது. உலக நல்வாழ்வுக் கழகத்தினரின் (World Health Organisation) 1997ஆம் ஆண்டின் ஆய்வு, உலக மக்களில் ஏறத்தாழ 120 இலட்சம் பேர் கீல்வாதக் காய்ச்சல் மற்றும் கீல்வாத இதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடுகின்றது.

மேலும், ஆண்டொன்றுக்கு சுமார் 20 இலட்சம் பேர் இந்நோயின் பாதிப்பால் சிகிச்சைக்காக மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். அடுத்ததாக இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 10 இலட்சம் பேர் இந்நோய் வந்த ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்குள் அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய சூழலுக்குத் தள்ளப்படுகின்றனர். இதுமட்டுமின்றி இந்நோயால் ஆண்டு ஒன்றிற்குச் சற்றேறக்குறைய 5 இலட்சம் பேர் உயிரிழக்கின்றனர். பல்லாயிரக் கணக்கானோர் முடமாக்கப்படுகின்றனர் (disabled) என்பதையும் அறிதல் வேண்டும். இந்திய மருத்துவ

ஆராய்ச்சி மன்றம் (Indian council of Medical Research) நடத்திய ஆய்வின்படி இந்தியாவில் ஆயிரத்தில் ஐந்து பேருக்கு, குறிப்பாக ஆறு வயது முதல் பதினாறு வயது வரை உள்ள பள்ளிச் சிறார்களுக்குப் பெருமளவில் வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

கீல்வாதக் காய்ச்சல் வந்த பின்னர், அதனைச் சரியாக நோய் வந்த தொடக்க காலத்திலே முதல் நிலை தடுப்பினை (Primary prevention) மேற்கொள்ளாத நிலையில், அதன் தாக்கம் இதயத்தில் உள்ள மூன்று அடுக்குகளையும் அதாவது இதய மேலுறை, இதய உள்ளுறை, இதய தசை உறை ஆகிய மூன்றையும் தாக்கும். இதய தடுக்கிதழ்களான ஈரிதழ் தடுப்பி, தமனித் தடுக்கிதழ், மூவிதழ் தடுப்பி, நுரையீரல் தடுக்கிதழ் ஆகியவற்றை பாதிக்கும். இதய தடுக்கிதழ்களில் குறுக்கமும், பின்னொழுக்கும் ஏற்பட்டு நாளடைவில் இதயம் சரியாகச் செயல்படாமல் இதயத் தளர்ச்சி வந்து உயிரிழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

### இதய அழற்சி நோய்

இது பெரும்பாலும் வைரஸ், பாக்டீரியா போன்ற நுண் கிருமியால் வருவதாகும். எனவே இளம் வயதினருக்குத் தொடர்ந்து காய்ச்சல் இருக்குமிடத்து (மருந்துகள் பல நாட்கள் கொடுத்தும்) இதய அழற்சி உள்ளதா என்பதைக் கண்டறிதல் வேண்டும். இதனை குருதி ஆய்வுகள் மற்றும் செவிவழியுணரா இதய எதிரொலி ஆய்வு (echocardiography) மூலமாகக் கண்டறியலாம்.



கீல் வாதநோயினால் ஈழிதழ் தடுப்பி குறுக்கம்

### உடல் பருமன்

ஒருவரின் உடல் எடை குறிப்பிட்ட அளவிற்கு மேல் அதிகமாயிருப்பின், அதிக எடையுள்ளவர் என்றும், மிக அதிகமாக எடையிருப்பின் உடல் பருமன் (obesity) உள்ளவர் என்றும் கூறுவர்.

அண்மைக் காலத்தில் வந்துள்ள ஒரு ஆய்வின்படி உலகின் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 22 மில்லியன் குழந்தைகள் மிகு உயர் எடையும், பருத்த உடல்பருமன் உடையவராகவும் கண்டறியப்பட்டுள்ளது.

ஒருவரின் உடல் எடை எவ்வகையினைச் சாரும் என்பதை அறிய உடல்நிறை குறியீட்டெண் பயன்படுகிறது. இதனை கீழ்க்கண்ட வாய்பாட்டின் மூலம் கண்டறியலாம்.

$$\text{உடல்நிறை குறி எண்} = \frac{\text{உடலின் எடை (கி.கி)}}{\text{உடலின் உயரம் x உயரம் (மீட்டரில்)}}$$

| உடலின் எடை வகைகள் | உடல்நிறைக் குறியெண் |
|---|---|
| குறை எடை | < 18.5 |
| இயல்பு நிலை எடை | 18.5 - 24.9 |
| மிகு உயர் எடை | 25 - 29.9 |
| பருத்த உடல் நிலை | > 30 |

உடல்பருமன் உடையோருக்குக் கொழுப்புத் திசுக்கள் மிகுந்து காணப் படுகிறது. இதயமானது தன் பணியைச் செய்திட இதய தசைகள் மிகுந்தும் அல்லது அவை பெருக்கமுற்றும் இருந்தால்தான் இதயக் குருதியின் வெளிசெல் அளவு (cardiac output), உடலின் தேவைக்கு ஏற்றவாறு அதிகரித்திட முடியும். இவ்வித இதய பெருக்கத்தால் நாளடைவில் இதயம் தளர்ந்து இதய தளர்ச்சி நோயாக உருப்பெற வாய்ப்புள்ளது.




### உடற் பயிற்சி

குழந்தைகள் மற்றும் சிறார்கள் சரியான உடற்பயிற்சி செய்யாமல் இருக்கும் பழக்கம் அண்மை காலங்களில் பெருகிவருவதைக் காணலாம். இதனால் அவர்கட்கு உடல் பருமனும், இரத்த அழுத்தம் மற்றும் மாரடைப்பு நோய் முதலிய நோய்கள் இளமைக் காலத்தில் வர அதிக வாய்ப்பு உள்ளது.

இறுதியாக,

"இதயம்
உடலின் உறுப்புகளுக்கு
உணவினை வழங்கிடும்
அட்சய பாத்திரம்"

என்பதை அறிந்து, அதனை நன்றாக பேணிக்காப்பதன் மூலம் நல வாழ்வு வாழ்ந்திடலாம். ◆

## இதயத்தைக் காப்போம்

உலகத்து மாந்தர்தம்
இதயத்தை ஒருங்கிணைத்து
உரியநல் விழிப்புணர்வை
வெளிப்படுத்த வேண்டுமென

உலகத்து இதயக்
கூட்டமைப்பர் கூறிட்டார்
செப்டம்பர் திங்கள்தனின்
இறுதி ஞாயிறை உலக
இதய நாள் என்றே.

குழந்தைகள் – சிறார்கள்
அடைந்திடும் இதயத்து
நோய்பற்றி உலகோர்க்கு
விழிப்புணர்வு ஊட்டுதலே
இவ்வருட இதயநாள்
கருப்பொருளாம்.

இதுகுறித்த விழிப்புணர்வை
இசைந்து நாம் செயல்பட்டால்
இதயத்து நோய்கள்பல
இருக்கும் இடம் தெரியாமல்
உருண்டோடிப் போய்விடும்
இது உறுதி நம்பிடுவீர்
இதற்காக முயன்றிடுவீர்

பேராசிரியர் மருத்துவர் **ச. இளங்கோவன்**

## விருதுநகர் மாவட்டத்தில்

# அனைவருக்கும் கல்வி இயக்கம்

*எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்*
*கண்என்ப வாழும் உயிர்க்கு*

கல்விக்கண் திறந்த காமராசரை ஈன்றெடுத்த பெருமைக்குரியது விருதுநகர். ஒளி தந்து வழிகாட்டும் விழியாகிய அறிவுக் கண்களை அனைவரும் பெறவேண்டியது அவசியமாகும். நல்லறச் செயல்களாய்ப் பல்லறங்கள் பாரினில் இருந்தாலும் "புண்ணியம் கோடி ஆங்கு ஓர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல்" என்பதனை உணர்ந்து, தெளிந்து, தெரிந்து, தேர்ந்து, கல்வியை அனைவரும் பெறுவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அரசால் நடத்தப்படுவதே, அனைவருக்கும் கல்வி இயக்கம் ஆகும். இது விருதுநகர் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுகிறது என்பது பெருமைக்குரிய ஒன்றாகும்.

இளமையில் கல்வி சிலை மேல் எழுத்து என்ற அடிப்படையில் 5 வயது முதல் 14 வயது வரை உள்ள குழந்தைச் செல்வங்கள் அனைவருக்கும் கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கும் அற்புதத் திட்டமே அனைவருக்கும் கல்வித் திட்டமாகும்.

கல்வியே அழியாச் செல்வம் என்பதனை உணர்ந்து கிராமக் கல்விக் குழுவின் மூலம் மக்களே முன் நின்று ஈடுபாட்டுடன் நடத்தும் ஓர் உன்னத இயக்கமாக அமைவதால் இது "அனைவருக்கும் கல்வி இயக்கம்" என்று பெயர் பெற்று அழைக்கப்படுகிறது.



இத்தகைய சீரிய திட்டம் விருதுநகர் மாவட்டத்தில் 2001ஆம் ஆண்டு முதல் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் கல்வி பயின்றிட பள்ளியில் சேர்த்தல், தொடர்ந்து பள்ளியில் பயிலச் செய்தல், இடை நிறுத்தல் இல்லாது அனைவரையும் தக்க வைத்தல், கல்வித்தரத்தை உயர்த்தி, தரமான கல்வியை வழங்குதல், அவர் தம் அடைவுநிலை உயரச் செய்தல், பள்ளிகளுக்கு வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவைகளே இத்திட்டத்தின் செயல்பாடுகளாகும்.

### விழிப்புணர்வுப் பேரணிகள் மற்றும் கூட்டங்கள்

2003 ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் மக்களிடையே கல்வியின் அவசியத்தை உணர்த்தும் வகையில் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊர்களிலும் விழிப்புணர்வுப் பேரணிகள் மற்றும் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் முதல் வகுப்பில் 38,336 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் 18,507 பெண் குழந்தைகளும் அடங்குவர்.

### புதிய பள்ளிகள்

விருதுநகர் மாவட்டத்தில் பள்ளிகள் இல்லாத கிராமங்கள் ஏதும் இல்லை என்று கூறுகின்ற அளவில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் மூலம் 2001–2002ஆம் ஆண்டில் 3 தொடக்கப் பள்ளிகளும், 2002–2003ஆம் ஆண்டில் 3 தொடக்கப் பள்ளிகளும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. மேலும் 2001–2002ஆம் ஆண்டு ஒரு தொடக்கப் பள்ளியும், 2002–2003ஆம் ஆண்டில் 4 தொடக்கப் பள்ளிகளும் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு, கழிப்பறை வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இவற்றுள் இராஜபாளையம் வட்டாரத்தில் தென்றல் நகர், அம்பேத்கர் நகர் ஆகிய தொடக்கப் பள்ளிகள், ஆதிதிராவிடர் குடியிருப்பில் உள்ள பள்ளிகள் ஆகியவையாகும்.

## கற்றல் கற்பித்தல் பொருட்கள்

கற்பித்தலின் போது ஆசிரியர்கள் சில உபகரணங்களையும், வரைபடங்களையும், வண்ணப் படங்களையும், மாதிரி உருவங்களையும் வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய வகையில் கற்றல் கற்பித்தல் பொருட்கள் வாங்க 2002–2003ஆம் ஆண்டில் ஒரு ஆசிரியருக்கு தலா ரூ.500 வீதம் 6,000 ஆசிரியர்களுக்கு ரூபாய் 30 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2003–2004ஆம் ஆண்டில் 5,708 ஆசிரியர்களுக்கு ரூபாய் 28 இலட்சத்து 54 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இதில் ஆதிதிராவிடர் நலப்பள்ளியில் பணிபுரியும் 71 ஆசிரியர்களுக்கு கற்றல் கற்பித்தல் பொருட்கள் மானியமாக ரூபாய் 35,500 தரப்பட்டுள்ளது.

## கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்

புதிதாகத் தொடங்கப்பட்ட 6 தொடக்கப் பள்ளிகளுக்கு தலா ரூபாய் 10 ஆயிரம் வீதம் 60 ஆயிரமும், புதிதாக தரம் உயர்த்தப்பட்ட 5 நடுநிலைப் பள்ளிகளுக்கு தலா ரூபாய் 50 ஆயிரம் வீதம் 2 இலட்சத்து 50 ஆயிரமும், கற்றல் கற்பித்தல் உபகரணங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

## பள்ளிகளுக்கான மானியம்

பள்ளிகளுக்கான தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு 2002–2003ஆம் ஆண்டில் ஒவ்வொரு பள்ளிக்கும் தலா ரூபாய் 2 ஆயிரம் வீதம் 874 பள்ளிகளுக்கு ரூபாய் 17 இலட்சத்து 48 ஆயிரமும், 2003–2004ஆம் ஆண்டில் 867 பள்ளிகளுக்கு ரூபாய் 17 இலட்சத்து 34 ஆயிரமும் பள்ளி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிட நலப் பள்ளிகள் 19 பள்ளிக்கு தலா ரூபாய் 2,000 வீதம் தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு ரூபாய் 38,000 பள்ளி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

## பள்ளி மராமத்து மானியம்

பழுதடைந்த பள்ளிக் கட்டடங்களைச் சீரமைக்கும் வகையில் பள்ளி மராமத்து மானியம் 2002–2003ஆம் ஆண்டில் ஒவ்வொரு பள்ளிக்கும் தலா ரூபாய் 5,000 வீதம் 862 பள்ளிகளுக்கு ரூபாய் 43 இலட்சத்து 10 ஆயிரமும், 2003–2004ஆம் ஆண்டில் 827 பள்ளிகளுக்கு ரூபாய் 41 இலட்சத்து 35 ஆயிரமும், பள்ளி மராமத்து மானியமாக வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பள்ளிக் கட்டடங்கள் பராமரிப்புக்காக ரூபாய் 5,000 வீதம் 19 ஆதிதிராவிடர் பள்ளிக்கு ரூபாய் 95,000 வழங்கப்பட்டுள்ளது.

## கட்டடப் பணிகள்

2001–2002ஆம் மற்றும் 2002–2003ஆம் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டின்படி 4 வட்டார வள மைய கட்டடப் பணிகளும், 30 இரண்டு வகுப்பறைக் கட்டடப் பணிகளும், 9 மூன்று வகுப்பறைக் கட்டடப் பணிகளும், 11 பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மைய கட்டடப் பணிகளும், 141 பள்ளிகளுக்கான குடிநீர் வசதி மற்றும் 162 கழிப்பறை வசதிப் பணிகளும், ரூபாய் 2 கோடியே 30 இலட்சத்து 5 ஆயிரம் செலவில் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. 2003–2004ஆம் கல்வியாண்டில் 4 வட்டார வள மைய கட்டடங்கள் தலா ரூபாய் 6 இலட்சம் வீதம் 24 இலட்சத்திற்கும் 6 தொகுப்பு கருத்தாய்வு மையக் கட்டடங்கள் தலா ரூபாய் 2 இலட்சம் வீதம் ரூபாய் 12 இலட்சத்திற்கும், 18 மூன்று வகுப்பறைக் கட்டடங்கள் தலா ரூபாய் 4.5 இலட்சம் வீதம் ரூபாய் 81 இலட்சத்திற்கும், 31 இரண்டு வகுப்பறைக் கட்டடங்கள் தலா ரூபாய் 3 இலட்சம் வீதம் ரூபாய் 93 இலட்சத்திற்கும், 150 குடிநீர் வசதிகள் தலா ரூ.15,000 வீதம் ரூ.22.5



இலட்சத்திற்கும் 150 கழிப்பறை வசதிகள் தலா ரூபாய் 20,000 வீதம் 30 இலட்சத்திற்கும் ஆக மொத்தம் தலா ரூபாய் 2 கோடியே 62 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான புதிய கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கோட்டையூர் ஆதிதிராவிடர் நலப் பள்ளிக்கு 2 வகுப்பறைக் கட்டடம் ரூபாய் 3 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.



## சிறப்பு பயிற்சி வகுப்புகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பு மாணவ, மாணவிகள் மற்றும் அனைத்து வகுப்பைச் சேர்ந்த பெண் குழந்தைகள் மற்றும் இயலாக் குழந்தைகளின் கல்வித்தரத்தை உயர்த்தும் வகையில் பள்ளி வேலை நேரம் நிறைவடைந்த பின்னர் சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு அதற்கான ஊதியத் தொகையாக ரூபாய் 8 இலட்சத்து 97 ஆயிரத்து 427 செலவிடப்பட்டுள்ளது.

## பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையங்கள்

133 பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் நான்காம் சனிக்கிழமைகளில் இம்மையங்களில் கருத்தாய்வு கூட்டம் நடைபெறுகிறது. இக்கருத்தாய்வு மையங்களில் பாடத்தின் கடினப் பகுதிகளில் மற்றும் ஐயங்கள் தீர்வு காணப்படுகிறது. கற்றல் கற்பித்தல் கருவிகள் தயாரிப்பது பற்றி பயிற்சி வழங்கப்படுகிறது. இதனால் ஆசிரியர்களின் கற்பிக்கும் திறன் மேம்பாடு அடைந்துள்ளது. பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையங்களுக்கு மேஜை, நாற்காலிகள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு ஒவ்வொரு கருத்தாய்வு மையத்திற்கும் தலா 45 நாற்காலிகள் வீதம் 133 மையங்களுக்கு ரூபாய் 12 இலட்சத்து 86 ஆயிரத்து 850 வழங்கப்பட்டுள்ளது.

## இயலாக் குழந்தைகளுக்கான மருத்துவ முகாம்

இயலாக் குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்க்கும் பொருட்டு 11 வட்டார வள மையங்களிலும் இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பெற்று இயலாக் குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு சமூகநலத்துறையின் மூலம் கருவிகள் வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இயலாக் குழந்தைகளுக்கு போதிப்பது எவ்வாறு என்பது பற்றிய பயிற்சி அனைத்து ஆசிரியர்களுக்கும் வழங்கப் பட்டுள்ளது. 2003–2004ஆம் ஆண்டில் 1,690 இயலாக் குழந்தைகள் கண்டறியப்பட்டு அவர்களுக்குப் பயிற்சி அளிக்க ரூபாய் 1,63,718 செலவிடப்பட்டுள்ளது.

## ஆசிரியர்களுக்கு தர மேம்பாட்டு பயிற்சி

ஆசிரியர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் அனைத்து வட்டார வள மையங்களிலும் தரமேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2003–2004ஆம் ஆண்டில் 900 ஆசிரியர்களுக்கு 6ஆம் வகுப்பு புதிய பாடத் திட்டத்திற்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தலைமை ஆசிரியர்களுக்கும் தனிப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் அவசியம் பற்றி கிராமக் கல்விக் குழு உறுப்பினர்களுக்கு மூன்று நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## மாற்றுப் பள்ளிகள்

இதுவரை பள்ளியில் சேராத மற்றும் இடைநின்ற மாணவர்களை பள்ளியில் சேர்க்கும் பொருட்டு 124 இணைப்பு மையங்கள் தொடங்கப்பட்டு 2,460 இடைநின்ற மற்றும் குழந்தைத் தொழிலாளர்களும் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## கணினிப் பயிற்சி

2003–2004இல் வட்டார வள மைய மேற்பார்வையாளர் மற்றும்ஆசிரியர் பயிற்றுநர் ஆகியோருக்கு கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாவட்டத்தில் 98 பள்ளிகளில் பயிலும் 4,127 ஆறாம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு கணினிக் கல்வி அளிக்கப்பட்டது. இதில் 806 ஆதிதிராவிட மாணவ, மாணவிகள் அடங்குவர்.

விருதுநகர் மாவட்டத்தில் அனைவருக்கும் கல்வி இயக்கம் பெருமைக்குரிய இயக்கமாக செயல்படுகிறது என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

**– பொ.முத்தையா,**
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
விருதுநகர்.



## ஏத்தென்ஸ் ஊனமுற்றோர் ஒலிம்பிக்கில் பங்கேற்கும் தமிழக தடகள வீரருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ரூ.1 இலட்சம் நிதி உதவி

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 7.9.2004 அன்று தலைமைச் செயலகத்தில், இந்த ஆண்டு ஏத்தென்ஸில் நடைபெறும் ஊனமுற்றோர் ஒலிம்பிக் போட்டிகளான, '2004 பாராலிம்பிக் கேம்ஸ்' (The Paralympic Games-2004) போட்டிகளில் பங்கேற்க உள்ள இந்திய அணியில் இடம் பெற்றிருக்கும் தமிழக தடகள வீரர் எஸ்.ராஜரெத்தினம் இப்போட்டிகளில் கலந்து கொண்டு திரும்பும் வரையிலான அனைத்து செலவினங்களையும் தமிழ்நாடு அரசே மேற்கொள்ளும் வகையில் ரூபாய் 1 இலட்சத்திற்கான காசோலையை அவரிடம் நேரில் வழங்கினார்கள்.

நான்காண்டுகளுக்கு ஒரு முறை உலக அளவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளைத் தொடர்ந்து, அப்போட்டிகள் நடைபெறும் அதே இடத்தில் ஊனமுற்றோர்க்கான ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. உடல் ஊனமுற்றோர்க்கு என நடத்தப்படும் இந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி 'பாராலிம்பிக் கேம்ஸ்' (The Paralympic Games) என்று அழைக்கப்படும். இந்த வகையில், இந்த ஆண்டு, அண்மையில் முடிவுற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளைத் தொடர்ந்து ஏத்தென்ஸ் நகரில் நடைபெற உள்ள ஊனமுற்றோர்க்கான ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியில் எஸ்.ராஜரெத்தினம் என்னும் தமிழ்நாட்டைச் சேர்ந்த தடகள வீரர் இடம் பெற்றுள்ளார். 2002–ஆம் ஆண்டு நடைபெற்ற பூசான் பஸிபிக் போட்டிகள், தேசிய போட்டிகள் மற்றும் பெங்களூரில் நடந்த தேர்வுப் போட்டிகள் ஆகியவற்றில் ராஜரெத்தினம் பங்கேற்று வெளிப்படுத்திய திறமையின் அடிப்படையில் இவர் இந்திய அணியில் பங்கு பெற தேர்வு செய்யப்பட்டுள்ளார். 'பாராலிம்பிக் கேம்ஸ்' போட்டிகளில் நீளம் தாண்டுதல், மும்முறை தாண்டுதல் ஆகிய விளையாட்டுகளில் இவர் பங்கேற்க உள்ளார்.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் அருகே உள்ள காளாப்பூர் கிராமத்தில், எளிமையான ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்து உடல் ஊனமுற்ற நிலையிலும், ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் வகையில் திறமை படைத்துள்ள எஸ். ராஜரெத்தினம், இப்போட்டிகளில் பங்கேற்றுத் திரும்புவதற்கு ஆகும் செலவினங்களை ஏற்று தனக்கு உதவிட வேண்டும் என்று வேண்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனுவினை கொடுத்திருந்தார். இவரது கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், எஸ்.ராஜரெத்தினம் ஏத்தென்ஸ் '2004 பாராலிம்பிக் கேம்ஸ்' போட்டிகளில் கலந்து கொண்டு திரும்பும் வரையில் ஆகும் அனைத்து செலவினங்களையும் மேற்கொள்வதற்கு ஏதுவாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கிட ஆணையிட்டார்கள்.

இதன்படி, தமிழக தடகள வீரர் எஸ். ராஜரெத்தினம் ஏத்தென்ஸ் 'பாராலிம்பிக் கேம்ஸ்' போட்டிகளில் பங்கேற்க மேற்கொள்ளும் பயணச் செலவு, ஒலிம்பிக் கிராமத்தில் தங்கும் செலவு மற்றும் இதரச் செலவினங்கள் ஆகியவற்றை மேற்கொள்ளும் வகையில் ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 7.9.2004 அன்று நேரில் வழங்கினார்கள். அப்போது, எஸ்.ராஜரெத்தினம் '2004 பாராலிம்பிக் கேம்ஸ்' போட்டிகளில் வெற்றி பெற்று தமிழகத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்று தனது இதயப் பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

தனது பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு தக்க சமயத்தில் நிதி உதவி அளித்து ஏத்தென்ஸ் நகரில் நடைபெறவுள்ள 'பாராலிம்பிக் கேம்ஸ்' போட்டிகளில் பங்கேற்க வகை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தனது நன்றியை எஸ். ராஜரெத்தினம் தெரிவித்துக் கொண்டார். □

# கரூர் மாவட்டத்தில்
# மகளிர் சுகாதார வளாகங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்காக பல சிறப்பான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார். கிராமங்களில் வாழும் ஏழை எளிய குடும்பத்தினர் அவர்களுக்கென்று தனியாக கழிவறை அமைத்துக் கொள்வது கிடையாது. இதனால் கிராமங்களில் பெண்கள் அவதியுறும் நிலையை அறிந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் மகளிர் சுகாதார வளாகங்கள் அமைத்துக் கொடுப்பதற்கான சிறப்பான திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறார். கிராமங்களில் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்தவர்கள் நோயின்றி வாழவேண்டும், சுகாதாரத்துடன் வாழவேண்டும் என்பது தான் இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும். இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் உள்ள கிராமங்கள் சுகாதார மேம்பாடு அடைகின்றன. இத்திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் 214 பெண்கள் சுகாதார வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட சுகாதார வளாகங்கள் ஹட்கோ நிதியுதவி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் மத்திய அரசு நிதி மூலம் கட்டப்பட்டுள்ளன. கரூர் மாவட்டத்தில் 158 ஊராட்சிகளும் 1,000–த்திற்கும் மேற்பட்ட குக்கிராமங்களும் உள்ளன.

கரூர் மாவட்டத்தில் 2001–2002ஆம் நிதியாண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஹட்கோ திட்டங்களில் 82 பெண்கள் மற்றும்



குழந்தைகளுக்கான சுகாதார வளாகங்களும், 2002–2003ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினா் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் முழு சுகாதார இயக்கத்தில் 78 சுகாதார வளாகங்களும் 2003–2004ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினா் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் முழு சுகாதார இயக்கத்தில் 54 சுகாதார வளாகங்களும் ஆக மொத்தம் கரூா் மாவட்டத்தில் 214 சுகாதார வளாகங்களுக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, 207 வளாகங்களின் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு பயனாளிக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 7 சுகாதார வளாகப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

ஒவ்வொரு ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்களிலும் மகளிர் சுய உதவிக் குழுவினரால் பயனாளிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, வங்கி கணக்கு துவங்கி 11–ஆவது நிதிக்குழு மானியத்திலிருந்து மாதம் ஒன்றிற்கு ரூ.1,000/– என்ற விகிதத்தில் வருடத்திற்கு ரூ.12,000/– பயனாளிகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, சுகாதார வளாகத்திற்குத் தேவையான பினாயில், குவளை, பிரஷ், பக்கெட் மற்றும் மின் கட்டணம் போன்ற அனைத்து செலவுகளும் பயனாளிக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு சுகாதார வளாகங்களைப் பயன்படுத்துபவர்களே பராமரிப்புச் செலவுகளை ஏற்று பயன்படுத்துவதால் சுகாதார வளாகங்கள் மிகவும் சுத்தமாக இருக்கின்றன.

இத்திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்த ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் களப்பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளது. மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர், மேற்பார்வையாளர்கள் ஒவ்வொரு கிராமமாகச் சென்று அங்குள்ள உள்ளாட்சி பிரதிநிதிகள், சத்துணவு அமைப்பாளர்கள் ஆகியோரின் உதவியுடன் சுகாதார வளாகங்கள் அமைந்துள்ள ஊராட்சிகளுக்குச் சென்று, பொதுமக்களை சந்தித்து சுகாதார வளாகங்களின் பயன்பாடு பற்றி எடுத்துக் கூறி முழுமையான பயன்பாட்டிற்குக் கொண்டுவர கரூா் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கோ.ராமமூர்த்தி,இ.ஆ.ப., அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல் அனைத்து வளாகங்களையும் முழுமையான பயன்பாட்டிற்குக் கொண்டுவர மாவட்ட ஆட்சியர் தொடர் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

கிராமங்களில் சுகாதார வளாகங்களை மக்கள் முறையாக, முழுமையாகப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். பெண்கள் மாதவிடாய் காலங்களில் பயன்படுத்தும் நாப்கின் மற்றும் துணியினை சுகாதாரமான முறையில் அப்புறப்படுத்த ஒவ்வொரு ஒருங்கிணைந்த சுகாதார வளாகத்திலும் நாப்கின் எரியூட்டும் கருவி பொருத்தப்பட்டு, இதனை பயன்படுத்தும் முறை பற்றி தொண்டு நிறுவனங்கள் மூலம் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் வளாகங்களைப் பயன்படுத்தும் பெண்கள், சுத்தம், சுகாதாரத்தைக் கடைபிடிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சுகாதார வளாகங்களிலிருந்தும் வெளியேற்றப்படும் நீர் வீணாவதைத் தடுப்பதற்கும், சுற்றுப்புறச் சுகாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டும் வளாகத்தைச் சுற்றி தோட்டங்கள் ப்பயனாளிக் குழுக்களால் அமைக்கப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் வெளியூரிலிருந்து வருபவர்கள் இவ்வளாகத்தை விரும்பி பயன்படுத்தும் வகையில் ஒவ்வொரு சுகாதார வளாகமும் அமைந்துள்ளது.

பெண்கள் அனைவரும் மனமுவந்து இந்த சுகாதார வளாகங்களைப் பயன்படுத்தி வருவதால்அவர்களது கிராமம் மிகவும் சுத்தமாக இருப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கிராம சுகாதாரத்திற்கு இத்தகைய வளாகங்கள் உறுதிசெய்துள்ளது. இதனை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சா் அவர்களுக்குக் கிராமப் பெண்கள் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளனர்.

**– எஸ். கண்ணதாசன்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கரூர்.



# விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வு ஊதியம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை**

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்று, சுதந்திரம் அடைவதற்காகப் போராடி சிறையில் அடைக்கப்பட்டு துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களான தங்களுக்கு, தமிழ்நாடு அரசு வழங்கும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியம் வழங்கி உதவிட வேண்டுமெனக் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மனுக் கொடுத்திருந்த சேலம், திருச்சி, நாமக்கல், வேலூர், கோயம்புத்தூர், காஞ்சிபுரம், தேனி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 13 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியம் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்குமாறு வேண்டி கோரிக்கை விடுத்த சென்னை மற்றும் மதுரை மாவட்டங்களைச் சேர்ந்த இரண்டு விடுதலைப் போராட்ட வீரர்களின் மனைவியர்க்கு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வு ஊதியம் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

சேலம் மாவட்டம், ஜாகீர் காமநாய்க்கன்பட்டியைச் சேர்ந்த திரு. ஆர்.இராமகவுண்டர், திருச்சிராப் பள்ளி மாவட்டம் அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த திரு.வே.நாகமலை, நாமக்கல் மாவட்டம், பாண்ட மங்கலத்தைச் சேர்ந்த திரு. எஸ்.தர்மலிங்கம்பிள்ளை, வேலூர் மாவட்டம், கஸ்பா 'ஏ' ஆம்பூரைச் சேர்ந்த் திரு.எம்.ஆர்.சீனிவாசுலு, கோயம்புத்தூர் மாவட்டம் கண்ணம்பாளையத்தைச் சேர்ந்த திரு.பி.கருப்பண்ணன், காஞ்சிபுரம் மாவட்டம், பழைய பெருங்களத்தூரைச் சேர்ந்த திரு.எஸ்.பி.வி.கணேசன் நாயடு மற்றும் தேனி மாவட்டம் குப்பி நாயக்கன்பட்டியைச் சேர்ந்த திரு.ஏ.வி.ராமசாமி, கொடுவிலார் பட்டியைச் சேர்ந்த திரு.பி.ஏ.மாரிமுத்துச்சாமி, அல்லிநகரத்தைச் சேர்ந்த திரு.கே.வி.லட்சுமணன், போடிநாயக்கனூரைச் சேர்ந்த பொ.இராமலிங்கம், அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த திரு.பி.பி.ராமசாமி நாயுடு, சில்லமரத்துப்பட்டியைச் சேர்ந்த திரு.ஆர்.எஸ்.சீனியப்பன், கூடலூரைச் சேர்ந்த திரு.எஸ்.பி.கனகராஜ் – ஆகிய விடுதலைப் போராட்ட வீரர்கள், தாங்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று சுதந்திரம் பெறுவதற்காகப் போராடி சிறையில் அடைக்கப்பட்டு துன்பம் அனுபவித்ததாகவும், அதன் அடிப்படையில் தங்களுக்கு மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியம் வழங்கக் கோரி பல ஆண்டுகளாக கோரிக்கை மனுக்கள் கொடுத்த போதும், தங்களது கோரிக்கை இதுவரை ஏற்கப்படவில்லை என்றும் தெரிவித்து, மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியத்தைத் தங்களுக்கு வழங்கி உதவிட வேண்டும் என்று வேண்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை மனு அளித்திருந்தனர்.

இந்த மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இவர்களது தியாகத்தைப் போற்றி மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியத்தை உடனடியாக வழங்கிட ஆணையிட்டார்கள். இதன்படி, இவர்கள் அனைவருக்கும் ஓய்வு ஊதியமாக மாதம் ஒன்றிற்கு 3,000 ரூபாயும், மருத்துவப் படியாக மாதம் ஒன்றிற்கு 15 ரூபாயும், ஆக மாதந்தோறும் மொத்தம் 3,015 ரூபாய் அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

மேலும், சென்னை மாவட்டம், திருவல்லிக்கேணியைச் சேர்ந்த திருமதி எஸ்.ரங்கநாயகி மற்றும் மதுரை மாநகர் மேலமாசி வீதியைச் சேர்ந்த திருமதி ஆர்.பார்வதி அம்மாள் ஆகியோர், மறைந்த தங்களது கணவன்மார் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று சிறைத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர் எனவும், தங்களுக்கு மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்க வேண்டும் எனவும் கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மனு அளித்திருந்தனர். இம்மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மேற்படி இருவருக்கும் மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்க ஆணையிட்டார்கள். இதன்படி, குடும்ப ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு 1,500 ரூபாயும், மருத்துவப் படியாக மாதம் ஒன்றுக்கு 15 ரூபாயும், ஆக மொத்தம் 1,515 ரூபாய் மாதந்தோறும் விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியமாக அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, சிறையில் அடைக்கப்பட்டு, துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகத்திற்கு மதிப்பளித்து, கௌரவிக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ள இந்த ஓய்வு ஊதியத்திற்கான அரசு ஆணை 11.9.2004 அன்று அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் அம்மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் மேற்காணும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்களின் மனைவியர் ஆகியோரிடம் நேரில் வழங்கப்பட்டது. □

# திருக்கோயிலைச் சீரமைத்து கும்பாபிஷேகம் நடத்திட

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை

சென்னை வேளச்சேரியில் உள்ள அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயில் ஆயிரம் ஆண்டு காலம் பழமை வாய்ந்த மிகவும் பிரசித்தி பெற்ற திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் தற்போது சரியாகப் பராமரிக்கப்படாமல் இருப்பதாகவும், இத்திருக்கோயிலின் திருக்குளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் குப்பைகள் கொட்டப்படும் இடமாக மாறி வருவதாகவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கவனத்திற்குத் தெரிய வந்தது.

பழம்பெருமை வாய்ந்த இத்திருக்கோயிலுக்கு எந்தவித பாதிப்பும் வராமல் பாதுகாக்க வேண்டியதும், உரிய வகையில் சீரமைக்க வேண்டியதும் மிக அவசியம் என்று தெரிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் மனம் குளிரவும், இப்பகுதியில் வாழ்கின்ற பொதுமக்கள் பயன் அடையவும், திருக்கோயிலை நல்ல முறையில் சீரமைத்திட கீழ்க்கண்டவாறு ஆணையிட்டுள்ளார்கள்:

- இந்து சமய அறநிலையத் துறை ஆணையரின் பொதுநல நிதியைப் பயன்படுத்தி, திருக்குளத்தைத் தூர்வாரி மேம்படுத்தும் பணி உட்பட திருக்கோயிலைப் புதுப்பித்துச் சீரமைக்கும் அனைத்துப் பணிகளும் இந்து சமய அறநிலையத் துறை மூலம் நிறைவேற்றப்படும்.
- இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான காலியிடத்தை குடியிருப்பு மற்றும் வணிக உபயோகங்களுக்குப் பயன்படுத்தி திருக்கோயிலின் வருவாயைப் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில், திருக்கோயிலின் தெற்கு கோபுரத்திற்கு எதிரே உள்ள திருக்கோயிலுக்குச் சொந்தமான காலியிடத்தில் ஒரு திருமண மண்டபம் கட்டப்படும்.
- திருக்கோயிலின் பாதுகாப்பு கருதி, பகல் நேரத்திலும் காவல் பணி மேற்கொள்ள ஒரு பாதுகாவலர் நியமிக்கப்படுவார்.

அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயில் திருப்பணிகள் அனைத்தும் 2005–ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முழுமையாக முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

□ □ □

துணி வகைகளில் சிறந்தது...
அதுவே முதலிடமும் வகிப்பது!
உங்கள் கோ-ஆப்டெக்ஸ்!

கோ-ஆப்டெக்ஸ்





- பட்டுப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- பருத்திப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- கூடுதல் தள்ளுபடி விற்பனைத் திட்டம்
- வாடிக்கையாளரை சிறப்பிக்கும் திட்டம்
- மாணவர்களுக்கான ஹாஸ்டல் செட்
- குறைந்த விலையில் பருத்தி பிரிண்டட் சேலைகள் குறிப்பிட்ட சில ஷோரூம்களில் கிடைக்கும்
- வட்டியில்லாத கடன் வசதியை பயன்படுத்திக் கொள்வீர்

**மேலும் விவரங்கள் அறிய அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அனுகவும்.**

Visit us at www.tn.gov.in Visit us at www.cooptex.com

எண்ணமெல்லாம் துணிமணிகள் என்றால்... வாங்குவதெல்லாம் கோ-ஆப்டெக்ஸ்!

# திண்டுக்கல் மாவட்டத்தில்

# வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் நடைபெற்று வரும் பணிகள்

**தி**ண்டுக்கல் மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் ராஷ்டிரிய சாம்விகாஸ் யோஜனா (RSVY) திட்டத்தின் கீழ் 11 கிராமங்களில் ரூ.155.75 இலட்சத்தில் பல்வேறு திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சு. முருகய்யா,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்து விரைவுபடுத்தினார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ராஷ்டிரிய சாம்விகாஸ் யோஜனா (RSVY) திட்டத்தின் கீழ் 23 துறைகளின் வாயிலாக நடப்பாண்டிற்கு ரூ.15 கோடியில் பல்வேறு திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 18.7.2004 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சு. முருகய்யா,இ.ஆ.ப., அவர்கள் வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் இத்திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பணிகளைப் பார்வையிடுவதற்காகவும், ஆய்வு மேற்கொள்வதற்காகவும் சென்றிருந்தார். கசவனம்பட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட அரவன்குளம் அல்லது மருதன்குளத்திலிருந்து குட்டத்துப்பட்டி பஞ்சாயத்திற்கு உட்பட்ட ஆவாரன்குளம் வரையிலான 6.9 கி.மீ. நீளமுள்ள நீர்வரத்து வாய்க்காலின் 5.3 கி.மீ. தூரத்திற்கு முட்களை அகற்றி தூர்வாரும் பணி போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. அரவன்குளத்தின் மொத்த பரப்பு சுமார் 24 ஏக்கராகும். ஆவாரன்குளத்தின் மொத்த பரப்பு சுமார் 32 ஏக்கராகும். இந்த இரண்டு குளங்களினால் பயனடையும் விளை நிலங்கள் 1,625 ஏக்கராகும். சுமார் 75 ஆண்டுகளுக்கு மேலாக தூர்வாரப்படாமல் இருக்கும் இவ்வரத்து வாய்க்காலை மத்திய அரசின் புதிய திட்டமான ராஷ்டிரிய சாம்விகாஸ் யோஜனா (RSVY) திட்டத்தின் கீழ் எடுத்து செப்பனிட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில் இப்பணி ரூ.5.4 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வருகிறது. முதலாவதாக, கந்தசாமிபுரம், சின்னப்பாபுரம், மைலாப்பூர் மற்றும் குட்டத்துப்பட்டி ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் பணிகளை 1 ½ கி.மீ. தூரம் வாய்க்காலில் நடந்து சென்று இயந்திரங்கள் பணியாற்றுவதைப் பார்வையிட்டு வாய்க்காலில் கரைகளை நன்கு அகலப்படுத்துமாறும், அதிக அழுத்தம் உள்ள இடங்களில் அரிப்புகள் ஏற்படா வண்ணம் கற்களைப் பரப்பி பணிகளை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டார்.

மேலும், அப்பகுதியிலுள்ள விவசாயிகளை நேரடியாகச் சந்தித்து இந்த வரத்து வாய்க்கால் செம்மைப்படுத்தப் படுவதால் வாய்க்கால் வழியில் உள்ள ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட விளை நிலங்கள் பயன்பெறும்





என்றும், சில இடங்களில் வரத்து வாய்க்கால்களில் நீர் அழுத்தத்தைக் கட்டுப்படுத்த விவசாயிகள் தானாக முன்வந்து தங்களது பங்கீட்டினையும் அளிக்குமாறும், தாங்களும் அப்பணியில் கலந்து கொண்டு வாய்க்கால் அமைக்கும் பணிகளைச் செம்மையாக முடிப்பதற்கு உதவிடுமாறும் அவர் கேட்டுக் கொண்டார். அப்பகுதி மக்களும் இப்பணிக்குத் தங்களின் முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாகத் தெரிவித்தார்கள்.



பணிகளைப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியதாவது: "ராஷ்டிரிய சாம்விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு குஜிலியம்பாறை மற்றும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியங்களில் 11 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அக்கிராமங்களில் 17 வகையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில இடங்களில் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. குஜிலியம்பாறை ஒன்றியத்தில் கூடலூர், கரிக்காலி, தொழிப்பட்டி, பாளையம், ஆர்.கோம்பை மற்றும் கருங்கல் ஆகிய கிராமங்களிலும், ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் குட்டத்துப்பட்டி, தாமரைக்குளம், கசவனம்பட்டி, பழைய கன்னிவாடி மற்றும் சத்திரப்பட்டி ஆகிய கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இக்கிராமங்களில் சம உயர வரப்பு அமைத்தல், நிலம் உழுதல், நிலம் சீர் செய்தல், குழாய் பதித்தல், பழக்கன்று நடுதல், வெற்றுக்கல் தடுப்பணை, கம்பிவலை தடுப்பணை, சிமெண்ட் சிறிய தடுப்பணை, சிமெண்ட் பெரிய தடுப்பணை, வாய்க்கால் சீரமைத்தல், ஓடை சீரமைத்தல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், ஊருணி அமைத்தல், கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல், சிறு பாசனக் குளம் சீரமைத்தல், கசிவு நீர்க் குட்டை சீரமைத்தல் மற்றும் உலர்களம் அமைத்தல் போன்ற 17 வகையான பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது" என்று கூறினார்.

கோனூர் ஊராட்சியில் சம உயர வரப்பு அமைத்தல், நிலம் உழுதல் மற்றும் பழக்கன்று நடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ள இடத்தினை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மேலும் கூறியதாவது:

"இப்பகுதியில் 300 ஏக்கர் நிலப்பரப்பில் சம உயர வரப்பு அமைத்தல், நிலம் உழுதல் மற்றும் பழக்கன்று நடும் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. சம உயர வரப்பு அமைப்பதற்கு 1 எக்டேருக்கு ரூ.1,800, நிலம் உழுதலுக்கு ரூ.1,200, பழக்கன்றுகள் நடுவதற்கு ரூ.4,000 ஆக மொத்தம் ரூ.8.40 இலட்சம் செலவிடப்பட உள்ளது. இதனால், எதிர்காலத்தில் இப்பகுதி வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் ஒரு மேம்படுத்தப்பட்ட விவசாயப் பகுதியாக மாற்றப்படும் என்பதில்எவ்வித ஐயமும் இல்லை. வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் பணிகள் நடைபெறும் இடங்களில் மக்களின் ஆதரவுடனும், பஞ்சாயத்தின் தீர்மானத்தின் படியும் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. கிராமத்தில் உள்ள மக்களுக்கு வேலை வழங்கும் நோக்குடனும், அனைத்துக் குளங்களுக்கும் நீர் பகிர்ந்தளிக்கும் வகையிலும் உள்ள வரத்து வாய்க்காலின் கடை நிலையில் உள்ள கிணறுகள் பயனடையும் வகையிலும் பணிகள் மேற்கொள்ளப் படுவதோடு அப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கும் நடைமுறைப்படுத்தப்படுவதால் அப்பகுதியைச் சார்ந்த மக்கள் முழு ஒத்துழைப்பு நல்குமாறும், அப்பணிகளில் தங்களையும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்" என்று கூறினார்.

பின்னர், மைலாப்பூர் கிராமத்தில் பொதுமக்கள் தானாக முன்வந்து அளித்துள்ள நிலத்தில் ரூ.2 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட உள்ள கதிரடிக்கும் களம் அமைய உள்ள இடத்தினையும் அவர் பார்வையிட்டார்.

– மு. பழனிசாமி,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திண்டுக்கல்.

மாணவர் பக்கம்

# எல்லாம் அவன் சித்தம்

காட்டிலே ஒரு முனிவர் வாழ்ந்து வந்தார். அவர் இறைவனை நோக்கிக் கடுந்தவம் இயற்றினார். அந்த முனிவரின் எண்ணமெல்லாம், 'தனக்கு மரணமே வரக்கூடாது' என்று இறைவனிடம் வரம் வாங்க வேண்டும் என்பதுதான்.

இறைவன் அவருடைய நோக்கத்தைப் புரிந்து கொண்டார். ஆயினும் தன்னை நோக்கி ஐம்புலன்களை அடக்கி அவர் தவம் செய்து வந்ததைக் கண்டு, 'வரம் தராமல் இருக்க முடியாதே' என்று எண்ணினார்.

'சரி, காலம் வரும்போது பார்க்கலாம்' என்று எண்ணி இறைவனும் அமைதியாக இருந்து விட்டார். முனிவரின் தவம் நாளுக்கு நாள் முற்றியது.

'இனி, இந்த முனிவரைச் சோதிக்கக் கூடாது' என்று கருதிய இறைவன் அவர் முன் தோன்றினார்.

'பக்தா, கண் திறந்து பார், உனக்கு என்ன வரம் வேண்டும்?' என்று கேட்டார்.

முனிவர் இறைவனைக் கண்டு மகிழ்ந்தவராய், 'இறைவா எனக்கு மரணம் இல்லாப் பெருவாழ்வு வேண்டும்!' என்று கேட்டுக் கொண்டார்.



'அது இயலாத காரியம். பிறந்தவர்கள் இறந்தே தீர வேண்டும்!' என்று உறுதியாகக் கூறினார் கடவுள்.

முனிவர் யோசித்தார்.

'சரி, சாகா மருந்து என்று சொல்லப்படுவது தேவ அமிர்தம். அதைக் கேட்போம்!' என்று தீர்மானித்தார்.

'எனக்குத் தேவாமிர்தம் வேண்டும்!'என்றார் அவர்.

இறைவன் இப்போது சிந்தித்தார்.

'இவனுக்கு அமிர்தத்தைத் தந்தால் இவனால் அதை அருந்தத்தக்க அளவு நல்லதிர்ஷ்டம் இருக்கிறதா?'

'இல்லை' என்று தோன்றியது.

'சரி, இவன் அனுபவித்தாலும் சரி, அனுபவிக்காவிட்டாலும் சரி, இவன் கேட்ட வரத்தைத் தருவோம்', என்று எண்ணி ஒரு சின்னத் தங்கக் குடத்தில் அமிர்தத்தை வரவழைத்துக் கொடுத்தார்.

அதை முனிவர் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டார். அப்போது இறைவன் –

'அன்பனே! இந்தக் குடத்தை நீ தரையில் வைக்கக் கூடாது. நேராக அருகில் உள்ள சிவாலயம் எங்காவது சென்று இதை நீ குடி! உன் ஆசை நிறைவேறும்!' என்று கூறி மறைந்தார்.

முனிவர் மிகவும் மகிழ்ந்தார்.

காட்டிற்குள் பாழடைந்த சிவாலயம் ஒன்று இருந்தது. அங்கே வேகமாக நடக்கத் துவங்கினார்.

நீண்ட நாட்களாகத் தவம் இருந்ததால் அவருள் தாகம் பெருகியது. 'அருகிலிருந்த நீரோடையிலிருந்து தாகத்தைத் தணித்துக் கொள்ளலாம்' என்று அவர் எண்ணினார். 'ஆனால் அமிர்தக் குடத்தை என்ன செய்வது?'

அப்போது அவ்வழியே ஒரு மனிதன் வந்தான்.

'அவனிடம் அமிர்தக் குடத்தைக் கொடுத்துத் தாகத்தைத் தணித்துக் கொள்ளலாம்' என்று அவர் எண்ணினார். 'ஆனால் அமிர்தம் என்று சொன்னால்அந்த மனிதன் தான் நீர் அருந்தும் வேளையில் அதைக் குடித்து விட்டால் என்ன செய்வது?' என்று எண்ணினார்.

'எனவே இந்தக் குடத்தில் இருப்பது கொடிய விஷம்! ஜாக்கிரதை! நான் நீர் அருந்தி வரும் வரை இதை வைத்திரு!' என்று சொல்லி அந்த மனிதனிடம் கொடுத்தார்.

அதை அந்த மனிதன் பெற்றுக் கொண்டான். முனிவர் நீர் அருந்திவிட்டு வந்து குடத்தைப் பெற கையை நீட்டினார். அந்த மனிதனும் குடத்தைக் கொடுத்தான். குடம் காலியாக இருந்தது.

'ஸ்வாமி, நான் வாழ்க்கையை வெறுத்துத் தற்கொலை செய்து கொள்ள வந்தேன். எனக்குக் கடுமையான நோய்! எனவே இந்த விஷத்தைக் குடித்துவிட்டேன். ஆனால் ஆச்சர்யம் நோயே பறந்து விட்டது!' என்றான்.

முனிவர் நினைத்தார். கடவுளின் விருப்பத்துக்கு மாறாக எதையும், எவரும் பெற முடியாது.

எல்லாம் அவன் சித்தம்.

– *"சிறுவர்களுக்கான சீர்திருத்தக் கதைகள்" நூலிலிருந்து.*



தமிழரசு
R.N.I.NO.21446/70
RGN.NO.TN/PMG/(CCR)836/03-05 WPP-518

